03
கொள்கை அரசியலின் ஆரம்பம் அமர்க்களமானதாக அமைந்ததில்லை



மொட்டு மலர்கிறது! கட்டு அவிழ்கிறது!!
05 ஐ.தே.க.வும் முஸ்லிம்களும்






மீள்பார்வை
මීල්පාර්වෙ
Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 388 • 16 பெப்ரவரி 2018 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1439 • விலை 40.00




# முஸ்லிம் பிரதிநிதித்துவத்தில் வீழ்ச்சி



புதிய வட்டார எல்லைப் பிரிப்பின் பின்னர் நடைபெற்ற முதலாவது உள்ளூராட்சித் தேர்தலில் எதிர்பார்க்கப்பட்டது போலவே முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைவடைந்துள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் மூலம் 4486 ஆக இருந்த உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை 8825 ஆக இரட்டிப்பாக்கப்பட்ட போதிலும் முஸ்லிம் களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்காமைக்கு வட்டாரப் பிரிப்பில் முஸ்லிம்களுக்கு நேர்ந்த அநீதிகளும் காரணமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

(பக். 15)

## இலங்கையிலிருந்து லெபனான் செல்லும் சமாதானப் படை



இலங்கையிலிருந்து லெபனானுக்குச் செல்லும் 12 ஆவது சமாதானப் படைக்கு கொடிகளை கையளிக்கும் நிகழ்வு அண்மையில் மீரிகம, அம்பேபுஸ்ஸ சிங்க ரெஜிமென்ட் மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

13 படையணிகளின் 10 அதிகாரிகளும் 140 படைவீரர்களும் லெப னான் செல்லும் 12 ஆவது சமாதானப் படையணியில் அடங்குகின்றனர். குக்குலேகங்க சமாதான நடவடிக்கைப் பாசறையில் பயிற்சி எடுத்துக் கொண்டு இவர்கள் இம்மாதம் 18,19 ஆம் திகதிகளில் லெபனான் நோக்கிப் பயணிக்கவுள்ளனர். லெப்டினன்ட் கேர்ணல் வசந்த ஹேவகே இந்த 12 ஆவது சமாதான அணியின் கட்டளை அதிகாரியாக கடமையாற்றுவார்.

## அரசாங்கத்தின் செயற்திறன் இன்மையே பின்னடைவுக்குக் காரணம்



கூட்டரசாங்கம் நடத்திய இரண்டு பிரதான கட்சிகளதும் செயற்திறனில் மக்கள் நம்பிக்கை இழந்தமையே ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பின்னடைவுக்குக் காரணம் என்பதை இரண்டு கட்சிகளதும் அமைச்சர்கள் தத்தமது தொகுதிகளில் தோல்வியடைந்தமை எடுத்துக் காட்டுகிறது.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட தேசிய ஐக்கியத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தின் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது அத்தனகல்ல தொகுதியில் தோல்வி அடைந்தார். அதேபோல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தனது கலாவெவ தொகுதியில் தோல்வியடைந்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் அமைச்சர்களான மஹிந்த சமரவீர (தங்கல்ல), அனுர பிரியதர்ஷன யாப்பா (கடுகம்பொல), (பக். 15)

## பாலியல் நோயாளர்களில் பெரும்பாலானோர் 15-25 வயதுக்குட்பட்டவர்கள்




நாட்டில் விபச்சாரத் தொழிலில் 45,000 பெண்கள் ஈடுபட்டிருக்கின்றனர். இவர்கள் மூலமாக ஒரு நாளைக்கு மூன்று இலட்சம் ஆண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர் என குருநாகலை போதனா வைத்தியசாலையின் பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் வைத்திய நிபுணர் எச்.ஏ.சீ.டப். ஹதுருஸிங்க தெரிவித்துள்ளார். (பக். 15)

## நாலரை வருடங்களாகும் வரை பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது



அரசியலமைப்பின்படி நாலரை வருடங்கள் முடிவதற்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்தார்.

எந்த வழியிலேனும் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான முன்மொழிவுகள் ஏதேனும் முன்வைக்கப்பட்டால் அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அரசியலமைப்பின் புதிய (19 ஆவது) திருத்தத்தின்படி ஜனாதிபதியோ பிரதமரோ அன்றி பாராளுமன்றத்தை பாராளுமன்றமே மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கலைக்க முடியும். 225 பேர் கொண்ட இலங்கைப் பாராளுமன்றத்தில் தற்போது 106 பேர் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களாக உள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் ஊருக்காக உழைக்கும் ஒருவரைத் தெரிவு செய்வதற்கே நடக்கின்றதேயன்றி, பாராளுமன்றத்தை மாற்றுவதற்கல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்



தேர்தலுக்குப் பின்னர் சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபை ஒன்றைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி எம்மிடம் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளித்துள்ளார். இந்த வாக்குறுதியை நிறைவேற்றுத் தரும்படி கோரி அடுத்த கட்டமாக நாங்கள் ஜனாதிபதியைச் சந்திக்கவிருக்கின்றோம் என சாய்ந்தமருது -மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் வை.எம்.ஹனீபா தெரிவித்தார்.

(பக். 15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி மூலமான நோய்த்தடுப்பு முறை

## தேசிய சூராசபையின் வழிகாட்டுதல்

தடுப்பூசி (Vaccination) மூலமான நோய்த்தடுப்பு முறை சம்பந்தமாக மருத்துவத் துறையின் நிலைப்பாடு, மற்றும் இஸ்லாத்தின் அங்கீகாரம் என்பன பற்றி சமூகத்தில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை தொடர்பாக தேசிய ஷூரா சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பில் ஆராயவென தேசிய சூறா சபையினால் அதன் தலைவர் தாரிக் மஹ்மூத் அவர்களது தலைமையில் விஷேட குழுவொன்று நியமிக்கப்பட்டது. அக்குழுவினர் தேசிய ஷூரா சபையிலுள்ள உலமாக்கள், பேராசிரியர் ரிஸ்வி ஷரீப் தலைமையிலான வைத்திய நிபுணர்கள், செரண்டிப் வைத்தியர்கள் மன்றத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடன் 30.12.2017 அன்று ஆலோசனை அமர்வொன்றை நடாத்தினர். அதன் போது பகிரப்பட்ட கருத்துக்களின் வெளிச்சத்தில் இந்த வழிகாட்டல் தயாரிப்பட்டுள்ளது.

அந்த கலந்துரையாடலில் பின்வருவோர் கலந்து கொண்டனர்:

1. VidyaJyothi, Prof. M.H.Rezvi Sheriff, FRCP(Lon), FRCP (Edin), FRACP, FCCP, FSLCGP,FNASS Consultant Physician.
2. Dr. M.R.Anver, MBBS (CMB), MD (CMB), FRCP (Lon), FCCP Consultant Physician.
3. Dr. S.F.L. Akbar, MBBS, MS, MMSOG, SCOD, FRSOG, Senior Consultant, Obstetrics and Gynaecology.
4. Dr. HashirAriff, MBBS (Lon), DCH (UK), CCST (UK), FRCPCH (UK), Consultant Paediatrician
5. Dr. Mohammed Rishard, MBBS, MD(O&G), MRCOG(UK), Consultant Obstetrician and Gynaecologist, Senior lecturer, Faculty of Medicine, University of Colombo.
6. Dr. MHM AmeenIzzath, MBBS, DLM, MD. In Forensic Medicine Senior Registrar in forensic medicine GH Kandy.
7. Dr. M.H.M.Naseem MD (Villa Clara-Cuba), MSc (Disaster Management) University of Peradeniya- Sri Lanka Medical officer of Health-Udapalatha, Gampola
8. Dr. M.G.Saiful Islam, MBBS (Cey), M.Sc. (Nutrition). Gen. Practitioner
9. Dr. W.M.Asmir, MBBS (SL) Reading PG, Dip. In Microbiology
10. Dr. M.A.AbdulRakeesthu, MBBS, CCA Gen. Practitioner
11. Dr. Ahmed Shiyam, MBBS
12. J.Tariq Mahmud - President, NSC
13. Sheikh S.H.M.Faleel (Naleemi) -Vice President, NSC
14. RizaYehya - Vice President, NSC
15. Eng. MafeelFarook - AGS, NSC
16. Sheikh Ziyard Ibrahim (Ghafoori) - Treasurer, NSC
17. MoulaviThasleem(Bari)-ExCo Member, NSC
18. Rasheed M.Imthiyaz - ExCo Member, NSC
19. M.T.Thahasim - ExCo Member, NSC

சுத்தமானதும் சுகாதாரமானதுமான நடத்தைகள் மூலம் நோய் மற்றும் உடல் நலக் குறைவிலிருந்து தனி மனிதர்களையும் சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கு அல்குர்ஆனும் சுன்னாவும் சிறந்த முறையில் வகுத்துத் தந்துள்ள கருத்துக்களை இந்த வழிகாட்டல் உள்ளடக்கியிருக்கிறது.

அதேவேளை தடுப்பூசியினூடாக நோயெதிர்க்கும் நவீன முறை, கடந்த 200 வருடங்களுக்கு மேலாக தவிர்க்கக் கூடிய நோய் (Preventable diseases) களினால் பீடிக்கப்படுவதிலிருந்து சிறந்த பாதுகாப்பை வழங்கி வருகிறது. இஸ்லாமிய உம்மத்தின் மார்க்க அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், மருத்துவர்கள் போன்றோர் தடுப்பூசி மூலமாக இத்தகைய நோயெதிர்ப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவது மருத்துவ ரீதியாகப் பயனுடையது எனவும், மார்க்க ரீதியாக அனுமதிக்கப்பட்டது எனவும் சுட்டிக் காட்டியுள்ள விடயங்கள் இந்த வழிகாட்டலில் அடங்கியுள்ளன.

ஒரு சமூகம் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில் அலட்சியம் காட்டுமானால் அந்த சமூகத்தில் இருக்கும் தனிநபர்களால் அந்த சமூகத்துக்கும் அந்த சமூகத்தால் அங்கிருக்கும் தனிநபர்களுக்கும் தீங்குகள் நிகழும் என்று மருத்துவ உலகில் நிறுவப்பட்ட உண்மைகள் மூலமும் ஊர்ஜிதம் செய்ய முடியும் என அன்றைய தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. எனவே, அப்படியான ஒரு சூழ்நிலை உருவாகாமலிருக்க தடுப்பூசி ஏற்றிக் கொள்ளும்படி தேசிய சூறா சபை ஆலோசனை வழங்குகிறது.

பெற்றோர் பிள்ளைகளுக்கு தடுப்பூசி ஏற்றத் தவறுவது அந்தப் பிள்ளைகளது வாழ்வை அதிகம் பாதிக்கும். ஆனால், பிள்ளைகளை நல்ல முறையில் பராமரிக்கும்படி அல்குர்ஆன் வலியுறுத்துவதோடு, இதனை அலட்சியப்படுத்தும் பெற்றோரையும் கண்டிக்கிறது.'' எவர்கள் அறிவில்லாமல் மூடத்தனமாக தம் குழந்தைகளைக் கொலை செய்தார்களோ; இன்னும் தங்களுக்கு அல்லாஹ் உண்ண அனுமதித்திருந்ததை அல்லாஹ்வின் மீது பொய் கூறி (ஆகாதென்று) தடுத்துக் கொண்டார்களோ, அவர்கள் வழிகெட்டு விட்டனர், நேர்வழி பெற்றவர்களாக இல்லை. (அல் அன்ஆம்:140) அந்த வகையில் தனதும் தனது பிள்ளைகளதும் உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதும் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதும் ஒவ்வொரு முஸ்லிமினதும் பொறுப்பாகும்.

தடுப்பூசி மூலம் நோயெதிர்ப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ஆதரவான மார்க்க ரீதியான அனுமதி மற்றும் மருத்துவ ரீதியான அங்கீகாரம் ஆகியவற்றை பின்வரும் வழிகாட்டுதல்கள் நிறுவுகின்றன:

### இஸ்லாமிய நோக்கு

தடுப்பூசி மூலமான நோயெதிர்ப்புச் செயற்பாடு இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனை பின்வரும் வசனங்களது கருத்துக்கள் உணர்த்துகின்றன.

**அல்குர்ஆன்:**

'இதன் காரணமாகவே, ''நிச்சயமாக எவன் ஒருவன் கொலைக்குப் பதிலாகவோ அல்லது பூமியில் ஏற்படும் குழப்பத்தை(த் தடுப்பதற்காகவோ) அன்றி, மற்றொருவரைக் கொலை செய்கிறானோ அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான்; மேலும், எவரொருவர் ஓராத்மாவை வாழ வைக்கிறாரோ அவர் மக்கள் யாவரையும் வாழ வைப்பவரைப் போலாவார்'' என்று இஸ்ராயீலின் சந்ததியினருக்கு விதித்தோம். (5: 32)

எனவே, நோயெதிர்ப்பைச் செய்யாமல் விடுவதன் மூலம் ஓர் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவது பாரதூரமான குற்றம் என்பதை இவ்வசனம் உணர்த்துகிறது.

**அல்ஹதீஸ்:**

''அல்லாஹ் எந்தவொரு நோயையும் அதற்கான நிவாரணியுடனன்றி இறக்கி வைக்கவில்லை.''(ஸஹீஹ் அல்- புகாரி -5678)

எனவே, நோய் வந்த பின்னர் அதற்கான மருந்தை எடுப்பது போலவே அந்த நோய் வராமலிருக்க தக்க மருந்தை எடுக்கவும் முடியும்.தடுப்பூசியை அப்படியான ஒரு மருந்தாகக் கருத முடியும்.

**முன்னெச்சரிக்கை :**

நபிகளார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்;

1.'' நீ சிங்கத்திடமிருந்து வெருண்டோடுவதைப் போல குஷ்டரோகியிடமிருந்து விலகி ஓடுவாயாக!.(ஸஹீஹ் அல்புகாரி-5707)

2.'ஒரு பிரதேசத்தில் கொள்ளை நோய் இருப்பது குறித்து நீங்கள் கேள்விப்பட்டால், அங்கு பிரவேசிக்காதீர்கள்; நீங்கள் அதில் இருக்கின்ற சமயத்திலே அந்த நோய் ஏற்பட்டிருந்தால், அங்கிருந்து போகாதீர்கள்.' (ஸஹீஹ் அல்புகாரி-624)

3.''நோயால் பாதிக்கப்பட்ட (ஆடுகள், பசுக்கள், ஒட்டகங்கள் போன்ற) கால்நடைகளை ஆரோக்கியமான கால்நடைகள் இருக்கும் இடத்துக்கு நீங்கள் ஒரு போதும் கொண்டுவர வேண்டாம்.''(ஸஹீஹ் அல் புகாரி 5770)

என்ற இந்த நபி மொழி ஆரோக்கியமான நபருடன் நோயாளியை வைக்கலாகாது என்ற கருத்தை தருவதுடன் நோய்வருமுன் காப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் கடுமையாக வலியுறுத்துகிறது.'ஒருபோதும் அப்படி செய்ய வேண்டாம்' என்ற கருத்தைத் தரும் ''லா யூரிதன்ன'' என்ற சொல்லை நபி (ஸல்) இங்கு பிரயோகித்திருக்கிறார்கள்.

### இஸ்லாமிய மற்றும் மருத்துவ நிபுணர்களின் பார்வை

பல நவீன கால இஸ்லாமிய சிந்தனையாளர்களது கருத்துப்படி தடுப்பூசி அனுமதிக்கப்படுகிறது.சட்ட வல்லுநர்கள் கூட மகாஸித் அல்-ஷரீஆ எனப்படும் இஸ்லாமிய சட்டத்தின் ஐந்து நோக்கங்களை தடுப்பூசி பூர்த்தி செய்கின்றது என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

1. மதத்தைப் பாதுகாத்தல் (ஹிப்ஃஸ் அல்-தீன்
2. வாழ்வைப் பாதுகாத்தல் (ஹிப்ஃஸ் அல்-நப்ஃஸ்)
3. சந்ததியைப் பாதுகாத்தல் (ஹிப்ஃஸ் அல்-நஸ்ல்
4. அறிவாற்றலைப் பாதுகாத்தல் (ஹிப்ஃஸ் அல்-அக்ல்)
5. செல்வத்தைப் பாதுகாத்தல் (ஹிப்ஃஸ் அல்-மால்)

(http://www.vocfm.co.za/debate-religious-permissibility-vacc...)

தொற்றுநோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி ஏற்றுவதனை தாருல் இப்ஃதா அல் மிஸ்ரிய் யாஹ், மஜ்ம உல்பிக்ஹில் இஸ்லாமி, (www.atwa.islamonline.net/1111)

மலேசியாவின் தேசிய ஃபத்வா குழு போன்ற இஸ்லாமிய சட்ட பீடங்களும் ஷெய்க் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ், அஷ்ஷெய்க் கலாநிதி அலி ஜும்ஆ போன்ற பிரபலமான பல உலமாக்களும் ஊக்கப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முஹம்மத் அலி அல் பார் அவர்கள்'அஹ்காம் அத்ததாவி வல் ஹாலாத் மய்ஊஸ் மின்ஹா வ களிய்யதி மௌதிர்ரஹ்மா' என்ற தனது ஆய்வில் மக்களது சம்மதம் இல்லாமலேயே மக்களின் நலனுக்காக தடுப்பூசி ஏற்றுவதை கடமையாக்குகின்ற அதிகாரம் இஸ்லாமிய அதிகார பீடங்களுக்கு இருப்பதாக குறிப்பிடுகிறார்.

### வேறு சில அறிஞர்களின் கருத்துக்கள்

1) சவூதி அரேபியாவின் முஃப்தி - ஷைக் அப்துல் அஸீஸ் பின் பாஸ் (ரஹ்) அவர்களிடம், நோய் ஒன்று ஏற்படுவதற்கு முன்னரே தடுப்பூசி போன்ற மருந்துகள் வழங்கப்படுவது தொடர்பான தீர்ப்பு என்ன என்பது தொடர்பில் கேட்கப்பட்டது. அதற்கு அவர், ''நோய் ஏற்படும் என்ற அச்சம் இருந்தால், அதற்கெதிராக நிவாரணம் பெற்றுக் கொள்வதில் எந்தத் தவறுமில்லை. ஏனென்றால் தொற்றுநோயோ அதற்குரிய காரணியோ தொடர்ந்தும் இருந்தால் அவை நோயை ஏற்படுத்த முடியும். ரஸூல் (ஸல்) அவர்களின் பின்வரும் ஸஹீஹான ஹதீஸின்படி, வரலாமென்று அஞ்சப்படுகின்ற நோயிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக மருத்துவம் செய்வதில் எந்தத் தவறுமில்லை.

''எவரொருவர் காலையில் மதீனாவின் ஏழு அஜ்வா பேரீச்சம்பழங்களை சாப்பிடுகிறாரோ, அவர் மந்திரங்கள் அல்லது விஷங்களால் எந்தவிதமான பாதிப்புக்குமுட்பட மாட்டார். (அல் புகாரி-5445, முஸ் லிம்-2047)

ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கு முன்னரே அதனை தடுத்துக்கொள்ளும் ஒரு முயற்சியாக இது அமைகின்றது. இந்த வகையில் நோய் பற்றிய அச்சத்தின் காரணமாக ஒருவர் தனது பிரதேசத்திலுள்ள தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக முன்கூட்டியே தடுப்பூசி ஏற்றிக் கொள்வது, அது ஒரு பாதுகாப்பு முயற்சி என்ற வகையில், பிழையானதல்ல. (அஷ்ஷெய்க் இப்னு பாஸ் அவர்களின் பத்வா, 6/21,20276; குழந்தைப் பருவ நோய் தடுப்பு மற்றும் தடுப்பூசிகளை வழங்குதல் தொடர்பாக தீர்ப்பு வழங்குதல், பிரசுரிக்கப்பட்ட திகதி: 2003-03-11) www.islamqa.info/en/20276

2) முஃப்தி ஸுஹைல் இப்னு ஆரிஃப், அமெரிக்காவின் சிகாகோவில் உள்ள தாருல் இஃப்தாவின் உதவியாளர், எதிர்கால நோய்கள் அல்லது நோய்களுக்கான சாத்தியக்கூறுகளுக்கு எதிராக தடுப்பூசிகள் எடுத்துக் கொள்ளுதல் மூலம் ஒருவர் தன்னை (அல்லாஹ்வின் விருப்பப்படி) தற்காத்துக்கொள்ள அனுமதியிருப்பதாகக் கூறியுள்ளார். (https://islamqa.org/hanafi/askimam/102487)

(3) ஷேக் யூசுப் அல்-கர்ழாவி பின்வருமாறு கூறுகிறார்:



''சமீபத்தில் மஸ்கட்டில் நடைபெற்ற இஸ்லாமிய ஃபிக்ஹ் கவுன்ஸிலின் சில நம்பகமான அறிஞர்களுடன் இணைந்து நான் பின்வருவனவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறுகிறேன். ''போலியோ தடுப்பூசி ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் உட்பட, உலகம் முழுவதும் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருவதோடு, அது நோய்களை ஒழிப்பதில் சிறந்த தாக்கம் செலுத்தக் கூடியதாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அல்-அஸ்ஹர் பல்கலைக் கழகம், அல்-ஃகரவ்யீன் பல்கலைக்கழகம், அல்லது எந்த புனிதத்தலங்களினதும் தலை சிறந்த கல்வியலாளர்கள் எவரும் , அத்தகைய தடுப்பு மருந்தின் பயன்பாட்டுக்கு எதிராக கருத்துத் தெரிவிக்கவில்லை.

**முழு விவரணத்திற்கு வாசிக்கவும்:**

http://www.islamopediaonline.org/fatwa/what-islamic-point-view-regarding-vaccinating-children-against-specific-diseases

https://fatwa.islamonline.net/11111

4. முப்தி ராபி உஸ்மானி - முப்தி அஸாம், தாருல் உலூம் இஸ்லாமிய்யா, கராச்சி, பாகிஸ்தான் ''தங்களது பிள்ளைகளுக்கு போலியோ தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில் விஷேட கரிசனை செலுத்துமாறு நான் முஸ்லிம் சகோதரர்கள், சகோதரிகள், தாய்மார், பிள்ளைகள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன். போலியோ வாழ்நாளையே முடமாக்கும் ஒரு நோய், அது தொற்றுநோயாகவும் இருப்பதனால் அது அடுத்தவர்களுக்கும் பிரச்சினையானதாக மாறும். ஆகவே போலியோ பீடிப்பதிலிருந்து நிவாரணம் பெறுவது அத்தியாவசியமானதாகும்.'' (https://youtu.be/1vAZBKbeg8U

### தடுப்பூசிகளில் உள்ள ஹராமான உள்ளீடுகள் பற்றிய பிரச்சினை

தடுப்பூசிகள் மார்க்க ரீதியாக தடை செய்யப்பட்ட (ஹராம்) சேர்க்கைப் பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்படுவதாக வாதிக்கப்படுகிறது. மருத்துவ அறிவியலுக்கான இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியத்தின் உலமாக்கள், பன்றி மூலமான உற்பத்திகள் ஜெலட்டினாக உருமாற்றப்பட்டால், பன்றி ஜெலட்டின் அடங்கிய தடுப்பூசியை ஒரு முஸ்லிம் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூறியுள் ளனர். www.who.int/.../vaccine_quality/englishtranslation.pdf...

இருப்பினும், தடுக்கப்பட்ட உள்ளீடுகள் அடங்கியவைகளைத் தவிர வேறு எந்தவிதமான சிகிச்சையும் இல்லாத நிலையில், அவசரநிலை (தரூராத்) என்ற அடிப்படையில் தடை செய்யப்பட்ட பொருளை பிரயோகிக்க இஸ்லாம் அனுமதி அளிக்கிறது.இது இஸ்லாமிய சட்டவியல் முறைகளை அடிப்படையாகக் கொண்டது. (தருரத்- நிர்ப்பந்தம் தடைசெய்யப்பட்டவற்றை ஆகுமாக்கும்.) (http://www.iais.org.my/e/attach/2016/28)

உணவு மற்றும் மருந்துகளில் பன்றியின் மூலப்பொருட்களின் பயன்பாடு தொடர்பான பிரச்சினை பழமையான ஒன்றாகும். கலாநிதி யூசுப் அல்-கர்ளாவி தலைமையிலான, உலகில் பல புகழ்பெற்ற முஸ்லிம் அறிஞர்களைக் கொண்ட பத்வா மற்றும் ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய கவுன்சில் (ECFR) பின்வரும் வாதத்தை முன்வைக்கின்றது.

பன்றியுடன் சம்பந்தமான டிரிப்சின் (நொதியங்கள்) அசுத்தமானவை என்ற கருத்தில் தவிர்ந்து கொள்வதாக இருந்தால், அவை தடுப்பூசியாக மாறும் நிலையில் முற்றிலும் வடிகட்டப்பட்டு, இறுதியாக தடுப்பூசியில் அதன் எந்த தடயமும் இல்லாமல் செய்யப்பட்டே செலுத்தப்படுகின்றன. அதேவேளை நிர்ப்பந்தம் தடைசெய்யப்பட்டவற்றை ஆகுமாக்கும் என்ற இஸ்லாமிய சட்ட விதியையும் நாம் கவனத்திற் கொள்ள முடியும். www.iais.org.my/.../28JUL2016_va.../Vaccination&Badri.

### தடுப்பூசிகளின் பக்க விளைவுகள் பற்றி

ஒருவரின் உயிரைப் பறிக்கக் கூடிய, அல்லது ஒருவரது ஆரோக்கியத்தில் பாரிய தீங்கை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளுடன் ஒப்பிடும் போது, தடுப்பூசியினால் ஏற்படக் கூடுமான விளைவுகள் ஒரு பொருட்டாகக் கருதப்படக் கூடியனவல்ல. அத்தோடு இது அவசியமான காரணங்களால் அனுமதிக்கப்படவும் முடியும். அனுமதிக்கப்படாத பொருட்களைக் கொண்ட தடுப்பூசிகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என எவரேனும் வலியுறுத்தினால், அதற்கான மாற்றீடுகளை அவர்கள் முன்வைப்பதுடன் அவற்றை கண்டுபிடித்து மக்களது பாவனைக்காகத் தர வேண்டும்.

### தடுப்பூசி மூலம் நோய் எதிர்ப்பு - சில மருத்துவ உண்மைகள்

நோய்த் தொற்றலில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கும், நிர்ப்பீடணம் பெறுவதற்கும் பொதுவாக தடுப்பூசி மூலமாக ஒருவர் மேற்கொள்ளும் செயன்முறை தான் நோயெதிர்ப்பு எனப்படுகிறது., திறனாகவும் பாதுகாப்பாகவும் எதிர்வினையாற்றக் கூடிய தற்காப்பு நோயெதிர்ப்புச் சக்திகளை உடலில் தூண்டும் வகையில் சீராக வடிவமைக்கப்பட்ட சிக்கலானதொரு உயிரியல் விளைபொருளே தடுப்பூசியாகும்.

தடுப்பூசி கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கையில் பெரியம்மை நோய்க்கு எதிரானதடுப்பூசி 1886ஆம் ஆண்டுகளிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1949 இல் ஆஇள உம் 1961 இல் DTP உம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1962 இல் ஙீகங வழங்கப்பட்டது. நோயெதிர்ப்பை மேம்படுத்தும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) நிகழ்ச்சித்திட்டத்தை (EPI) அறிமுகப்படுத்து வதற்கு முன்னரே இந்தத் தடுப்பு மருந்துகளை இலங்கை அறிமுகப்படுத்தியுள்ளது. 1984 இல் சின்னம்மை நோய்க்கான தடுப்பூசி தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தில் (NIP) சேர்க்கப்பட்டது. வைரஸ் எதிர்ப்புச் சிகிச்சை இல்லாத ஒரு நோயாக போலியோ (Poliomyelitis) உலகை அச்சுறுத்தி வந்தது. போலியோ தடுப்பூசியின் பரவலான பயன்பாடு உலகளவில் போலியோ நோயை கட்டுப்படுத்தியது. இலங்கையில், போலியோமிலீட்டிஸின் நோய் பற்றிய இறுதியான பதிவு 1993 இல் பதியப்பட்டிருந்தது.

இன்று, கிட்டத்தட்ட 30 வகையான தொற்று நோய்களுக்கு எதிரான பல தடுப்பூசிகள் புழக்கத்தில் உள்ளன. இன்று வரையான முக்கியமான ஆரோக்கிய முற்காப்பு இடையீடுகளை இவை வழங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்கக் கூடிய தடுப்பூசிகளைப் பெறுகின்றனர்.

அடிப்படையில், உடம்பில் தொற்றுகின்ற நுண்ணங்கிகளுடன் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ ஒத்திசைகின்ற கூறுகளை இந்தத் தடுப்பூசிகள் கொண்டுள்ளன. வெற்றிகரமான தடுப்பூசியின் மிக முக்கிய விளைவு அது நீண்டகாலம் உயிர்வாழக்கூடிய கலங்களை உற்பத்தி செய்வதாகும். இவை விரைவாகவும் கூட்டாகவும் தொழிற்பட்டு, உள்நுழைந்த தொற்றுக்களை விரைவில் அழித்து விடுகின்றன. இவற்றோடு தடுப்பூசி தொடர்பான சில கேள்விகளும் அதற்கான பதில்களும் இந்த வழிகாட்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நேசன்

# கொள்கை அரசியலின் ஆரம்பம் அமர்க்களமானதாக அமைந்ததில்லை

சுதந்திரமடைந்து 70 வருடங்களிலும் இலங்கை இரு கட்சி ஆட்சி முறையினாலேயே தொடர்ந்தும் ஆளப்பட்டு வருகிறது. தேர்தல்களில் வாக்களிப்பதென்றால் அது ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியாகவோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாகவோ இருந்தால் தான் தாம் வாக்களித்து விட்டோம் என்ற உணர்வு மக்களுக்கு வரும். அந்தளவுக்குப் புரையோடிப் போனதாகத்தான் நீலமும் பச்சையும் வாக்காளர்களை ஆக்கிரமித்திருக்கின்றன.

இரண்டு கட்சிகளுமே மாறி மாறி நாட்டைக் கொள்ளையடித்தது மட்டுமல்லாமல் சுதந்திரத்தின் போது நாடு அடைந்திருந்த முன்னேற்றத்திலிருந்து நாட்டை படிப்படியாக வீழ்ச்சியை நோக்கி நகர்த்திச் சென்றன. இந்த நிலையில் தான் நாட்டில் பல கிளர்ச்சிகளை நடத்திய மக்கள் விடுதலை முன்னணியினர் மூன்றாவது சக்தியாக இலங்கை அரசியலில் பிரசன்னமானார்கள்.

1981 இல் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் முதன் முதலாக நடத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் மூலமாக அரசியலில் பிரவேசித்த ஜேவிபி, 13 அங்கத்தவர்களை வென்றது. இதைத் தொடர்ந்து 1982 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர் ஜயவர்தன (3,450,811 வாக்குகள்), ஹெக்டர் கொப்பேகடுவ (2,548,438 வாக்குகள்) ஆகியோருடன் போட்டியிட்ட ஜேவிபி அபேட்சகர் ரோஹன விஜேவீர 273,428 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். அதுமுதல் நாட்டின் கொள்கைவாத அரசியல் கட்சியாக ஜேவிபி மக்களிடையே அபிமானம் பெற்றது. இதுவே இலங்கை அரசியலில் மூன்றாவது சக்தியின் பரிணாமமாக அமைந்தது.

இலங்கை முஸ்லிம் அரசியலும் இதே தொடரில் தான் பயணிக்கிறது. 1981 இல் ஓர் இளம் சட்டத்தரணியினால் காத்தான்குடியில் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1986 இல் நேரடி அரசியலுக்கு வருகிறது. அன்று முதல் முஸ்லிம் தனித்துவ அரசியலுக்கான அடையாளம் இலங்கை அரசியலில் பதிக்கப்படுகிறது. 1988 மாகாண சபைத் தேர்தலில் இணைந்த வடக்கு

| உள்ளூராட்சி சபை | வாக்குகள் | உறுப்பினர் | வாக்கு வீதம் |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | | | |
| கோரளைப்பற்று மேற்கு பி.ச. | 165 | 0 | 01.04 |
| கோரளைப்பற்று பி.ச. | 1485 | 01 | 04.10 |
| மட்டக்களப்பு மாநகரசபை | 476 | 00 | 01.00 |
| ஏறாவூர் பற்று பி.ச. | 326 | 00 | 00.89 |
| காத்தான்குடி ந.ச. | 5815 | 04 | 23.90 |
| ஏறாவூர் ந.ச. | 143 | 00 | 00.86 |
| மண்முனைப்பற்று பி.ச. | 554 | 01 | 03.09 |
| திருகோணமலை | | | |
| கிண்ணியா பி.ச. | 1162 | 01 | 07.32 |
| கிண்ணியா ந.ச. | 1277 | 01 | 06.22 |
| கந்தளாய் பி.ச. | 293 | 00 | 00.99 |
| குச்சவெளி பி.ச. | 259 | 00 | 01.33 |
| மூதூர் பி.ச. | 2126 | 01 | 06.18 |
| தம்பலகாமம் பி.ச. | 181 | 00 | 01.08 |
| அம்பாறை | | | |
| கல்முனை மா.ந.ச. | 623 | 01 | 01.06 |
| அக்கரைப்பற்று மா.ந.ச. | 2711 | 03 | 14.56 |
| நாவிதன்வெளி பி.ச. | 420 | 01 | 03.75 |
| மன்னார் | | | |
| முசலி பி.ச. | 295 | 01 | 02.46 |
| புத்தளம் | | | |
| புத்தளம் ந.ச. | 1581 | 01 | 06.70 |
| கம்பஹா | | | |
| அத்தனகல்ல பி.ச. | 1608 | 01 | 01.48 |
| கொழும்பு | | | |
| கொழும்பு மா.ந.ச. | 2771 | 01 | 00.97 |

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் போட்டியிட்டு அம்பாறையில் 09 ஆசனங்களும், மட்டக்களப்பில் 03 ஆசனங்களும், திருகோணமலையில் 05 ஆசனங்களுமாக 17 ஆசனங்களை அது பெற்றுக் கொண்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரபின் மரணம் வரை கொள்கைவாத அரசியல் இயக்கமாக அது முஸ்லிம்கள் மத்தியில் பயணித்தது.

பின்னர் அதனுடைய இலட்சியப் பயணம் இலட்சங்களுக்குத் திசை மாறியது. பதவிகளுக்காகவும் அதிகாரத்துக்காகவும் உள்வீட்டுச் சண்டைகள் வெடித்தன. விளைவாக பல்வேறு கட்சிகளை முஸ்லிம்களின் தனித்துவத்துக்கென முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கி களத்தில் போட்டிக்கு விட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடமிருந்து பெயர்ந்து சென்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குப் போட்டியாக உருவெடுத்திருக்கிறது. இந்த நிலையில் முஸ்லிம் கட்சிகள் தமக்குள்ளே யார் ஒசத்தி என்ற போட்டியிலே இறங்கி, சமூகத்துக்கு சேறு பூசி வருகின்றன. இந்தச் சண்டைக்கிடையில் அவர்கள் முஸ்லிம் சமூகத்தை மறந்து விட்டனர். தத்தமது வங்கிக் கணக்குகளும் அதற்கான வாக்கு வங்கிகளும் தான் அவர்களுக்கு முக்கியமாக மாறிவிட்டன.

மாறி மாறி இரு கட்சி அரசியலாக முஸ்லிம் அரசியலும் பரிணமிக்கும் நிலையில் சமூகத்தைப் பற்றி யோசிப்பதற்கும் அதற்காகக் குரல் கொடுப்பதற்குமென ஓர் அரசியல் கட்சி முஸ்லிம் சமூகத்துக்குத் தேவைப்பட்ட வேளையில் தான் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி களத்தில் நுழைகிறது. இதுவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போலவே ஓர் இளம் பொறியியலாளரின் தலைமையில் காத்தான்குடியில் இருந்து பிறப்பெடுக்கிறது. அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு 06 மாதங்களிலேயே தேர்தலில் குதித்து தாம் போட்டியிட்ட 20 உள்ளூராட்சி சபைகளில் 18 உறுப்பினர்களை அது வென்றிருக்கிறது.

இலங்கையின் கொள்கைவாதக் கட்சிகளின் பிரவேசத்துடன் ஒப்பிடுகையில் இதனை ஒரு நம்பிக்கையான பிரவேசமாகத் தான் கருத வேண்டியிருக்கிறது. விழுமிய அரசியல் பற்றியும் கொள்கைவாத அரசியல் பற்றியும் உரிமை அரசியல் பற்றியும் முஸ்லிம் சமூகம் மறக்கடிக்கப்பட்டு வருகின்ற வேளையில் இப்படியானதொரு பிரவேசம் சாமானியமானதல்ல. தமது வயிறு வளர்க்கும் அரசியல் பிழைப்புக்கு முஸ்லிம் சமூகத்தை பகடைக் காய்களாகப் பயன்படுத்தி வருகின்ற முஸ்லிம் கட்சிகளுக்கு இந்தப் பிரவேசம் வயிற்றில் புளியைக் கரைத்தது போல அமைந்திருக்கலாம். இதனுடைய அடையாளங்கள் தான் தேர்தல் காலங்களில் தனிநபர்களுக்கு சேறு பூசுவதாகவும், தேர்தலின் பின்னரான வன்முறைகளாகவும் வெளிப்பட்டிருக்கின்றன.

உரிமை அரசியலை முஸ்லிம் சமூகத்தின் உள்ளால் மீளவும் கட்டமைப்பதில் உள்ள சவால்கள் இதனூடாக வெளிவருகின்றன. வக்கிர அரசியல் வியாபாரத் துக்குள்ளால் கொள்கை வாத அரசியலை வளர்த்தெடுப்பது மிகவும் ஆபத்தான பயணம் என்பதை நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினர் தெரிந்து தான் களமிறங்கியிருப்பார்கள். ஏற்கனவே உள்ள முஸ்லிம் கட்சிகள், உரிமை அரசியல் பற்றி இனியும் பேசாதிருப்பார்களானால் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியை பேணி வளர்ப்பது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாக மாறுகிறது.

இலங்கையின் அதிகமான முஸ்லிம் அரசியல் கட்சிகள் கிழக்கிலங்கையை மையமாகக் கொண்டே பெரும்பாலும் ஆரம்பிக்கப்படுகின்றன. அந்த வகையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் அரசியல் பயணமும் அமைந்திருக்கலாம். ஆனாலும் கிழக்கில் இம்முறை அந்தக் கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகள் கிழக்கிலிருந்தான அரசியல் பிரவேசத்தின் கடினத்தை வெளிப்படுத்துகின்றன.

கட்சியின் பிரதான வேட்பாளர்கள் போட்டியிட்ட காத்தான்குடி (23.90%), அக்கரைப்பற்று (14.56%) பிரதேச சபைகளைத் தவிர ஏனைய இடங்களில் இரட்டை இலக்க வாக்கு வீதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அந்தக் கட்சியால் முடியாமல் போயுள்ளது. சில வேளை இந்த இரு பிரதேச வேட்பாளர்களிடமும் இருந்த தயார் நிலை ஏனைய பிரதேசங்களில் போட்டியிட்டவர்களு க்கு இல்லாமல் இருந்திருக்கலாம். கிடைத்திருக்கின்ற இந்த 18 உறுப்பினர்களையும் வைத்து அடுத்த தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தயார்படுத்துவதில் ந.தே.மு. இப்பொழுதிலிருந்தே கரிசனை காட்ட வேண்டியிருக்கும்.

(பக்.15)

• மூமீர்

# தலைவர்களையல்ல, மக்களைத்தான் மாற்ற வேண்டும்

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வந்துவிட்டன. முஸ்லிம்களது மனதில் ஒரு பதற்றம் தொற்றிக்கொண்டுள்ளது. குடும்பத்தில் மரணம் ஒன்று நிகழ்ந்து விட்டதைப் போல பரஸ்பரம் ஆறுதல் தெரிவித்துக்கொள்கின்றார்கள். உண்மையாகவே நாம் பயப்பட வேண்டுமா, அல்லது எந்தளவு பயப்பட வேண்டும் என்பதை சரியாகப் புரிந்துகொள்ள கடந்த தேர்தல் முடிவுகளுடன் இந்தத் தேர்தல் முடிவுகளை ஒப்பிடுவதே பொருத்தமானது. இதற்காக, கடைசியாக நடந்த நாடளாவிய தேர்தல்களைப் பயன்படுத்துவோம்.

2015 பொதுத்தேர்தல் முடிவை பயன்படுத்த முடியாது. மஹிந்த ராஜபக்ஷவின் நேரடியான முழுமையான கட்டுப்பாட்டில் உள்ள கட்சி ஒன்று அந்தத் தேர்தலில் பங்குபற்றவில்லை. 2015 ஜனாதிபதித் தேர்தல், 2010 பொதுத் தேர்தல் என்பவற்றின் முடிவுகள் இவ் ஒப்பீட்டுக்கு பொருத்தமாக இருக்கும். 2015 ஜனாதிபதித் தேர்தல், மஹிந்த தோல்வி அடைந்த தேர்தல். 2010 பொதுத் தேர்தல், மஹிந்த அதி உச்சத்தில் இருந்த தேர்தல். இம்முறை உள்ளூராட்சித் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் போன்ற போட்டியுடன் நிகழ்ந்ததால் இந்த ஒப்பீடு பொருத்தமானதாகவே தோன்றுகின்றது.

**2010 பொதுத்தேர்தல் முடிவுகள்**

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு
- 4,846,388 (60.33%)

ஐக்கிய தேசிய கட்சி
- 2,357,057 (29.34%)

ஏனைய கட்சிகள்
- 830,272 (10.33%)

அளிக்கப்பட்ட வாக்குகள் 61.26%

**2015 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்**

மைத்ரிபால சிரிஸேன
- 6,217,162 (51.28%)

மஹிந்த ராஜபக்ஷ
- 5,768,090 (47.58%)



ஏனைய வேட்பாளர்கள்
- 138,200 (1.14%)

அளிக்கப்பட்ட வாக்குகள் 81.52%

2018 உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்தவின் வாக்கு எண்ணிக்கையில் பெரும் சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

2018 தேர்தலின் சரிவை மறைத்து தமது ஆதரவாளர்களின் உள்ளத்தில் வெற்றி மனப்பான்மையை ஏற்படுத்துவதில் மஹிந்த வெற்றி பெற்றிருக்கிறார் என்பது உண்மை. மஹிந்த எதிர்ப்பு வாக்குகள் பல தரப்புகளாக சிதறி இருக்கின்றமையும்,ஐ.தே.க. + சு.க. இன் பின்னடைவுமே இதற்கான உண்மையான காரணங்கள்.

ஐ.தே.க. தன் இரண்டு வருட ஆட்சியில் நல்லாட்சிக்கான மக்களின் கனவை சிதைத்தமைக்கான கூலியைப் பெற்றுக் கொண்டுள்ளது. 2010 பொதுத் தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிடும்போது, ''என்ன நடந்தாலும் என் வாக்கு ஐ.தே.க. இற்குத்தான்'' என்று சொல்கின்ற அதி பாரம்பரிய வாக்குகளை மட்டும்தான் கட்சி தென் இலங்கையில் பெற்றுள்ளது. நல்லாட்சி கனவு சிதைந்தமை சு.க. வையும் பாதித்தது. இது வரையான வரலாற்றில் சு.க. பெற்ற மிகப் பெரும் தோல்வி இதுதான். 1977 பொதுத் தேர்தலில்கூட சு.க. 29.72% வாக்குகளைப் பெற்றிருந்தது.

உண்மையான சு.க. எது என்ற குழப்பம், கட்சியின் செயற்படு உறுப்பினர்கள் மஹிந்த வசம் இருந்தமை, தொகுதி வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு மக்களை கவரும் ஆளுமை உள்ள வேட்பாளர்கள் கிடைக்காமை போன்ற காரணிகளும் இதன் பின்னணியில் நின்று செயற்பட்டன. சு.க. வெற்றி பெற்ற தொகுதிகளை அவதானிக்கும் போது இந்த வாதம் தெளிவாகப் புரியும்.

இவ்வளவு பிரச்சினைகள் குழப்பங்கள் இருந்த சூழலில்கூட மஹிந்த தரப்பு தமது வாக்குகளை அதிகரித்துக் கொள்வது எப்படிப் போனாலும், வாக்குகளில் ஏற்படும் சரிவை தடுத்து நிறுத்த முடியவில்லை

வட்டார முறைத் தேர்தலில், முன்நிறுத்தப்படும் வேட்பாளர் யார் என்பது மிக முக்கியமானது. ''இந்தத் தேர்தல் தேசிய அரசியலுக்கானது அல்ல. எனவே கட்சியைப் பார்க்க வேண்டாம், வேட்பாளர்களைப் பாருங்கள்'' என்ற பிரச்சாரத்தினூடாகவும் மஹிந்த தரப்பு கணிசமான வாக்குகளை ஈர்த்துக் கொண்டது. பொதுத் தேர்தலிலோ, ஜனாதிபதித் தேர்தலிலோ இந்த வாக்குகள் [illegible] போவதில்லை. இந்த நிமிடமே இன்னொரு உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டு இதே வேட்பாளர்கள் மீண்டும் முன்னிறுத்தப்பட்டால் கூட மஹிந்த தரப்பு மீண்டும் இதேயளவு வாக்குகளைப் பெறப் போவதில்லை.

இந்தத் தேர்தல் முடிவு சொல்லும் செய்திகளில் பயப்பட வேண்டிய செய்தி எது?

1. முஸ்லிம் வாக்குகள் அரசியல் வியாபாரிகளுக்கிடையிலும் பிரதேச வாத பிழைப்புவாதிகளுக்கிடையிலும் சிதறடிக்கப்பட்டிருக்கின்றது.

2. களுத்துறை மாவட்ட முஸ்லிம் அரசியலில் மஹிந்தவின் எழுச்சி

3. தமிழ் வாக்காளர்கள் மீண்டும் இனவாத அரசியலின் பக்கம் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களின் தேர்தல் முடிவுகளை அவதானித்தால், தனி மனிதர்களின் தாக்கம் தெளிவாகவே தெரிகின்றது. 'சிந்தனைகள் அவசியம் இல்லை. இன்ன மனிதன் காட்டும் யாருக்கும் எனது வாக்கைக் கொடுக்க நான் தயார்'' என்ற மஹிந்தவாத சிந்தனை முசலி, காத்தான்குடி, அக்கரைப்பற்று தேர்தல் முடிவுகளில் தூக்கலாகவே தெரிகின்றது. முஸ்லிம் காங்கிரஸ் விட்ட தவறுகளின் இடைவெளிகளை தனி மனிதர்கள் பிடித்துக் கொள்கின்றார்கள் என்பதே உண்மை.

களுத்துறை மாவட்ட தேர்தல் முடிவுகள், அதிலும் குறிப்பாக பேருவலை பிரதேச சபை தேர்தல் முடிவுகள் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது. சுயேச்சை என்ற பெயரில் இயங்கிய மஹிந்த தரப்பு முஸ்லிம் அரசியல்வாதிகள், வேறு சில அரசியல்வாதிகளை விலைக்கு வாங்கி முகமூடிகளின் பின்னால் நின்று வெற்றியை களவெடுத்திருக்கின்றார்கள். சுயேச்சைக் குழுவின் வெற்றியை மஹிந்த தரப்பு கொண்டாடும்வரை சுயேச்சைக்கும் மஹிந்த தரப்புக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்று பகிரங்கமாக செய்யப்பட்ட சத்தியத்தை மக்கள் நம்பினார்கள். அரசியலுக்காக அரசியல்வாதிகள் எப்படியெல்லாம் கீழ்த்தரமாக நடக்க முடியும் என்பது இன்னொருமுறை வெளிப்பட்டிருக்கின்றது என்பதற்கு அப்பால், தனி மனித அரசியலில் இருந்து கொள்கை அரசியலுக்கு முஸ்லிம்கள் நகர வேண்டும் என்ற பாடம் ஒன்று கற்பிக்கப்பட்டிருக்கின்றது.

ஒன்றுபட்ட இலங்கையையும் முஸ்லிம்களுடனான ஒற்றுமையையும் விரும்பும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தன் வாக்குகளில் சரிவை எதிர்கொண்டிருக்கின்றது. அதற்கு எதிர் நிலையில் உள்ள சக்திகள் தமது வாக்கு வங்கிகளைப் பலப்படுத்திக்கொண்டுள்ளன. நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் போதுமாக எடுக்கப்படாத நிலையில் இவ்வாறான தேர்தல் முடிவு எதிர்பார்க்கப்பட வேண்டியதே. தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சிகள் வேகமாக்கப்பட வேண்டியதன் தேவையை இது உணர்த்துகின்றது.

## நம்பிக்கையின் ஒளிக்கீற்று

கொள்கைவாத அரசியலை முன்னிறுத்தி பல இடங்களில் போட்டியிட்ட NFGG, மற்றும் அக்குரணையில் போட்டியிட்ட PMJD என்பன ஆசனங்களை வென்றுள்ளன. கொள்கைவாத அரசியலை நோக்கி மக்களை திருப்புதல் என்ற பணி சிரமமானது. மக்களது உணர்வுகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் அரசியல்வாதிகளுக்கு மத்தியில் நின்று மக்களது சிந்தனையுடன் கொடுக்கல்வாங்கல் செய்வது இலகுவானது அல்ல. அந்த அரசியல், இலங்கை முஸ்லிம் சமூகத்தால் உள்வாங்கப்படுகின்றது என்பது உண்மையாகவே நம்பிக்கை தருகின்றது. இந்தக் கட்சிகள் முஸ்லிம் சமூகத்துடன் தம்மை சுருக்கிக் கொள்ளுமா, ரிஸாலத்தின் ரஹ்மத்தை அகிலத்தாருக்கு பரவ விடுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

தேர்தல் சொல்லும் பிரதான செய்தி 'தலைவர்களை மாற்றுவதால் ஒன்றும் செய்ய முடியாது. மக்கள் மாற்றப்பட வேண்டும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, S. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## தேர்தல் முறை ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும்

புதியதொரு தேர்தல் முறை நாட்டில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டுள்ளது. வட்டார முறையிலும் விகிதாசார முறையிலும் கலந்ததாக இம்முறைய உள்ளூராட்சித் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இனி புதிய தேர்தல் முறை பற்றிய வாதப்பிரதிவாதங்கள் தொடங்கப் பட்டு, புதிய தேர்தல் முறை தொடர்பான மக்களின் அபிப்பிராயம் பெறப்பட வேண்டும்.

புதிய தேர்தல் முறையில் திருத்தத்துக்கு உட்படுத்தப் பட வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன. ஜனநாயக முறையில் தேர்தல் என்பது மக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்வதற்கானதொரு பொறிமுறையாகும். தமது சார்பில் தமது பிரதிநிதிகளைத் தேர்தல் தான் தேர்தல் மூலமாக நாடப்படுகிறது. ஆனால் புதிய தேர்தல் முறையில் அந்த மரபு மீறப்படுவதற்கான வாய்ப்புக்களே அதிகமாக இருக்கின்றன. வாக்காளர்கள் இம்முறை தமது வாக்கினை கட்சிகளுக்கே வழங்கினர். கட்சியின் முதன்மை வேட்பாளரை முன்னிறுத்தியே தேர்தல் பிரச்சாரங்கள் நடைபெற்றன. கட்சி வெற்றி பெற்றால் யார் யாரெல்லாம் தமது பிரதிநிதிகளாக உள்ளூராட்சி சபைகளுக்குச் செல்லப் போகிறார்கள் என்பது தொடர்பில் மக்கள் பெரும்பாலும் அறியாதவர்களாகவே இருந்தார்கள்.

அதேபோல விகிதாசார அடிப்படையில் யார் யாரெல்லாம் உள்ளூராட்சி சபையில் உள்வாங்கப்படப் போகிறார்கள் என்பது பற்றியும் வாக்காளனுக்குத் தெரியாது. அதனைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் வாக்காளன் இருக்கப் போவதில்லை.

தமது பிரதேசத்துக்குச் சேவை செய்யக் கூடியவர் என்று மக்கள் கருதுபவர்களைத் தெரிவு செய்வதற்கே தேர்தல் நடத்தப்படுகிறது. போட்டியிடுகின்ற பல்வேறு வேட்பாளர்களிலும் பலசாலிகளான பலரையும் புறக்கணித்து தமக்குத் தேவையான வேட்பாளர்களை மக்கள் தெரிவு செய்கின்றனர். ஆனாலும் மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் அரசியல் கட்சிக்குத் தேவையானவராக இருக்கும் பட்சத்தில் அவர்களை அதிகாரத்துக்குக் கொண்டு வருகின்ற பலம் புதிய தேர்தல் முறையில் கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தாம் புறக்கணித்த வேட்பாளர் கையில் அதிகாரம் வழங்கப்பட்டு அவர் தம்மைப் பழி வாங்கி விடுவாரோ என்கின்ற நியாயமான அச்சம் வாக்காளனிடையே வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. இது எதிர்காலத்தில் மக்களை தேர்தலை விட்டே தூரமாக்கி விடுவதற்கு வழியமைக்கப் போகிறது.

இந்த வகையில் அரசியல் கட்சிகளின் எதேச்சாதிகாரப் போக்குக்கு வழியமைக்கின்ற தேர்தல் முறையொன்றுக்கே வாக்காளர்கள் இம்முறை தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். புதிய தேர்தல் முறையின்படி அரசியல் கட்சிகள் திணிக்கின்றவர்களைத் தான் மக்கள் தமது பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படுகின்றனர். இது ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைத்து அராஜகத்துக்கே வழியமைக்கும்.

இதுபோன்ற பல்வேறு பிரதிகூலங்கள் தொடர்பிலும் இந்தத் தேர்தல் முறையை அவதானிக்க வேண்டியிருக்கிறது. இம்முறைய தேர்தலை ஒரு பரீட்சார்த்தமாக எடுத்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் தேர்தல் சட்டம் மீளவும் திருத்தியமைக்கப்பட வேண்டும். அதேபோல உள்ளூராட்சி சபைகளில் 2 வீதமாக இருந்த பெண் பிரதிநிதித்துவம் ஒரேயடியாக 25 வீதமாக அதிகரிப்பதனை விட படிப்படியான அதிகரிப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழிலசார் ஒழுக்கக்கோவைப்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011 5353635
பெக்ஸ் : 011 5335500
ஈமெயில் : srpckwood@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# 2018 உள்ளூராட்சித் தேர்தல்:

## மிகப்பெரும் அரசியல் சீர்திருத்தமொன்றின் தேவையை வலியுறுத்தும் பெறுபேறு

• ஹெட்டி ரம்ஸி

அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப் பட்ட உள்ளூராட்சி தேர்தல் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. புதியதொரு அரசியல் கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சியையும் விட நாட்டில் சிங்கள பௌத்தர்கள் பெரும் பான்மையாக உள்ள பிரதேசங்களில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளது.

இந்தத் தேர்தல் ஆட்சியை மாற்றும் தேர்தல் ஒன்றல்ல. அத்தோடு, ஏதாவதொரு உள்ளூராட்சி அதிகார சபையில் முதலிடம் வருவது, குறித்த உள்ளூராட்சி மன்றத்தில் அதிகாரத்தைப் பெறுவதற்கு போதுமானதாகவும் அமையாது. எனினும் இம்முறை வெளியான தேர்தல் பெறுபேறுகள் நாட்டின் எதிர்கால அரசியலில் மிக முக்கிய தாக்கத்தை உண்டுபண்ணும் என்பது திண்ணம்.

மஹிந்த ராஜபக்ஷவின் வாக்கு வங்கி உட்பட ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி போன்ற கட்சிகளின் வாக்கு வங்கிகள் தொடர்பில் சம காலத்தின் பார்வையை அச்சொட்டாக படம் பிடித்துக் காட்டிய சந்தர்ப்பமாகவே இந்தத் தேர்தலை நோக்க வேண்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி அதன் உண்மையான வாக்கு வங்கியின் பக்கம் தள்ளப்பட்டிருப்பதை காண முடிகின்றது. ஒரு தனிநபராக மஹிந்த ராஜபக்ஷவினை மாத்திரம் நம்பி பெரும்பான்மை மக்கள் இம்முறை தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

மஹிந்த ராஜபக்ஷ தனி வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கினாலும் கூட 50 இலட்சத்தையும் தாண்டிய வாக்குகளை அவர் பெற்றுக்கொள்வார் என்பது திண்ணம். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 58 இலட்சம் வாக்குகளை பெற்றுக்கொண்டார். அதற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் 60 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். எனினும் இவ்விரண்டு முறையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அபேட்சகராகவே அவர் இந்த வாக்குகளை பெற்றுக்கொண்டமையினால் இதில் அவருக்கு தனிப்பட்ட முறையில் எவ்வளவு வாக்குகள் கிடைத்தன என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை.

பொதுவாக ஐ.தே.க. அல்லது ஜே.வி.பி போன்ற கட்சிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கின்ற வாக்குகளில் வேட்பாளர் யாராகினும் கட்சிக்குரிய வாக்குகளே அதிகம் கிடைக்கின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் அவ்வாறான வாக்கு வங்கியுள்ளது.

இதற்கு முன்னர் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தாய்க் கட்சியிலிருந்து விலகி புதிய கட்சிகளை உருவாக்கிக் கொண்ட பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தாய்க் கட்சியை விட அதிக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது. ஆனால் 1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் வெற்றி மிக முக்கிய நிகழ்வாகக் காணப்பட்டது. இம்முறை மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியை பண்டாரநாயக்கவின் வெற்றியோடு ஒப்பிட முடியுமான போதிலும் பல்வேறு வித்தியாசங்களும் காணப்படுகின்றன.

தற்பொழுதுள்ள நிலவரத்தின் படி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 2015 பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக் கொண்ட வாக்குகளை விட அதிகம் பெற்றுள்ளது. அரசாங்கத்தின் பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணையுமானால் பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்ட வாக்குகள் அவர்களுக்கு பாரிய அச்சுறுத்தலாக அமையாது. இவ்வெண்ணிக்கை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்ட வாக்குகளை விட குறைவானதாகும். அத்துடன், அக்கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து பொதுஜன பெரமுன முன்னிலை பெற்றுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைக்கவும் முடியும்.

அரசாங்கத்தின் பக்கத்தில் பார்க்கும் போது பிரச்சினை அதுவல்ல. இந்தத் தேர்தல் பெறுபேறுகள் [illegible] ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பார்த்த திட்டங்கள் தவிடுபொடியாகியுள்ளன. உத்தியோகபூர்வ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மைத்திரிபால சிறிசேனவிடம் இருப்பதால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 2015 ஆம் ஆண்டு வாக்குகள் பொது ஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளுக்கிடையில் பிரிந்து செல்வதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கூடுதலான உள்ளூராட்சி மன்றங்களில் முதலிடத்திற்கு வர முடியும் என்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தப்புக் கணக்கு போட்டது. அவ்வாறு நடைபெற்றிருந்தால் அடுத்த கட்டம் மைத்திரிபால சிறிசேன செல்லாக் காசாகியிருப்பார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் இறுதிக் கட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சற்று ஆவேசப்பட்டு ஐ.தே.க.வை சாடியிருந்தார். இந்த விடயம் அவருக்கு தெரிய வந்தமையினாலோ என்னவோ, தற்போதைய நிலவரத்தைப் பார்க்கும்போது பொதுஜன பெரமுன ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வாக்குகளை முழுமையாக காவுகொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் குறிப்பிடத்தக்களவு வாக்குகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு விழுந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி முதலிடத்தை பெற்றுக் கொண்ட பல இடங்களில் பொது ஜன பெரமுனவின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூலம் ''நாங்கள் எங்களுடைய அரசாங்கமொன்றை அமைப்போம்'' என்பதாக ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகள் கூறிய பசப்பு வார்த்தைகளை மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

ராஜபக்ஷ ஆட்சியின் போது இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றங்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுத்தல், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் புதியதொரு அரசிலமைப்பை உருவாக்குதல் மற்றும் சட்டத்தையும் நல்லாட்சியையும் பலப்படுத்தல் போன்ற விடயங்கள் நல்லாட்சி அரசியல் கொள்கையின் மிக முக்கிய விடயங்களாக காணப்பட்டன. அத்துடன் பிரஜைகளுக்கு பொருளாதார பிரச்சினைகளின்றி வாழ்வதற்கு முடியுமான சூழலை அமைத்துக் கொடுத்தல் போன்ற விடயமும் அதில் உள்ளடங்கியிருந்தது.

எனினும் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்பு ஒவ்வொரு வாக்குறுதிகளையும் மீற ஆரம்பித்தார்கள். இல்லாவிட்டால் அந்த வாக்குறுதிகளை கைவிட்டிருந்தார்கள். குறைந்த பட்சம் அரசியலமைப்புத் திருத்தத்தையாவது மேற்கொண்டு தங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு கௌரவமான முறையில் வாழ்வதற்கான சூழலையேனும் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பது மாத்திரமல்ல அதனை நியாயப்படுத்தும் வகையில் கருத்துக்களையும் தெரிவித்து வந்தார்கள். இதற்கு எதிராக பதிலளிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வரையில் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். இந்தத் தேர்தலின் மூலம் இந் நாட்டு வாக்காளர்கள் நல்லதொரு செய்தியை வழங்கியுள்ளார்கள்.



ஐக்கிய தேசியக் கட்சி முதலிடம் பெற்றுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களில் தனித்து ஆட்சியமைக்க முடியாத நிலையும் உள்ளது. மறுபுறத்தில் பொது ஜன பெரமுன முதலிடம் பெற்றுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களிலும் அவர்களுக்கு தனித்து ஆட்சியமைக்க முடியாதுள்ளது. என்றாலும் மேல் மட்டத்தில் விளங்காவிட்டாலும் இந்தத் தேர்தல் பெறுபேற்றின் மூலம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பேரம் பேசும் சக்தியுள்ளது. ஜனாதிபதியினால் பேரம் பேசும் சக்தியை பிரயோசனப்படுத்தும் முறையை பொறுத்தே எதிர்காலத்தின் அரசியல் நிலவுகை தீர்மானிக்கப்படுகிறது.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மஹிந்த அணியினர் சிறப்பானதொரு வெற்றியை பதிவு செய்திருப்பதாக சிலர் தர்க்கித்து வருகிறார்கள். இது எவ்வளவு தூரம் நியாயமான கூற்று? மஹிந்த அணி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் செல்லுபடியான மொத்த வாக்குகளில் 44.65 சதவீதத்தையே பெற்றுள்ளது. இவ்வெண்ணிக்கை கடந்த 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்ட வாக்குகளை விடவும் 3 சதவீதம் குறைவாகும். இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் இணைந்து பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 47.94 வீதமாகும்.

இவ்வெண்ணிக்கையானது கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் பெற்றுக்கொண்ட மொத்த வாக்குகளை விட 3 சதவீதம் குறைவாகும். இரு தரப்பினரதும் வாக்கு வங்கி சற்று ஆட்டம் கண்டிருப்பதை காண முடிகின்றது. இந்தத் தோல்வியின்

அதாவது மக்கள் எதிர்பார்ப்புக்களை காட்டிக்கொடுத்து, 2015 மக்கள் சக்தியை திசைதிருப்ப முயற்சித்தால் இனிமேலும் மக்கள் ஆதரவு அதற்கு கிடைக்காது என்கின்ற செய்தியை தெரிவித்துள்ளார்கள். ராஜபக்ஷவுடன் ஒன்றிணையாவிட்டாலும் தற்போதைய அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு இனிமேலும் முன்வர முடியாது என வழங்கியுள்ள செய்தி ஒருவகையில் பாராட்டத்தக்கது. நல்லாட்சிக்கான மக்கள் எதிர்பார்ப்புகளை கணக்கில் கொள்ளாமல் விட்டதற்கு மக்கள் நல்லதொரு பாடத்தை புகட்டியுள்ளார்கள். இதற்கு மாற்றீடாக மக்கள் ராஜபக்ஷவின் அரசியலை தெரிவுசெய்யவில்லை என்பது ஒட்டுமொத்த பெறுபேறுகளையும் அவதானிக்கும் போது புலப்படுகிறது.

ராஜபக்ஷ அரசியலை அங்கீகரிக்கும் வகையில் 50 வீதமான வாக்குகளேனும் அளிக்கப்படவில்லை. இதிலிருந்து புலப்படுவது என்னவெனில், 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது இருந்த முற்போக்கு சக்திகள் இன்னும் பலமானதாகவே உள்ளன என்பதாகும். இந்த அரசியல் சக்தியை பலமானதாக வரவேற்பதற்கு மிகப்பெரும் அரசியல் சீர்திருத்தமொன்று இன்று அவசியப்படுகின்றது. இதற்கு நல்லாட்சி அரசியலுக்காக வேண்டி முன்னிற்கும் அரசியல் சக்திகள் முன்பை விட பலமானதாக கிளர்ந்தெழ வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





றவூப் ஸெய்ன்

# மொட்டு மலர்கிறது! கட்டு அவிழ்கிறது!!

## ஐ.தே.க.வும் முஸ்லிம்களும்

தேர்தல் திருவிழா முடிந்த கையோடு நாடு ஒரு அரசியல் பரபரப்பைக் கடந்து செல்கிறது. மொட்டு மலர்கின்றது. கட்டுக்கள் அவிழ்கின்றன. முடிவுகள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அதிர்ச்சியளித்துள்ளபோதும், எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே. விளைவாக, நல்லாட்சி அரசாங்கம் மக்கள் ஆணையை இழந்துள்ளது. அரசாங்கம் மீதான மக்களின் வெறுப்பும் அதிருப்தியும் வெளிப்பட்டுள்ளன.





கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமைக்கு மக்கள் தகுந்த தண்டனை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதியின் மக்கள் அபிமானமும் ஐக்கிய தேசிய கட்சியின் ஜனரஞ்சகமும் சரிந்து விழுந்துள்ளன. முடிவுகளை நுணுக்கமாக நோக்கினால் அதன் மாபெரும் இறுதித் தோல்வியாளன் ரணில்தான் என்பதில் மண்ணளவும் ஐயமில்லை. முதலாளித்துவத்தின் மூல மந்திரமான பிரித்தாளும் (Divide and Rule) பிரதமரின் தந்திரம் மூக்குடைந்து போயுள்ளது.

மூலோபாய ரீதியில் இது ஐக்கிய தேசிய கட்சிக்கு ஏற்பட்ட மிகப் பெரிய தோல்வியாகும். 20 ஆண்டுகளுக்குப் பின்னர் அக்கட்சிக்குக் கிடைத்த மக்கள் ஆணையைத் தக்க வைக்கத் தெரியாத நிலையில் மாபெரும் வரலாற்று தோல்வியொன்றை அது சந்தித்துள்ளது. இந்த மூலோபாயத் தோல்வி (Startegic Failure) ஒன்றும் சாதாரணமானதல்ல.

சிறுபான்மை மக்களின் வாக்குகளைக் கவர்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி கையாண்ட தந்திரோபாயம் கடந்த தேர்தல்கள் போலவே இம்முறையும் வெற்றியளித்துள்ளது. ஆனால், சிங்களப் பெரும்பான்மை வாக்கை தக்க வைப்பதில் ஐக்கிய தேசிய கட்சியின் காய்நகர்த்தலும் கணக்குப் பார்த்தலும் பிழைத்துப் போய் விட்டது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றி ஒரு தசாப்தத்தைக் கடந்தும் மஹிந்த பிரேண்ட் (Mahinda Brand) இலங்கை அரசியலில் இன்னும் மங்கவில்லை என்பதை எடுத்துரைக்கின்றது. அதேவேளை, இனவாதம் இன்னும் மறையவில்லை என்பதையும் கோத்தபாய போன்றவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் குதித்தால் வெற்றிபெறுவது நிச்சயம் என்பதையும் உறுதி செய்துள்ளது.

தேர்தல் பிரச்சாரத்தின்போது இதற்கு மேல் பொறுமை காக்க முடியாத ஜனாதிபதி ராஜபக்ஷாக்களை தண்டிக்காமல் இருப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சியே காரணம் என்று மேடையில் முழங்கினார். அதுவரை அது நாடறிந்த பகிரங்க ரகசியம். ராஜபக்ஷாக்களை காப்பாற்றினால் அக்கட்சி மூன்றாகப் பிளவுபடும் என்பதை ரணில் நன்றாகத்தான் ஊகித்திருந்தார். அதனால்தான் அவர்களுக்கு எதிரான விசாரணைகளை ஆமை வேகத்தில் நகர்த்தி தண்டிப்பதிலிருந்தும் பாதுகாத்து வந்தார்.

ஏனெனில், ஜனாதிபதி சொல்வது போல் பாதுகாப்பு, நீதி, உள்விவகாரம், நிதி போன்ற குற்றவாளிகளைத் தண்டிப்பதோடு தொடர்பான அமைச்சுப் பதவிகள் அனைத்தும் ஐக்கிய தேசிய கட்சியிடமே இருக்கின்றது. அக்கட்சி 2014 டிசம்பரில் அளித்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. அதன் அறுவடையை இன்று தேர்தல் தோல்வியாக சந்தித்துள்ளது. ரணிலின் தந்திரோபாயம் அவருக்கே திருப்பி அறைந்துள்ளது.

ஜனாதிபதியும் ஒரு யோக்கியதையான அரசியலைப் பிரதிபலிக்கவில்லை. வேகமான அரசியல் அலைகளால் அடித்துச் செல்லப்படும் ஒருவராகவே இதுவரை அவர் இருந்து வருகிறார். அவர் அடுத்ததாக மீறப் போகும் வாக்கு ''தேர்தலின் பின்னர் நாம் எந்தத் திருட்டுக் கும்பலோடும் கூட்டுச் சேர மாட்டோம்'' என்ற அவரது பிரச்சார வாக்கியம்தான். இதற்கு முன்னரும் அவரது வாய் வீரம் நன்கு அறியப்பட்ட ஒன்றுதான்.

நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தும் அரசியல் தற்துணிவு (Political Discretion) அவரிடம் கொஞ்சமும் இருக்கவில்லை. ரணிலின் பிரித்தாளும் தந்திரமும் ஜனாதிபதியின் தற்துணிவின்மையும் நல்லாட்சிக்கு முன்னால் இருக்கும் இரு பெரும் தடைகளாகும். இந்தத் தடைகளே ஐக்கிய தேசிய கட்சியின் தோல்விக்கான அடிப்படைக் காரணங்களாகும்.

இந்தத் தேர்தலில் முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் ஐக்கிய தேசிய கட்சிக்கே ஆதரவளித்துள்ளனர். ஆனால் இறுதியில் வென்றிருப்பதோ கடந்த ஆட்சியில் முஸ்லிம்களைக் குறிவைத்த ஆட்சியாளர்களைக் கொண்ட சிறி லங்கா பொதுஜன பெரமுன. வரலாற்று ரீதியில் முஸ்லிம்கள் தொடர்ந்தும் ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவளிப்பதேன் என்ற கேள்வி முஸ்லிம்களின் அரசியல் புரிதலில் உள்ள கோளாறுகளிலிருந்து எழுவது தவிர்க்க முடியாதது. தேர்தலுக்குப் பின்னர் ஆட்சியமைக்கும் கட்சி முஸ்லிம்களை எதிரிகளாகக் கட்டமைக்கும் நிலைமைக்கு முஸ்லிம்கள் ஆட்பட்டு விடக் கூடாது என்பதை முன்னுணர்ந்து செயல்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

சுதந்திரத்தை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பதற்கு முன்பாக சுதந்திரத்தின் பெயரால் எதிர்காலத்தில் உருவாகப் போகின்ற பெரும்பான்மை ஆட்சியில் சிறுபான்மையினருக்கான அரசியல் காப்பீடுகளையும் பாதுகாப்பினையும் உறுதி செய்ய சிறுபான்மை இனங்களின் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் தமது நிலைப்பாடுகளையும் பிரேரணைகளையும் முன்வைக்கலாம் என்று சோல்பரி ஆணைக்குழு வேண்டிக் கொண்டது.

அந்த வகையில், சிறுபான்மைச் சமூகத்திடமிருந்து சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் முன்வைத்த 50 : 50 கோரிக்கையாகும். மெனிங், டொனமூர் போன்று பொன்னம் பலத்தின் கோரிக்கையும் முஸ்லிம்கள் தொடர்பில் போதிய கவனம் செலுத்தவில்லை. 50 ஆசனங்கள் சிங்களப் பெரும்பான்மைக்கும் 50 ஆசனங்கள் சிறுபான்மைக்கும் என்று பெரிதாக முன்னிறுத்தப்பட்ட இக்கோரிக்கைக்குப் பின்னணியில் தமிழ் அரசியல் தலைமைகளின் ஆதிக்க மனோநிலையே இருந்தது.

அக்கோரிக்கையில் இலங்கைத் தமிழருக்குப் 17, இந்தியத் தமிழருக்குப் 13, பரங்கியருக்கு 8, ஏனையோருக்குப் 12 என்ற வகையிலேயே ஆசனங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. முஸ்லிம் களின் தனித்துவம் கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பதோடு, அவர்களுக்கான ஆசனங்கள் எத்தனை என்பதும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இதன் அரசியல் விளைவாகவே, முஸ்லிம்கள் பெரும்பான்மை கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய நேரிட்டது. முஸ்லிம்களுக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையிலான நெருக்கத்திற்கு வேறு பல காரணங்கள் இருந்தபோதும், தமிழ் பேசும் மக்களுக்கான ஒரு அகன்ற அரசியல் கருத்து நிலை இல்லாதிருந்தமை பெரும் பான்மைக் கட்சியில் முஸ்லிம்கள் இணைவதற்குச் சாதகமாய் இருந்தது.

அரசாங்க சபை உறுப்பினர்களில் அநேகர் ஐ.தே.க.விலிருந்தே தெரிவு செய்யப்பட்டனர். பொத்துவில் தொகுதியில் போட்டியிட்ட எம்.எம். இப்றாஹிம், மஸ்கெலிய தொகுதியில் கள மிறங்கிய ஏ. அஸீஸ் தவிர, ஏனையோர் அனைவரும் ஐ.தே.க. விலேயே போட்டியிட்டனர்.

முஸ்லிம்கள் பாரம்பரியமாக ஐ.தே.க.வை ஆதரித்தமைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அக்காலத்தில் ஐ.தே.க.வைத் தவிர முஸ்லிம்களுக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை என்பது முதலாவது காரணமாகும். ஐ.தே.க.வுக்கு முன்னர் தோன்றிய லங்கா சமசமாஜ கட்சி இடதுசாரிக் கொள்கையைக் கொண்டிருந்தது. கம்யூனிஸ சிந்தனை கொண்ட அக்கட்சியை முஸ்லிம்கள் விரும்பவில்லை. ஏனெனில், மாக்ஸியம் மத எதிராளியாகவும் நாஸ்திகமாகவுமே முஸ்லிம்களால் பார்க்கப்பட்டது.

அக்காலத்தில் இலங்கையில் தோன்றிய மாக்ஸியம் சீனாவையும் ரஷ்யாவையும் அச்சரம் பிசகாமல் பின்பற்றியது. இந்நாடுகளில் எவ்வாறு மதம் புறக்கணிக்கப்பட்டதோ அல்லது விமர்சிக்கப்பட்டதோ அது போன்றே இலங்கையிலும் விமர்சனத்திற்குள்ளாகியது. மாக்ஸிஸ்டுகள் இலங்கையின் மதச் சூழலின் இறுக்கத்தை, அதன் யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தவறினர். முஸ்லிம்கள் மாக்ஸிஸத்தை இஸ்லாத்திற்கு விரோதமானது என்று கருதினர். இதற்கு விதிவிலக்காகவே மர்ஹூம் பதியுதீன் மஹ்மூத் உருவாக்கிய இஸ்லாமிய சோசலிஸ முன்னணி அமைந்தது.

சிறுபான்மை என்ற வகையில் தமிழ் அரசியல் தலைமைகளை முஸ்லிம்கள் ஆரம்பத்தில் நம்பியபோதும் முஸ்லிம்களை கிள்ளுக் கீரையாகப் பயன்படுத்த முனைந்ததைப் புரிந்துகொண்ட முஸ்லிம்கள், படிப்படியாக அவற்றிலிருந்து விலகத் தொடங் கினர். எம்.சி.எம். கலீல் போன்றவர்கள் சிங்களக் கட்சியான ஐ.தே.க.வை ஆதரிக்கத் தொடங்கினர்.

சமூகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முஸ்லிம் லீக், முஸ்லிம் வாலிபர் அமைப்பு, சோனக இஸ்லாமிய சங்கம் போன்றவற்றின் தலைமைத்துவமும் ஐ.தே.க. ஆதரவாளர்களாக இருந்ததனால் சமூகத்தின் பெரும் பகுதியினர் ஐ.தே.க.வை ஆதரிக்கும் நிலைக்கே வந்தனர். ஐ.தே.க. ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முஸ்லிம் லீக் அதன் ஓர் அங்கமாக இருந்து வந்ததை இந்தக் கண்ணோட்டத்திலேயே நோக்க வேண்டும். 1952 இல் சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பிக்கப்படும் வரை இந்நிலையே நீடித்தது.

1946 இல் ஐ.தே.க.வின் உருவாக்கத்தில் முஸ்லிம் லீக், இலங்கை இஸ்லாமிய சோகன சமூகம் பெரும் பங்காற்றியது. ஆனால், மிகக் குறைந்த காலப் பகுதிக்குள் அதே கட்சியினால் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்பதே வரலாறாகியது.

முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு வரலாற்று ரீதியான இந்த நியாயங்கள் இருந்தமை உண்மையே. எனினும், இலங்கையின் இரு பெரும் அரசியல் கட்சிகளாலும் முஸ்லிம்கள் அவ்வப்போது இழப்புக்களையும் ஏமாற்றங்களையும் சந்தித்து வந்துள்ளனர். இரு பெரும் கட்சிகளால் நன்மைகள் விளைந்தது போல் தீமைகளும் இழைக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒப்பீடு செய்வதும் சமகாலத்தில் முஸ்லிம் சமூகத்தின் நலன்களுக்கு ஏற்ப அரசியல் தீர்மானங்களை எடுப்பதும் கட்டாயமாகும்.



பச்சை இரத்தம், நீல இரத்தம் என்று குறிப்பிட்ட கட்சிக்கு மாத்திரம் தொடர்ந்தும் விசுவாசமாக இருப்பது சமூக ரீதியில் முஸ்லிம்களுக்கு நலன் பயக்கப் போவதில்லை. கடந்த ஆட்சியில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து நாம் அறிவோம். மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடித்ததில் முஸ்லிம் வாக்குகள் நிர்ணயகரமான பங்கினை ஆற்றியுள்ளதையும் நாம் அறிவோம். வாய்ப்புக்கேடாக, மஹிந்தவின் கட்சி முஸ்லிம்களுக்கு எதிரானது என்ற பிழையான விம்பம் முஸ்லிம்களின் சமூக உளவியலில் ஆழப் பதிக்கப்பட்டுள்ளது. இதைப் பதித்ததில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் முக்கிய பங்குள்ளது. மஹிந்தவின் ஆட்சியை உடைப்பதற்கு நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையில் சிங்கள இனவாத இயக்கமொன்றை திட்டமிட்டு உருவாக்கியது யார் என்ற கேள்வியிலிருந்தே இதனைப் பார்க்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் அதற்கு அரசியல் எதிரிகள் என்று யாரும் இல்லை. அவ்வாறு இருக்க வேண்டியதுமில்லை. அப்படியொரு கட்சியை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டியதுமில்லை. கட்சி அரசாங்கங்கள் மாறிக் கொண்டே இருக்கும். அரசியல் காட்சிகளும் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டிருக்கும். யாரிடமும் அதிகாரம் நீடித்திருப்பதில்லை. இந்த மாறும் அரசியல் சமன்பாட்டைப் புரிந்துகொள்ளும் முதிர்ச்சி முஸ்லிம்களுக்கு அவசியம். முஸ்லிம் சமூகத்தின் நலன்களே முதன்மைப் படுத்தலுக்குரியவை. ஒழிய, குறிப்பிட்ட கட்சியல்ல என்ற உண்மையை முஸ்லிம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தவறினால் இது போன்ற அரசியல் அதிர்ச்சிகள் நம்மைத் தாக்கும் என்பது திண்ணம்.

நாம் பரம்பரை பரம்பரையாக இந்தக் கட்சிக்கே ஆதரவளித்து வருகிறோம் என்ற அரசியல் பழைமைவாதத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற ஓர் உண்மையையும் இந்தத் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இன்று விழுமிய, மாற்று அரசியல் கலாசாரமொன்றுக்குள் முஸ்லிம் சமூகம் மெல்ல நகரத் தொடங்கியுள்ளது. இது இன்னும் விசாலிக்கப்பட வேண்டும். கட்சி அரசாங்கங்கள் மாறிக் கொண்டே இருக்கும். நாம்தான் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான அரசியல் தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும். அதற்குரிய அரசியல் முதிர்ச்சியே இன்றைய தேவை. ஒழிய, வெறும் அரசியல் உணர்ச்சியல்ல. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# ஜினதாச நியதபால:

## ஐக்கிய தேசியக் கட்சி வரலாற்றில் ஒரு கண்ணீர்த்துளி - 2

1971 ஜேவிபி புரட்சியைத் தொடர்ந்து ஐக்கிய சோசலிஸ மாணவர் இயக்கத்தினால் கொழும்பு ஹைட் பார்க்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த மாணவர் சக்தியின் பின்னால் மிகப்பெரும் தூணாக நின்றவர் ஜினதாச நியதபால ஆவார்.

1971 புரட்சிக் காலப்பகுதியில் புரட்சியோடு தொடர்புபட்டார் எனக்கூறி ஜினதாச நியதபால கைதுசெய்யப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியை மீளக் கட்டியெழுப்பும் முயற்சியின் பின்னால் உள்ள மிக முக்கிய நபராக அப்போதைய அரசாங்கத்தினால் இவர் அடையாளம் காணப்பட்டிருந்தார். அதனாலேயே அவர் புரட்சியை காரணம் காட்டி கைதுசெய்யப்பட்டார்.

ஜினதாச நியதபால சிறையிலிருந்து விடுதலையாகி வந்த சந்தர்ப்பத்தில் டட்லி சேனாநாயக்கவின் தலைமையில் பழைய சிறிகொத்தா அலுவலகத்தில் நடைபெற்ற ஜினதாசவை வரவேற்கும் வைபவத்தில் மாணவர் இயக்கம் சார்பில் உரையாற்றுவதற்கு அவர் என்னை தெரிவுசெய்திருந்தார்.

அரசியலில் முன்னகர்வதற்கு அவர் வழங்கிய வழிகாட்டல் மற்றும் ஆசீர்வாதத்தை நான் இன்று நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

ஜே.ஆர் தலைமையில் அத்தனகல்லையில் ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர் கடுமையான முறையில் தாக்குதல்களுக்கு உள்ளானது என் நினைவுக்கு வருகிறது. உண்ணாவிரதம், இடைத் தேர்தல் போன்ற சவால்மிக்க சந்தர்ப்பங்களில் எப்பொழுதும் அவர் முன்னிற்பார்.

அவர் இளைஞர் முன்னணி உறுப்பினர்களுக்கு எப்பொழுதும் முன்மாதிரிமிக்க, தலைமைத்துவத்தை வழங்கினார். அவர் அஞ்சா நெஞ்சம் படைத்த தலைவராகவும் காணப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாக இருந்த சமயத்திலேயே இவர் ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் முன்னணியின் பொதுச் செயலாளராக நாடு முழுவதிலும் இளம் படையணியொன்றை உருவாக்கினார். கட்சியை வெற்றிப்பாதைக்கு கொண்டு வருவதே இவரது முழு மூச்சாக காணப்பட்டது.

இந்த இளைஞர் படையணியில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களில் அன்று பெரும்பாலான இளைஞர்கள் இரத்தத்தால் கையொப்பமிடுவதை நான் பார்த்துள்ளேன்.

இவரிடமிருந்து அரசியலைக் கற்ற பெரும்பாலானவர்கள் பிற்பட்ட காலத்தில் கட்சியின் இளைஞர் முன்னணி உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளில் உயர் பதவிகளை வகித்ததை கண்டு அவர் மகிழ்ச்சியடைந்ததை நான் பார்த்துள்ளேன்.

அவரிடம் பதவி ஆசை காணப்படவில்லை. சகலரையும் உயர்பதவிகளுக்குச் செல்ல வழிகாட்டல்களை கொடுத்தார். ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரமற்றுக் கிடந்த காலப்பகுதியில் கட்சியின் ஆதரவாளர்களை உரமூட்டிய ஒருவரே ஜினதாச நியதபால. எனினும் கட்சி அதிகாரங்களை பெறுகின்ற சந்தர்ப்பங்களில் உயர்ந்த இடத்திற்கு செல்ல அவர் கட்சிக்குள் இல்லாதிருப்பது துரதிர்ஷ்டமே.

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ந்து கிடந்த காலப்பகுதிகளில் கட்சியை பலப்படுத்திய மிக முக்கிய கதாபாத்திரமாக காணப்பட்ட ஜினதாச நியதபால, கருத்து வேறுபாடுகள் காரணமாக கட்சி வெற்றி பெற்ற சந்தர்ப்பத்தில் கட்சிக்குள் அவர் இல்லாமல் போனது, அவர் கட்சிக்காக வேண்டி மேற்கொண்ட சேவைகளை அறிந்தவர்களுக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது.

ஐக்கிய தேசியக் கட்சிக் கொள்கைகளை தழுவி, அக்கொள்கைகளை ஏனையவர்களுக்கும் எடுத்துக் காட்டுவதில் தனது வாழ்நாளில் சிறந்ததொரு காலப்பகுதியை அர்ப்பணம் செய்த ஜினதாச நியதபால தனது அரசியல் வாழ்வின் இறுதிப்பகுதியில் டட்லி முன்னணியை கட்டியெழுப்பி ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தூர விலகினாலும் அவர் கட்சிக்குள் இருந்த காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சிக்காக வேண்டி ஆற்றிய சேவைகளை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களாகிய நாம் கௌரவத்துடன் நினைவுகூர்வோம்.

# சிந்தனை வங்குரோத்து நிலையின் வெளிப்பாடு 19 ஆவது திருத்தம்

தூரநோக்குள்ள சிந்தனைக்கான வெற்றிடம் இலங்கையின் பின்னடைவில் தொடர்ந்தும் பாதிப்புச் செலுத்திக் கொண்டிருக்கிறது. அரசியல் வாதி களுக்கு மட்டுமன்றி புத்திஜீவிகள், துறை சார் நிபுணர்கள், விஷேட நிறுவனங்கள் அனைத்தினதும் பொது லட்சணமாக தற்போது இது ஆட்கொண்டிருக்கிறது.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை தயாரித்தவர்கள் ஒன்றும் படிக்காதவர்கள் அல்ல. ஆனால் அதனைப் பார்த்தவுடனேயே குறித்த சட்டத் திருத்தம் திறமையானதொன்றல்ல என்பதை படிக்காதவர்களும் புரிந்து கொள்ளக் கூடியவகையிலேயே அந்தத் திருத்தம் உள்ளது. இந்தத் திருத்தத்தில் உள்ள குழப்பமான நிலைப்பாடுகள், பரஸ்பரம் முரண்பாடான விடயங்கள், நடைமுறைச் சாத்தியமில்லாத விவகாரங்கள் எவற்றையும் இலங்கையின் புத்திஜீவிகளால் கண்டு கொள்ள முடியவில்லை. ஒரு மடத்தனமான சட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு ஏதோ ஒரு வகையில் இவர்களும் துணைநின்றிருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருந்தவர்களுக்கும் இது தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, ஜாதிக ஹெல உருமய, ஜேவிபி போன்ற கட்சிகளின் அறிவு ரீதியான வங்குரோத்தையும், இலங்கையின் அறிஞர்களின் சிந்தனை வங்குரோத்தையும் இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஜனாதிபதி முறையை சர்வஜன வாக்கெடுப்பின்றி இல்லாமலாக்கும் நோக்கிலேயே 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதற்கு பாராளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் அதற்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும் என யாப்பு குறித்துரைப்பதனையும் கூட அறிந்தவர்களாக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தவர்கள் இருக்கவில்லை. இதனை முன்கொண்டு சென்ற அரசியற் கட்சிகளுக்கும் இதைப் பற்றித் தெரியவில்லை. அல்லது தேர்தல் வெற்றியின் பின்னர் கிடைக்கின்ற அதிகாரத்தின் மூலமாக சட்டத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களையும் தம்மால் சாதித்துக் கொள்ள முடியும் என்று கருதியிருப்பார்களாக இருக்கலாம். இப்படி நினைத்திருந்தால் அந்த அறிவாளிகளின் எண்ணமே சட்டத்துக்கு முரணானது.

18 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்பட்டதும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 வருடங்களாகக் குறைக்கப்பட்டதும் தான் 19 ஆவது திருத்தத்தின் நன்மைகள். இந்த நன்மைகளை விட இதனால் விளைந்த பிரதிகூலங்களே அதிகம். இது அரசியல் யாப்பை சிக்கல்கள் நிறைந்ததாக மாற்றுவதற்குக் காரணமாக அமைந்ததோடு, பாரிய செலவுகளுக்கு வழியமைக்கும் நிர்வாக முறைகளையும் தோற்றுவித்தது.

தமது இஷ்டப்படி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலாக்கப்படத்தான் வேண்டும் என்றாலும் பாராளுமன்றத்துக்குரிய கண்ணியத்தைப் பாதுகாக்கும் வகையில் அதனைக் கலைக்க நேரிடுகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. யாருக்கும் அதிகாரம் செலுத்த முடியாத நிலைக்கு பாராளுமன்றத்தின் அதிகாரச் சமநிலை பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில், பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக பாராளுமன்றம் கலைக்கப்பட முடியும்.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி முறையில் ஜனாதிபதியிடமோ, பிரதமர் முறையில் பிரதமரிடமோ வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் 19 ஆம் திருத்தத்தின்படி பாராளுமன்றத்தை எவ்விதத்திலேனும் கலைக்கின்ற அதிகாரம் ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ இல்லை. எனவே சுயவிருப்பின் பேரிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். சுயவிருப்பின் பேரில் கலைக்கப்படுகின்ற பாராளுமன்றம் உலகில் எங்கேனும் இருக்கிறதா?

பாராளுமன்றத்தின் அதிகாரச் சமநிலை பாதிக்கப்பட்டும் சுயவிருப்பின் பேரிலேயேயன்றி அதனைக் கலைக்க முடியாது என்று வருமாக இருந்தால் முழு அரசும் அராஜகத்தில் வீழ்வதை தவிர்க்க முடியாது போகும். மக்கள் இந்த நேரத்தில் தான் அரசியலமைப்பு விற்பன்னர்களின் தரத்தை அறிந்து கொள்ளப் போகிறார்கள். பாராளுமன்றம் தற்போதுள்ள ஸ்திரமற்ற சிக்கலான சூழலில் இவ்வாறானதொரு சூழல் எந்த நேரத்திலும் நிகழலாம்.

யாப்புத் திருத்தத்துக்கென உருவாக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களும் அவற்றினால் நாடப்படுகின்ற எந்தப் பணியையும் செய்வதற்குரிய இயலுமையில்லாத, மக்களுக்கு மேலதிகச் சுமையை விதிக்கின்ற மடத்தனமானவைகளாகவே உள்ளன. இந்தக் குழுக்கள் வெற்றிபெற வேண்டுமாக இருந்தால் அவை குறித்த குழு




மறுமலர்ச்சி இயக்கம்

தொடர்பான தெளிவான பார்வையுள்ள, தேவையான அதிகாரமுள்ள, அரசியல் ஆதிக்கங்களுக்கு உட்படாத, தூய்மையாக உழைக்கக் கூடிய ஆளுமைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

தற்போது உருவாக்கப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் மீதான அரசியல் அழுத்தங்கள் குழுவின் சுயாதீனத்தை கேள்விக்குள்ளாக்குகிறது. குழுக்களுக்கான அங்கத்தவர்களை நியமிப்பதற்கான முறைமைகளும் நல்லவர்களை உள்வாங்குவதற்கான முறைமைகளாக இருக்கவில்லை. குழுவின் இலக்கு, பணி வரையறுக்கப்படவில்லை. அரச நிறுவனங்களில் காணப்படும் ஊழல், மோசடி, வினைத்திறனின்மை போன்றவற்றை களையும் நோக்குடன் செயற்படக் கூடியவர்களை இந்தக் குழுக்களில் இணைத்திருக்க முடியும்.

அரசியல் யாப்புத் திருத்தத்துக்கான நோக்கம் இங்கு தெளிவாக வரையப்படாதது போலவே, அதற்குரிய அங்கத்தவர்கள் தொடர்பிலும் பலமான வரையறைகள் குறிப்பிடப்படவில்லை. அத்தோடு, அங்கத்தவர்களை நியமிப்பதற்கு மட்டும் தான் அதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதேயன்றி அவர்களது செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான அதிகாரம் குழுவுக்கு வழங்கப்படவில்லை.



அரசியலமைப்புச் சபைக்கு அங்கத்தவர்களை நியமித்ததன் பின்னர், அவர்கள் தத்தமது நிறுவனங்களில் நடைமுறைப்படுத்தவிருக்கின்ற மறுசீரமைப்புக்கள் தொடர்பான ஓர் அறிக்கையை கோருவதாக குழுவின் பணியை அமைத்திருக்க முடியும். நீதிமன்றத்தை உதாரணமாகக் கொண்டால், பிரதம நீதியரசரை நியமிப்பவர், நீதித் துறையில் நடக்கின்ற குறைபாடுகளையும் அவற்றை நிவர்த்திப்பதற்கான முன்மொழிவுகளையும் சேர்த்து முன்வைக்க முடியுமாக இருந்தால், நியமிக்கப்படுகின்ற பிரதம நீதியரசர், இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசியலமைப்புச் சபையின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படுவார்.

தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள முறையில் பிரதம நீதியரசரை நியமிப்பது மட்டுமே குறித்துரைக்கப்பட்டுள்ளது. நியமனத்தின் பின்னர் அவர் விரும்பியவாறு செயற்படலாம். அவரைக் கண்காணிப்பதற்கான முறையொன்று இல்லை. இதைவிட, நியமனம் வழங்கப்படுகின்ற அனைவரும், தமக்குக் கீழால் உள்ள நிறுவனங்களில் காணப்படும் மோசடி, வினைத்திறனின்மை போன்றவற்றைக் களையக் கூடியவர்களாக அமைந்திருக்க வேண்டும்.

நிர்வாக முறையில் கொண்டுவர வேண்டிய மாற்றங்கள் தொடர்பில் நுனிப்புல் மேயாமல் ஆழமாக அறிந்து செயற்பட்டிருக்க முடியும். அரசின் உயர் அதிகாரிகள் துஷ்பிரயோகங்களில் ஈடுபடும் போது அவற்றை முறையிடக் கூடிய இடமாக அரசியலமைப்புச் சபை அமைய வேண்டும். அவற்றை விசாரித்து பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இப்படி அமையுமாக இருந்தால் பாராளுமன்றம் மட்டுமன்றி ஒவ்வொரு பிரஜையும் அரச உயர் அதிகாரிகள் தொடர்பில் கேள்வி கேட்கின்ற நிலையை உருவாக்க முடியும்.

தற்போதுள்ள நடைமுறையில் யார் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் அவரது கட்சி சார்ந்தவர்கள் இணைந்து அதனை முறியடிக்க முடிகிறது. அரசியலமைப்புச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டால் இது சாத்தியமில்லாமல் போகிறது. அரசியலமைப்புச் சபையும் தமக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளை இணையம் மூலமாகவேனும் வெளிப்படுத்தும் நிலையை உருவாக்க முடியுமானால் அது இன்னும் வெளிப்படைத் தன்மையாக அமையும். இது தொடர்பான விசாரணைகள் உடனுக்குடன் மக்களுக்கு இற்றைப்படுத்தப்படவும் வேண்டும். இந்த முறையினால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுபவர் குற்றமிழைத்தவராக இருந்து அவரை அவரது கட்சியினர் பாதுகாக்க முனைந்தால் அந்தக் கட்சி தொடர்பில் மக்கள் தீர்மானத்துக்கு வருவது இலகுவாகவிருக்கும்.

தற்போதைய நிலையில் அரசியலமைப்புச் சபை மற்றுமொரு சபை மட்டுமே. வயது முதிர்ந்த சிலரிடம் உயர் பதவிகளுக்கு ஆட்களை நியமிப்பதற்கு அல்லது நியமனத்துக்கு சிபாரிசு செய்வதற்கான பணி வழங்கப்பட்டுள்ளது. ஒரு வருட காலத்துக்கான வேலை இல்லாமலேயே அதற்குரிய செலவு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கு முன்வைத்துள்ள பிரேரணைகளில் உள்ள தன்படி அரசியலமைப்புச் சபையை பலமான, வேலைப்பளுவுள்ள நிறுவனமாக மாற்ற முடியும்.

19 ஆவது திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முறைமை சிக்கலானது. எந்த இலக்குமற்றது. உண்மையான மாற்றமொன்றை கொண்டுவரும் சக்தியற்றது. வினைத்திறனற்றது. 19 ஆவது திருத்தத்தை கொண்டுவந்தவர்களிடம் தூரதிருஷ்டியான பார்வை இருந்திருந்தால், அரசியல் அழுத்தங்கள் இன்றிய வினைத்திறனான தூய்மையான நிர்வாக முறைமையொன்றை அரச நிறுவனங்களில் கொண்டு வந்திருக்க முடியும்.

19 ஆவது திருத்தம் மூலம் விகாரமடைந்த நிறுவன முறை யொன்றை உருவாக்கியவர்களுக்கு, வினைத்திறனான நிர்வாக முறை யொன்றை உருவாக்குவதற்கான திறமை இருக்கவில்லை என்ற போதும், கட்டியெழுப்பவிருக்கின்ற நிர்வாக முறையில் இருக்கும் சிக்கலான, நடைமுறைக்கொவ்வாத விடயங்களை கண்டறிந்து அவற்றைக் களைவதற்குரிய நடவடிக்கைகளை இந்த அறிவுஜீவிகள் முன்வைத்திருந்தால் விளைவு இதைவிட மாற்றமாக அமைந்திருக்கும். இலங்கையின் சிந்தனை வங்குரோத்து நிலைமை புத்திஜீவிகளிடமும் படித்தவர்களிடமும் காணப்படுவதை உறுதிப்படுத்த இது போதுமாக இல்லையா? நாட்டை ஆளுகின்ற அரசியல்வாதிகளும் இது புரியாமல் திருத்தத்துக்கு அங்கீகாரம் அளித்தது அவர்களுடைய அறிவைக் காட்டுவதற்குப் போதுமானதாக இல்லையா?

நாட்டில் இப்படியான சிந்தனா வறுமை நிலவுவதாக இருந்தால், எப்படி நமக்காக ஓர் அரசியலமைப்பை வரைவது? யாப்பில் திருத்தம் கொண்டுவரவே தெரியாத நிலையில் எப்படி முழுமையான அரசியல் யாப்பொன்றை வரைவது? அரசியலமைப்பு தொடர்பில் இலங்கைக்கு இழுக்கானதொரு வரலாறே இருக்கிறது. சோல்பரி யாப்புடன் இணைந்ததான முதலாவது வரைவை டி.எஸ். சேனாநாயக்க ஐவர் ஜெனிங்ஸை வைத்து வரைந்தமை பற்றியும், அதனை மாற்ற முடியாமல் இருக்கச் செய்வதற்காக சோல்பரி பிரபுவுடன் திருட்டுத் தனமாகச் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கை பற்றியும், டி.எஸ். சேனாநாயக்கவுடைய கோரிக்கையை ஒப்பந்தப்படி நிறைவேற்றிக் கொடுப்பதற்காக, சோல்பரி பிரபுவுக்கு வழங்குவதாக ஒப்புக்கொண்ட ஆளுநர் பதவியை வழங்கிய விதம் பற்றியும் நான் முன்னரும் குறிப்பிட்டிருக்கிறேன். இதன் பின்னர் 1972, 1978 அரசியல் யாப்புக்கள் வரையப்பட்ட அவலட்சணம் பற்றியும் நான் குறிப்பிட்டுள்ளேன்.

தற்பொழுது வரையப்படுகின்ற அரசியல் யாப்பும், குறுகிய அரசியல் இலாபத்தை இலக்காகக் கொண்ட, சந்தர்ப்பவாத, சுயநல அரசியல் யாப்பாகவே கருதப்பட முடியும். சிறந்ததொரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டியதொரு தேவை இருந்திருந்தால், கடந்த கால அவலட்சணங்களை ஒரு முறை திரும்பிப் பார்த்திருக்க முடியும். உள்ளத்தை உலுக்குகின்ற பழைய துன்பியல் விடயங்கள் மீண்டும் நேர்ந்துவிடக் கூடாது என்ற எண்ணத்துடன் புதிய யாப்பு தொடர்பில் யோசித்திருக்க முடியும்.


புதிய தேர்தல் முறை மாற்றங்கள் தொடர்பிலும் இதே விதமாக கவனம் செலுத்தியிருக்க முடியும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் சில காலமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. தேர்தலை தொடர்ந்து தற்பொழுது இந்த விடயம் சூடு பிடிக்கவுள்ள நிலையில் அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்கவினை நேர்கண்டோம். அவருடனான நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



# சகல இனத்தவர்களுக்கும் ஆட்சியில் பங்குரிமை காணப்பட வேண்டும்

## சட்டத்தரணி லால் விஜேநாயக்க

- **நாட்டிற்கு புதியதோர் அரசியலமைப்பு ஏன் தேவைப்படுகின்றது?**

அரசியலமைப்பு என்பது ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டம். 1978இல் ஜே.ஆர் ஜயவர்தன உருவாக்கிய அரசியலமைப்பே தற்பொழுதும் அமுலிலுள்ளது. இதற்கு முன்னர் சோல்பரி அரசியலமைப்பு மற்றும் 1972 ஆம் ஆண்டு 1 ஆம் குடியரசு யாப்பு ஆகிய இரண்டின் மூலமும் பாராளுமன்ற ஜனநாயக முறையில் நாம் ஆளப்பட்டோம். இந்த யாப்புக்களின் பிரகாரம் பெயரளவு ஜனாதிபதி ஒருவர் காணப்பட்டார். பிரதமர் மற்றும் அமைச்சரவைக் கூடாகவே ஆளுகை இடம்பெற்றது. எல்லோரும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாக இருந்தார்கள். ஆனால் அதுவரை காலமும் நிலவிய முறையை மாற்றியமைத்து ஜே.ஆர். ஜயவர்தன 1978இல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஏற்படுத்தினார். நிறைவேற்று அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வெளியில் எடுக்கப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. மக்களது பிரச்சினைகளுக்குப் பதிலளிப்பதும் இல்லை. பாராளுமன்றத்திற்கு காணப்பட்ட ஜனாதிபதியை நீக்கும் அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்பட்டு ஜனாதிபதிக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அரச தலைவர், முப்படைகளின் தலைவர், அமைச்சரவையின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் கூட்டப்பட்டமையினால் நாட்டில் சர்வாதிகார ஆட்சிமுறைக்கு வழியேற்பட்டது.

அதுவரை காலமும் நாட்டில் நிலவிய பாராளுமன்ற ஜனநாயக முறைக்கு இது முற்றிலும் முரணானது. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்ட நாள் முதல் அதற்கெதிராக பலர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றார்கள். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல ஜனாதிபதிகளினதும் தேர்தல் வாக்குறுதியாக நிறைவேற்று ஜனாதிபதிமுறை ஒழிப்பு என்ற விடயம் காணப்பட்ட போதிலும் அந்த வாக்குறுதியை ஒருவரும் நிறைவேற்றவில்லை. 2015 ஜனவரி 08 ஜனாதிபதித் தேர்தலின் போதும் நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதாக வாக்குறுதியளித்தார்கள்.

- **புதியதோரு அரசியலமைப்பை உருவாக்குவதில் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும் என்கின்ற விடயம் மாத்திரமா தாக்கம் செலுத்தியது?**

இல்லை. 30 வருட யுத்தத்தை தொடர்ந்து தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவை எமக்குள்ளது. இந்நாட்டின் சகல மக்களதும் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதியதொரு அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்வதன் மூலமே அதனை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும். இந் நாட்டின் சகல மக்களும் இது தங்களுடைய அரசியலமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய அரசியலமைப்பு அமைய வேண்டும். இந்திய அடையாளங்களுடனான தேசத்தை கட்டியெழுப்பும் நோக்கில் 1950ஆம் ஆண்டு இந்தியா அரசியலமைப்பொன்றை உருவாக்கியது. எனினும் சுதந்திரம் பெற்று 70 வருடங்கள் கழிந்தும் எம்மால் இலங்கையர்கள் எனும் அடையாளத்துடனான தேசமொன்றை கட்டியெழுப்ப முடியாமல் போயுள்ளது.

இந்த விடயமே எமக்கு முன்னாலுள்ள மிகப்பெரும் அரசியல் பணியாக உள்ளது. சகல பிரஜைகளும் இது எமது நாடு என நினைக்க வேண்டும் என்றால் அவர்கள் அரசின் பங்காளர்களாக மாற வேண்டும். சகல இனத்தவர்களுக்கும் ஆட்சியில் பங்குரிமை காணப்பட வேண்டும்.

- **முழுமையானதொரு அரசியலமைப்பு வரைவு முன்வைக்கப்படாததொரு நிலையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கச் செயன் முறை தொடர்பில் சமூக வலைதளங்களில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டு வருகின்றதே, இது குறித்து..**

முழுமையான அரசியலமைப்பு வரைவு இன்னும் முன்வைக்கப்படவில்லை. மக்கள் கலந்துரையாடலுக்கு அவசியமான குழு அறிக்கை மாத்திரமே இது. உதாரணமாக இந்த அறிக்கையில் அதிகாரம் எந்த அலகினுடாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் அதிகாரம் மாகாணங்கள் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் உடன்பட்டுள்ளனர். எனினும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அரசியலமைப்புச் சபையே இறுதித் தீர்மானம் எடுக்கும். அரசியலமைப்புச் சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளின் மூலமே அரசியலமைப்பு நிறைவேற்றப்படுகின்றது. எனினும் எந்தவொரு கட்சிக்கோ அல்லது ஒரு குழுவிற்கோ எவ்வகையிலும் நினைத்தவாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற முடியாது. இதற்கு அரசியலமைப்பில் உள்ள விடயங்கள் தொடர்பில் விரிவான உடன்பாடு எட்டப்பட வேண்டும்.

மதம் தொடர்பான விடயத்தை கவனத்திற் கொண்டால், பௌத்த சமயத்திற்கு முதலிடம் வழங்கப்பட வேண்டும் என்றும், அதற்கு தற்போதுள்ள ஏற்பாடுகளுடன் மற்றுமொரு பந்தி உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். இன்னும் சிலர் அந்தப் பந்தியில் ஏனைய சமயத்தவர்களது உரிமைகளும் பாதுகாக்கப்படும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என தெரிவித்தனர். குழு அறிக்கையில் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மதம் தொடர்பாக எந்தவொரு பந்தியும் சேர்க்கப்படக்கூடாது என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் அரசியலமைப்பு ''பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு'' என்பதாக ஆரம்பிக்கிறது. எனினும் எமது அரசியலமைப்பின் மூலம் மதராச்சியம் கட்டியெழுப்பப்படவில்லை. பௌத்த சமயத்திற்கு முதலிடம் வழங்குவோம் என்றே நாம் குறிப்பிட்டுள்ளோம். ஒப்பீட்டளவில் இது சிறியதொரு ஏற்பாடு. அரசியலமைப்பின் 9 ஆவது பந்தி 10 மற்றும் 14 (ஈ) ஆகிய பந்திகளுக்கு உட்பட்டுள்ளதாகவே அமைந்துள்ளது. இதன் படி ஏனைய மதங்களைக் கற்பதும், போதிப்பதுமான சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பந்தி இருப்பதன் மூலம் ஏனைய எந்தவொரு மதத்திற்கும் பாதிப்பு ஏற்படப் போவதில்லை. புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளுக்கு தடங்கல் ஏற்படுத்தும் வகையில் பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டிருந்த இடம் இல்லாமல் ஆக்கப்படுவதாகவும் அதிகாரப் பகிர்வின் மூலம் நாட்டை துண்டாடப் பார்க்கிறார்கள் என்றும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார்கள்.

இந்த அரசியலமைப்பிற்குள் மிக முக்கிய விடயங்கள் உள்ளபோதும் இது போன்ற ஒரு சில விடயங்களால் முழு அரசியலமைப்புப் பணியையுமே முடக்கப் பார்க்கிறார்கள். எனினும் இது உரிய முறையில் மேலெழுப்பப்பட்டால் எவ்வித சந்தேகங்களுமின்றியே [illegible] கொள்வார்கள்.

- **இந்த அறிக்கையில் ஒருமித்த நாடு என்னும் சிங்கள வசனமே ஆங்கிலத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாம் ஒருமித்த நாடல்ல என சர்வதேசத்திற்கு காண்பிக்க முயற்சிக்கிறோம் என்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றதே..**

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படும் அளவுக்கு ஒருமித்த நாடு என்பதை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் தற்போதைய அரசியலமைப்பில் இல்லை. பிளவுபடுத்த முடியாத, வேறுபடுத்த முடியாத நாடென்பதாகவே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு அறிக்கைகளிலும் 'ஒருமித்த' என்னும் வசனம் சிங்களத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனது கருத்தின் படி, ஒருமித்த எனும் சொல் சிங்கள அறிக்கையில் சிங்களத்திலும் ஆங்கில அறிக்கையில் ஆங்கிலத்திலும் தமிழ் அறிக்கையில் தமிழ் மொழியிலும் குறிப்பிடப்பட்டு அந்த வசனங்களுக்கு தெளிவான விளக்கங்கள் மாத்திரம் கொடுப்பது போதுமானது. ஒருமித்த எனும் வசனம் பிரித்தானிய பாராளுமன்ற முறையில் பயன்படுத்தப்படும் வசனம் என்பதாலேயே அவ் வசனம் அவ்வகையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது.

உயர் ஒருமித்த நாடு என்பதாக பிரித்தானியா யாப்பில் குறிப்பிட்டுள்ளது. எனினும் வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் பிரிந்து செல்ல முடியும் என குறிப்பிட்டிருப்பதன் மூலம் பிரித்தானியாவின் ஒருமித்த நாடு என்கின்ற கோட்பாட்டில் சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளது என்கின்ற விடயத்துக்கு வர முடிகின்றது. அதனால் இதை நன்றாக தெளிவுபடுத்துவதற்காக வேண்டியே ஒருமித்த எனும் வசனம் 3 மொழிகளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களுக்கு இது விடயத்தில் ஏதும் சந்தேகம் இருப்பின் அதை சரிசெய்து கொள்ளும் சந்தர்ப்பமும் உள்ளது. மக்களது சந்தேகங்களை தணிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்களுக்கு இன்னும் சந்தேகங்களை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்தது. எனினும் இது கலந்துரையாடப்பட்டு வருவதால் மக்களுக்கு கருத்துத் தெரிவிப்பதற்கு இடமுள்ளது.

- **இலங்கை பிளவுபடாத பிரிக்க முடியாததொரு தேசம் என்பதாக அறிக்கையில் விஷேடமாக குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம் இனவாதிகளைத் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றனர் என்றொரு குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றதே. இது குறித்து...**

அப்படியொரு கருத்து இங்கில்லை. 13 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் ஓரளவுக்கு மத்திய அரசாங்கத்திடம் காணப்பட்ட நிறைவேற்று மற்றும் அரசியலமைப்பு அதிகாரங்கள் மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அது பாரியதொரு மாற்றம். எனினும் பாராளுமன்றத்தின் மீயுயர் அதிகாரம் பிரிந்து செல்லவில்லை. நாட்டை பிரிக்காமல் அதிகாரங்களை பகிர்வதே 1987 இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக காணப்பட்டது. இன்றைய முயற்சியும் அப்படித்தான்.

நான் ஏலவே கூறியது போன்று சகல இனத்தவர்களுக்கும் அதிகாரத்தில் பங்கு இருக்க வேண்டும். மத்திய அரசாங்கம் மற்றும்

உதாரணமாக குழு அறிக்கையில் அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அரசியல் உரிமைகளின் மூலம் முன்னகர்ந்து சமூக பொருளாதார கலாசார உரிமைகள் வரை உலக உரிமைகள் தொடர்பான கலந்துரையாடல் முன்சென்றுள்ளது. இதன்படி, இந்த அறிக்கையில் 32 அடிப்படை உரிமைகளை உட்புகுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தென்ஆபிரிக்கா, கென்யா, நேபாளம் போன்ற புதிய அரசியலமைப்பை தாபிக்க நடவடிக்கை எடுத்த நாடுகளும் கூட அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்திருந்தன. அதுபோன்று தேர்தல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. அதுவே சகல மோசடிகளுக்கும் அத்திவாரமாக அமைந்துள்ளது.

(பக்.14)

## எழுவாய், பயமிலை



அபூ ஷாமில்

### ஆண்டியில்லாத அம்பலம்

நமது சமூகத்தின் பிற்போக்கான நிலைமைக்கு காரணம் இதுதான் என்று பலராலும் சுட்டிக் காட்டப்படும் ஒரு விடயம் இருக்கிறது. யாருமே தமது பணியைச் செய்யவில்லை என்பது தான் அது. அல்லது தமது பணியை விட்டு விட்டு வேறு ஏதோவொன்றை சகலரும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் சமூகத்தின் உரிமைகளைப் பற்றிப் பேசுவதில்லை. உலமா சபை மார்க்கப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதில்லை. சமூக நிறுவனங்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில்லை. முதியவர்கள் வாலிபர் முன்னணி நடத்துகிறார்கள். ஆன்மீகம் வளர்க்க வேண்டிய தரீக்காக்கள் வெள்ள நிவாரணப் பணிகளில் மூழ்கிப் போயிருக்கின்றன.

இந்தத் தொடரில் தான் பள்ளிவாசல்கள் தொழுகையை நிலைநாட்டும் பணியை செய்யாமலிருப்பதும் அடங்குகிறது. ஒரு பள்ளிவாசல் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற பொதுவான வரையறையொன்று இலங்கையில் இல்லை. இதனால் பள்ளிவாசல் ஒரு சமூகத்தின் அசைவியக்கத்துக்கான அச்சாணி என்ற நிலை தற்போது திரிபடைந்து தொழுகைக்காக மட்டும் மூடித் திறக்கின்ற ஒரு நிறுவனமாகச் சுருங்கிப் போயிருக்கிறது.

மஸ்ஜித் என்றால் ஸுஜூத் செய்யும் இடம் என்று கூறி அதனை தொழுகைக்கு மட்டும் சுருக்கிக் கொண்டவர்கள், இப்போது தொழுகையை நிலைநாட்டுதல் என்ற பணியையும் மறந்து, தொழுகைக்காக அதான் சொல்லுதலையும், யார் வந்தாலும் வராவிட்டாலும் உரிய நேரத்தில் தொழுவித்தலையும், அதற்குரிய இரண்டு பேருக்கும் சம்பளம் வழங்குவதையும் மட்டுமே தமது பணிகளாக வரையறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிவாசல்கள் ஸுஜூதுக்கான தளம் என்பதை மட்டும் எடுத்துக் கொண்டாலும், ஸுஜூத் செய்வதற்காக மக்களை அங்கு திரட்டுவதற்காக முஅத்தின் ஒருவரை வைத்து ஸ்பீக்கரும் கட்டி அதான் சொல்லி முடித்துவிட்டால் தமது கடமை முடிந்தது என பள்ளிவாசல்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் நினைக்கிறார்கள். தொழுகைக்காக அழைப்பதில் அதான் சொல்லுதல் ஒரு ஞாபகமூட்டல் மட்டும் தான். அதற்கு அப்பால் மக்களை தொழுகையின்பால் ஈடுபடுத்துவது தான் தொழுகையை நிலைநாட்டுதல் என்பதன் பொருளாகிறது. மக்களை தொழ வைக்க வேண்டும் என்பது பள்ளிவாசல் நிர்வாகங்களின் முக்கியமான பணி.

தொழுகையை ஊக்குவிக்கும் வகையில் பள்ளிவாசல்கள் குத்பாக்களும் உபந்நியாசங்களும் நடத்துவதற்கு மேலதிகமாக தமது ஜமாஅத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் தொழுகையைப் பேணி வருகிறார்கள் என்பதை உத்தரவாதப்படுத்தக் கூடிய நிலை உருவாக வேண்டும். ஏழு வயது முதல் தொழுகைக்காக பிள்ளைகளை ஏவத் தொடங்கி, 10 வயது முதல் தொழுகையை பிள்ளைக்குக் கடமையாக்கிவிட வேண்டும் என்று மார்க்கம் ஏவுகிறது. ஆனால் குறித்த இந்த வயதுக்குள்ளால் தான் ஸ்கொலர்சிப் பரீட்சை வருகிறது என்பதால் ஸ்கொலர்சிப் பரீட்சைக்குப் பின்னர் பிள்ளைகளை தொழப் பழக்குவது என்று முடிவெடுத்திருக்கின்ற பெற்றோர்கள் இருக்கும் நிலையில், 07 வயதில் பிள்ளைகளைத் தொழப் பழக்குவதற்கான பயிற்சிகளை பள்ளிவாசல்கள் முன்வந்து நடத்த முடியும். சில நேரங்களில் இதனை ''தொழ ஆரம்பிப்பதற்கான விழா'' வாகவும் பள்ளிவாசல்கள் ஏற்பாடு செய்ய முடியும்.

பள்ளிவாசல்களின் முக்கிய பணியாக சமூகத்தில் தொழுகையை நிலைநாட்டுதல் என்பது அமைவதனூடாக பள்ளிவாசல்களின் சமூகப் பணி ஆரம்பிக்கிறது. இது ஒவ்வொரு வீட்டிலும் தூங்குகின்ற நேரத்தை தீர்மானிப்பது முதல் முழு ஊரும் அடங்கி ஒடுங்க வேண்டிய நேரங்கள் வரை அனைத்திலும் பள்ளிவாசலைத் தொடர்புபட வைக்கிறது. தமது பள்ளிவாசலில் அங்கத்தவர்களாக இருக்கின்ற முந்நூறு குடும்பங்களில் இருந்து பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காக மூன்று ஸப் மட்டுமே நிறைகிறது என்றால் அடுத்தவர்கள் பற்றித் தேட வேண்டிய பணி பள்ளிவாசலுக்கு இருக்கிறது. ஜும்ஆவுக்குத் திரளுகின்ற மொத்தச் சனத்தையும் ஐவேளைத் தொழுகைக்கு வரவழைப்பது சாத்தியமில்லை என்றிருந்தாலும், அதில் அரைவாசியையாவது பள்ளி வாசலில் ஐந்து நேரமும் தொழுபவர்களாக மாற்ற முடியாது என்றிருந்தால், பள்ளியைத் திறந்து மூடுவதற்கு மட்டும் ஒரு நிர்வாகம், ஒரு தலைவர் இருப்பதில் எந்தப் புண்ணியமுமில்லை.

இங்கு தான் சமூகத்தின் நிர்வாணம் கலைகிறது. நாங்கள் புனிதமாக நினைத்துக் கொண்டிருக்கின்ற பள்ளிவாசல்களும், அரசியல்வாதிகளைப் போலவே அல்லது சமூகத்தின் ஏனைய நிறுவனங்களைப் போலவே தமது பணியைச் செய்யவில்லை என்பதனை சமூகத்தின் தொழுகையாளிகளின் எண்ணிக்கை துலாம்பரமாகக் காட்டுகிறது. எந்தப் பள்ளிவாசலில் தமது அங்கத்தவர்கள் எல்லோரையும் தொழுகையில் ஒன்று சேர்க்க முடியவில்லையோ அந்தப் பள்ளிவாசல் நிர்வாகங்கள் தமது பணியைச் செய்யாமல் சமூகத்தையும் அல்லாஹ்வையும் ஏமாற்றி வருகின்றன என்பதை எவரும் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

மீன் இல்லாத மாலு பனிஸ் போல இனி ஸுஜூதை நிலைநாட்டாத மஸ்ஜிதுகளும் சமூக வரலாற்றில் உவமானங்களாக மாறப் போகின்றன. உலமாக்கள் மதிப்பிழந்து வருவது போல பள்ளிவாசல்களும் இந்த நிலைமைக்கு மாறுவதற்கு முன்னர் சமூகமே விழித்தெழுவாய். நீ உறங்கிக் கிடப்பதால் பயனிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் ஐந்தாண்டுகளில் உலகின் முதற் தர பத்துப் பொருளாதாரங்களில் ஒன்றாகத் துருக்கி



விஷன் 2023 ஐ இலக்கு வைத்து துருக்கி வேகமாக நகர்கின்றது. தனது வணிகம், சக்தி துறை, சுகாதாரம், போக்குவரத்து என்பவற்றிலும் ஏற்றுமதித் துறையிலும் வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துருக்கி, எதிர்வரும் ஐந்தாண்டுகளில் தனது இலக்கை எட்டிவிடும் என ஜனாதிபதி ரஜப் தையிப் அர்துகான் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இராணுவ சர்வாதிகாரத்தினால் மூழ்கடிக்கப்பட்டிருந்த துருக்கி, 2023 இல் உலகின் முதற் தர வளர்ச்சியடைந்த 10 பொருளாதார நாடுகளில் ஒன்றாக மிளிரும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். தற்போது உலகின் முதல் 15 பொருளாதாரங்களில் ஒன்றாக துருக்கி திகழ்வது குறிப்பிடத்தக்கது.

1923 இல் துருக்கிய உஸ்மானிய பேரரசை எதிரிகள் வீழ்த்தி சரியாக 100 ஆண்டுகளைக் கடந்த நிலையில் துருக்கி உலக வல்லரசாக மாறும் திட்டத்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக விஷன் 2023 என்று துருக்கி அரசாங்கம் அறிவித்திருந்தது.

ர்வதேசப் பார்வை



## ட்ரம்ப் ஓர் இனவாதி என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது: இல்ஹாம் உமர்

அமெரிக்க அரசியல்வாதி இல்ஹாம் உமர் அமெரிக்காவில் முஸ்லிம்களுக்கு எதிராக வளர்ந்து வரும் இஸ்லாமிய பீதிக்கு முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி ட்ரம்ப் ஏற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். சோமாலியா நாட்டைச் சேர்ந்த இல்ஹாம் உமர் அமெரிக்கக் காங்கிரஸின் உறுப்பினராக உள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட அதே நாளிலேயே சோமாலிய-அமெரிக்கப் பிரஜையான இல்ஹாம் உமர் காங்கிரஸ் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ட்ரம்பின் வருகைக்குப் பின்னர் அமெரிக்காவில் முஸ்லிம் விரோத மனப்பாங்கு முஸ்லிம் அல்லாதவர்களிடையே காட்டுத் தீ போல் பரவி வருகின்றது. இதற்கான காரணம் ட்ரம்பின் பிரச்சாரமே என்று இல்ஹாம் உமர் சாடியுள்ளார். மக்களை இவ்வாறு இன ரீதியில் வெறியூட்டும்போது அவர்களை வன்முறைகளில் ஈடுபடுத்துவது இலகுவாகி விடும் என அவர் தெரிவித்துள்ளார்.

## சவூதி அறேபியாவும் அமீரகமும் யெமனை ஆக்கிரமித்துள்ளன!

- தவக்குல் கர்மான்



யெமனை சவூதியும் அமீரகமும் இராணுவ ரீதியில் ஆக்கிரமித்துள்ளன என ரொய்டர் செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள நேர்காணலில் யெமனைச் சேர்ந்த சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற தவக்குல் கர்மான் தெரிவித்துள்ளார். இஸ்லாஹ் கட்சியின் அரசியல் செயற்பாட்டாளரும் அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் புரட்சிக்கு தூண்டுகோலாய் இருந்தவருமான கர்மான் இக்கருத்தினைத் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவையாகும்.

யெமன் மீது சவூதி நடாத்தி வரும் வான்வழித் தாக்குதல்கள் குறித்து அந்நாட்டின் இஸ்லாஹ் இஸ்லாமியக் கட்சி இதுவரை உத்தியோகபூர்வ கருத்து எதனையும் வெளியிடவில்லை. இத்தருணத்தில் அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரான கர்மான் முதல் தடவையாக யெமன் குறித்த சவூதி மற்றும் அமீரகத்தின் கொள்கையை கடுமையாகச் சாடியுள்ளார். ஹூதி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து 2014 இல் சவூதி போரைத் தொடங்கியது. இது யெமனியர்களைக் காட்டிக் கொடுத்து நாட்டை சீரழிக்கும் முயற்சி என்று கர்மான் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அப்துர் ரப் மன்சூர் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகள் சவூதி தலைநகர் ரியாதில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கர்மான் தெரிவித்துள்ளார்.


## இஸ்ரேலினால் கைதுசெய்யப்படும் பலஸ்தீன சிறுவர்கள் சித்திரவதைக்கு உள்ளாகின்றனர்



ஆக்கிரமிப்புப் படையினரால் மேற்குக்கரையில் கைதுசெய்யப்படும் 60%மான பலஸ்தீன் சிறுவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என சர்வதேச மனித உரிமை நிறுவனமொன்று அறிவிக்கை விடுத்துள்ளது. தற்போது 8500 சிறுவர்கள் (12 முதல் 18 வரையானவர்கள்) இஸ்ரேலின் பல்வேறு சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் உணர்ச்சி ரீதியிலும் உடல் ரீதியிலும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதோடு, சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து கற்களை வீசிய சிறுவர்களே இவ்வாறு கைதுசெய்யப்படுகின்றனர். 30%மான சிறுவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதாகின்றனர். இவர்களுக்கு எதிரான வழக்குப் பதிவுகளோ நீதிமன்ற விசாரணைகளோ இன்றி நீண்டகாலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சர்வதேச மனித உரிமை நிறுவனங்களால் தொடர்ச்சியாக கண்டிக்கப்பட்டு வருகின்றது.

## சிரியாவில் ஈரானை எதிர்கொள்ளும் இஸ்ரேல்



இஸ்ரேல்-சிரிய எல்லைப் புறத்தில் இஸ்ரேலிய இராணுவம் தொடர்ச்சியாக நடத்தி வரும் தாக்குதல் ஈரானுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்று நெடன்யாஹு தெரிவித்துள்ளார். இதற்குப் பதிலளிக்கும் வகையில் சிரிய இராணுவம் இஸ்ரேலின் எல்லைப் புறமாக தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

சிரியாவின் உள்நாட்டுப் போரில் இஸ்ரேலின் நேரடித் தலையீடு ஒரு புதிய திருப்பம் என்று கருதப்படுகின்றது. சிரியாவில் ஈரான், அணு ஆலைகளை நிறுவி வருவதாக இஸ்ரேல் ஏற்கனவே குற்றம்சாட்டியுள்ளது.

சிரியாவின் ஆளும் கட்சி அரசாங்கத்தை இராணுவ ரீதியில் பலப்படுத்தி வரும் ஈரான், அந்நாட்டில் வெடித்த அறபு வசந்தத்தை கடந்த 7 ஆண்டுகளாக கடுமையாக ஒடுக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது ஈரான்-இஸ்ரேலின் மறைமுக ஆடுகளமாக சிரியா மாற்றப்பட்டுள்ளமை பிராந்திய நாடுகளுக்கு பெரும் அச்சுறுத்தலைத் தந்துள்ளது.

இஸ்ரேலிய போர் விமானமொன்றை சிரிய இராணுவம் சுட்டு வீழ்த்தியதை அடுத்து மோதல் ஆரம்பித்தது. பல்வேறு வகைப்பட்ட இராணுவக் குழுக்கள் மோதி வரும் சிரியாவின் இராணுவ அரசியல் நிலமைகள் மென்மேலும் சிக்கலடைந்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புட்டின், சிரிய, ஈரான் ஆதரவாளர். அவர் இஸ்ரேலுக்கு வழங்கியுள்ள ஆலோசனையில் பிராந்தியத்தில் பதட்டத்தைக் குறைப்பதற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பிரிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து இஸ்ரேலிய தயாரிப்பு நீக்கம்




பிரிட்டன் பல்கலைக்கழக உணவகத்திலிருந்து இஸ்ரேல் தயாரிப்பொன்றை அப்பல்கலைக்கழகம் நீக்கியுள்ளது. இஸ்ரேல் உற்பத்திகளுக்கு எதிரான உலகளாவிய பிரச்சாரத்திற்குக் கிடைத்த மற்றுமொரு வெற்றியாக இது கருதப்படுகின்றது. பிரிட்டனின் பிரபலமான மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் உணவகத்திலிருந்தே இஸ்ரேலிய தயாரிப்பு நீக்கப்பட்டுள்ளது.

அப்பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மேற்குக்கரையிலும் காஸாவிலும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது இஸ்ரேலிய உற்பத்திகள் பகிஷ்கரிக்கப்பட வேண்டும் என்று கோரி வந்தனர். இக்கோரிக்கைக்குப் பதிலளித்தே இஸ்ரேலிய தயாரிப்பு விலக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிரியாவில் காயமடைந்த அபூபக்கர் பக்தாதி இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்




சமீபத்திய தாக்குதலொன்றில் கடும் காயங்களுக்கு உள்ளான ஐசிஸ் தலைவர் அபூ பக்கர் பக்தாதி இன்னும் உயிரோடுதான் உள்ளார் என்று ஈராக்கிய அரச படையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சிரியாவின் வடகிழக்குப் பிரதேசமொன்றில் பக்தாதி மருத்துவ சிகிச்சை பெற்று வருவதாக ஈராக்கின் இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரி உறுதிசெய்துள்ளார்.

"இப்பயங்கரவாத இயக்கத்தின் நகர்வுகள் குறித்து நாம் மு[illegible]யோடு செயல்பட்டு வருகின்றோம். 25 பில்லியன் அமெரிக்க டொலர் பக்தாதியின் தலைக்கு சன்மானம் கோரப்பட்டுள்ளது. உலகில் மிக வேண்டப்படும் பயங்கரவாதியான பக்தாதி, தனது காலில் துப்பாக்கிச் சூடு பட்டு காயமடைந்துள்ளார்" என புலனாய்வு அதிகாரி பஸ்ரி தெரிவித்துள்ளார்.

ஈராக், ஐசிஸ் பயங்கரவாத இயக்கத்தை அழிக்கும் விஷேட இராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவு - தொடரும் அவசரகால நிலை



எதிர்க்கட்சிகளின் அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாத மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லாஹ் யெமீன் பிரகடனம் செய்துள்ள அவசரகால நிலைமை நீடிப்பதானது பாரிய அரசியல் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் அரச படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, சிலர் பயங்கரவாத குற்றச்சாட்டின் பெரில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.


உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த இரண்டு வாரங்களாகக் குறைந்துள்ளதோடு, நாட்டின் அரசியல் ஸ்திரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியா தனது இராணுவத்தை மாலைதீவுக்கு அனுப்புவது குறித்து கலந்தாலோசித்து வருவதாக பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றவூப் ஸெய்ன்

இந்து சமுத்திரம் உலக நாடுகளை இணைக்கும் பொருளாதார வாசல். இந்து சமுத்திர பிரதேசத்தைச் சூழவுள்ள நாடுகளுக்கு மூலோபாய கேந்திர நிலையம். கிழக்காசியா, அறேபிய தீபகற்பம், கிழக்கு ஆபிரிக்கா, மற்றும் தென்னாபிரிக்கா போன்ற வணிக மையங்களை பருவக் காற்று மூலம் இணைக்கும் கடற்பாதையை ஆரம்பிக்கும் காலத்திற்கு முன்பிருந்தே இம்முக்கியத்துவத்தை இந்து சமுத்திரம் பெற்று விட்டது.

ஏறத்தாள உலகத்தின் பாதி கொள் கலன் பரிமாற்றம், சுமார் மூன்றில் இரண்டு பங்கு உலகளாவிய கடல்வழி எரிபொருள் விநியோகம் ஆகியன இந்தப் பிராந்திய கடல் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்தம்




ஆசியாவையும் ஐரோப்பாவையும் மாத்திரமன்றி, சீனாவையும் கிழக்கு ஆபிரிக்காவையும் இணைக்கும் வகையில் பாரிய தரைவழிப் பாதைகளை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது. இந்தியாவின் எல்லைகளைத் தாண்டிச் சென்று பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் இருந்து தென் பகுதி வரை நீண்டு செல்லும் பாதைகளையும் சீனா அமைத்து வருகின்றது.

உண்மையில் சீனாவின் பாதை உருவாக்கத் திட்டம் பங்களாதேஷ், பாகிஸ்தான், மியன்மார் போன்ற நாடுகளில் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. கடல் நியதிகள், சர்வதேச கடல் சட்டங்கள் என்பவற்றுக்குப் புறம்பாக சீனா தனது இராணுவ மற்றும் பணப் பலத்தைப் பிரயோகித்து தெற்காசிய கடல் பிராந்தியங்களைக் கட்டுப்படுத்தி வருவது அமெரிக்கத் தரப்பிலிருந்து

# இந்து சமுத்திர அரசியலைத் திடுக்கிட வைக்கும் சீனாவின் முத்துமாலை மூலோபாயம்

ஒரு இலட்சத்திற்கும் அதிகமான கப்பல்கள் இந்து சமுத்திரப் பாதைகளைப் பயன்படுத்துகின்றன. உலக நாடுகளுக்கான சரக்குப் பொதிகளில் அரைப் பங்கு இக்கப்பல்கள் மூலமே இடமாற்றப்படுகின்றன. இதனால் இந்து சமுத்திர நாடுகளின் பொருளாதார மேம்பாட்டில் இந்து சமுத்திரம் முக்கிய இடம் வகிக்கின்றது.

இத்தகைய பொருளாதார முக்கியத்துவம் கொண்ட இந்து சமுத்திரம், பாதுகாப்பு, அரசியல் ஸ்திரம் என்பவற்றைப் பொறுத்தவரையிலும் மிகவும் இன்றியமையாதவை. சமாதானம், அபிவிருத்தி, கூட்டுப் பாதுகாப்பு என்பன தெற்காசிய நாடுகள் அடைய வேண்டிய பொது இலக்குகளாக உள்ளன. எனினும், தெற்கு, தென்கிழக்காசிய நாடுகள், சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகியன இந்து சமுத்திர ஆதிக்கம் குறித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட அணுகுமுறையைக் கொண்டுள்ளன.

புவி அரசியலுக்கு (Geo-politics) ஏற்ப முரண்படும் நலன்களின் மோதல், பிராந்தியத்தில் பாரிய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை ஏற்கனவே உருவாக்கி விட்டது. அதற்கு பலிக்கடாவாக ஆக்கப்பட்டவர்கள் மியன்மாரில் உள்ள அரக்கான் சிறுபான்மை முஸ்லிம்கள். இது குறித்து கட்டுரையின் இன்னொரு பகுதியில் பார்ப்போம்.

இந்து சமுத்திர அயல் பிராந்திய நாடுகளாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், லாவோஸ், கம்போடியா, வியட்நாம், மொரிசியஸ், சீசல்ஸ், புருணை, ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் காணப்படுகின்றன.

சமீபகாலத்தில் உலகப் பொருளாதாரத்தில் அமைதியாக ஓங்கி வரும் சீனா, அமெரிக்காவை விஞ்சிய நிலையில், தெற்காசிய நாடுகளை கட்டுப்படுத்துவதில் இரண்டு பாரிய திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இது அமெரிக்காவையும் இந்தியாவையும் அவற்றின் அச்சிலுள்ள ஆதரவு நாடுகளையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. அதேவேளை, இந்நெருக்கடி கிட்டிய எதிர்காலத்தில் நிறைவடையப் போவதில்லை என்பதையும் ராஜதந்திர பதட்டம் காட்டுகிறது.

சீனா உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்காவை விஞ்சி விட்டமை இரண்டு வகையில் நிரூபணம். ஒன்று, அமெரிக்காவுக்கு பெருந்தொகை கடன் வழங்கும் நாடு சீனாவாகவும் அதிக வெளிநாட்டுக் கடனை சீனாவுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய நாடாக அமெரிக்காவுமே உள்ளது.

இரண்டாவது, அமெரிக்காவின் வெளிநாட்டுச் சொத்துக்களை விட சீனாவின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பல மடங்கு அதிகமாகும். எண்ணிக்கை அடிப்படையில் சீன இராணுவம் முதலிடத்தில் உள்ளது. பொருளாதாரத்தில் வேகமாக வளர்கின்றது. அதன் அரசியல் ஸ்திரப்பாட்டுக்கும் பாரிய அச்சுறுத்தல்கள் நிகழவில்லை. எனவே சீனா தொடர்ந்தும் ஆசியாவின் மிகப் பெரும் வல்லரசாகவும் உலகப் பெரும் வல்லரசாகவும் தன்னை உருமாற்றி வருகின்றது.

தேசிய பொருளாதாரத்திற்கு வெளியே உலகின் முக்கிய சமுத்திரங்கள், துறைமுகங்கள் கரையோரங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சீனா இரண்டு பொருளாதார இலக்குகளை குறிவைக்கின்றது. ஏனைய நாடுகளிலுள்ள பொருளாதார வளங்களை சீனாவின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல். இரண்டாவது நீலப் பொருளாதாரத்தில் (Blue Economy) கவனம் குவித்தல்.

சமுத்திரங்களில் காணப்படும் மீன் உள்ளிட்ட எல்லையற்ற இயற்கை வளங்களை பொருளாதார அபிவிருத்திக்கு உச்சளவில் பயன்படுத்துவதும் அது சுற்றுச் சூழலை பாதிக்காத வகையில் பேண்தகு (Sustainable) அபிவிருத்தியை உறுதி செய்வதுமே பொதுவாக நீலப் பொருளாதாரம் எனப்படுகின்றது.

உலக வல்லரசுகளில் எதுவுமே இப்போது சீனா கவனம் செலுத்தியிருக்கும் அளவுக்கு நீலப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தவில்லை. இந்து சமுத்திரம் உள்ளிட்ட உலகின் வேறு சில சமுத்திர பிராந்தியங்களிலும் தனது தொழில்நுட்பத்தைக் கையாண்டு குறுகிய நேரத்தில் பல கொள்கலன் அளவு மீன்களை சீனக் கம்பனிகள் அள்ளிக் கொட்டுகின்றன. இதற்காகவும் தனது வர்த்தகச் சரக்குகளை ஏற்றுமதி செய்வதற்காகவும் எல்லைப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவும் சீனா தெற்கு, தென்கிழக்காசியாவின் பல்வேறு துறைமுகங்களை 100 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெறும் முதலீட்டுத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையின் தென்மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டை துறைமுகம், பாகிஸ்தான், பலுசிஸ்தான் மாகாணத்திற்குரிய கவாதர் துறைமுகம், பங்களாதேஷ் சிட்டகொங் துறைமுகம், மியன்மாரின் சித்வே துறைமுகம் உள்ளிட்டு ஜிபூத்தி, சூடான் வரை உள்ள அநேக துறைமுகங்களை சீனா ஏற்கனவே குத்தகை மூலம் கட்டுப்படுத்தி வருகின்றது. இவற்றின் கரையோர நாடுகளையும் தன்னாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. மறைமுகமாக அவை சீன ஆதரவு நாடுகளாக உள்ளன. அல்லது சீனாவின் ஆதிக்கப் பொறியில் சிக்கவைக்கப்பட்ட நாடுகளாக நீடிக்கின்றன.

சீனா இந்நாடுகளின் கரையோரங்களையும் கடற் பிராந்தியங்களையும் மட்டுமன்றி, அக்குறிப்பிட்ட நாடுகளில் பாரிய முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், மியன்மார் என்பவற்றில் சீனாவின் பொருளாதார முதலீட்டுத் திட்டம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அதிர்ச்சியூட்டும் அளவுக்குப் பாரியது.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் படிப்படியான இந்த வளர்ச்சி அமெரிக்க மற்றும் இந்திய நலன்களுக்கு அச்சுறுத்தல் என்று அவை கருதி வருகின்றன. அமெரிக்க ராஜாங்க திணைக்களம் இந்து சமுத்திர நாடுகள் குறித்த சீனாவின் இந்த வெளிநாட்டுக் கொள்கைக்கு முத்துமாலை மூலோபாயம் (String of Pearls Strategy) எனப் பெயர் வைத்துள்ளது.

சினமடைந்துள்ள அமெரிக்கா இப்பிராந்தியத்தில் சீனாவைத் தோற்கடிக்கும் தந்திரோபாயமொன்றைக் கையாள்கின்றது. அதற்கு தலையிடும் கொள்கை (Policy of Engagement) எனப் பெயர். இந்தியா சீனாவின் பகை நாடு என்பதால் அமெரிக்காவின் பகை நாடான சீனாவுக்கு எதிராக வொஷிங்டனுடன் கைகோர்த்துச் செயல்படுகின்றது.

**சீனாவின் தன்னிச்சையான ஆதிக்கம் எதிர்கால தெற்கு, தென்கிழக்காசிய கடல் வலயத்தில் உருவாக்கப் போகும் பாரிய சவால் குறித்த எச்சரிக்கை இப்போதே உலக நாடுகளுக்கு அவசியம். ஆனால், அதை அமெரிக்க அணுகுமுறையிலிருந்தோ மேற்கு நாடுகளின் அணுகுமுறையிலிருந்தோ தெற்காசிய நாடுகள் கையாண்டு விடக் கூடாது என்பதும் முக்கியம்.**



எல்லா நாடுகளும் வளர்ச்சியடைகின்ற, பாதுகாப்புப் பெறுகின்ற கடற்பிராந்தியமாக இந்து சமுத்திரம் இருக்க வேண்டும் என்பதுதான் (Security and Growth for all in the Region) என்பதுதான் இந்தியாவின் கொள்கை என்கிறார் நரேந்திர மோடி. ஆனால், சீனாவோ தனது பாட்டிற்கு வேகமாக முன்னேறிச் செல்கின்றது.

சீனாவின் எல்லையற்ற ஆதிக்கத்திற்கு இப்பிராந்தியத்தில் இன்று மிகப் பெரிய விலை கொடுத்திருப்பவர்கள் மியன்மாரின் மேற்குப் புறமாக உள்ள அரக்கான மாநில ரோஹிங்யர்கள். 2003 இல் மியன்மாரின் -குறிப்பாக அரக்கானில் பெற்றோலிய வளம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து சீனா உற்சாகமடைந்தது.

மியன்மாரின் கொக்கோ ஐலண்ட் எனப்படும் தீவில் கடற்படை தளமொன்றை உருவாக்கிய சீனா, பாரிய கண்காணிப்பு மையமொன்றையும் நிறுவியது. மியன்மார் அரசுக்கு இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை [illegible] ட்ரில்லியன் கியுபிக் அடி இயற்கை எரிவாயு இருப்பதாகவும் களஆய்வுகள் உறுதி செய்தன. விளைவாக, மேற்கு மியன்மார் நிலம் குறிப்பாக அரக்கான் மாநிலம் சீனாவின் பொருளாதார நலன்களுக்கு அவசியமாகியது.

அங்குள்ள பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவை அகழ்ந்தெடுத்து சுத்திகரிப்பதற்குத் தேவையான நிதி ஆதரவினை வழங்குவதோடு, பெற்றோலியத்தை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தமொன்றையும் சீனா மியன்மார் அரசாங்கத்துடன் மேற்கொண்டது. இதற்கு அரக்கானை அண்டியுள்ள சித்வே துறைமுகத்தை சீனா 100 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெற்றுள்ளது. அங்கிருந்து சீனாவின் யுனான் மாகாணத்திற்கு பெற்றோலியம் ஏற்றுமதி செய்யப்படும்.

சித்வே துறைமுகத்திற்கும் யுனானுக்கும் இடையிலான தூரம் 2300 கி.மீ. என்பதில் சீனாவுக்கு எந்தப் பிரச்சினையுமில்லை. எண்ணெய் சுத்திகரிப்புக்கு நில அடியிலுள்ள கனிமமும் சுத்திகரிப்பு ஆலைகளுக்கான பரந்துபட்ட நிலமும் சீனாவுக்குத் தேவை. இன்று பங்களாதேஷுக்கு இடம்பெயர்ந்துள்ள ஆறரை இலட்சம் மியன்மார் அகதிகள் பட்டினியால் இறந்துகொண்டிருப்பதற்கு சீனாவின் எல்லையற்ற இந்த ஆதிக்கப் போட்டியும் அதிகார மோகமும்தான் பிரதான காரணமாகும்.

சீனா இப்பிராந்தியத்தில் இன்னொரு திட்டத்தையும் நடைமுறைப்படுத்துகின்றது. அதற்கு பட்டி, மற்றம் பாதைத் திட்டம் (Belt and Road Initiative - BRI) எனப் பெயர். பண்டைய காலத்தில் காணப்பட்ட தரைவழி, கடல்வழி பட்டுப்பாதைகளின் அடிப்படையில் புதிதாக நில, கடல் பாதைகளை அமைத்து தனது பொருளாதாரத்தை வளர்க்கும் சீனத் திட்டமே இது.

... கடும் விமர்சனத்தை எழுப்பியுள்ளது.

2016/2017 ஆகிய ஆண்டுகளில் சிங்கப்பூரிலும் இலங்கையிலும் இடம் பெற்ற இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாடு சீனாவை தனிமைப்படுத்தும் நோக்கம் கொண்டவை. சர்ச்சைக்குரிய தென்சீனக் கடல், மற்றும் எல்லையில் இராணுவத்தை வலுப்படுத்தல் குறித்து பாரிய அதிருப்தியும் விமர்சனங்களும் இம்மாநாடுகளில் முன்வைக்கப்பட்டன.

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளைத் தாண்டி, பிரிட்டன் அமெரிக்கா அவுஸ்திரேலியா ஜேர்மன் ஆகியனவும் இவற்றில் இணைந்துகொண்டன. ஆனால் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை. இந்து சமுத்திர நாடுகளின் மூலோபாய நலன்களைப் பகிர்ந்து கொள்ளல், பொதுவான பொருளாதார இலக்குகளை அடைதல், எல்லைப் பாதுகாப்பை உறுதிசெய்தல், சுதந்திர வர்த்தகப் பரிமாற்றத்திற்கு சமுத்திரப் பாதைகளைப் பயன்படுத்தல், இருதரப்பு-பலதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் பிராந்தியக் கூட்டணிகளை உருவாக்குதல் என்பனவே பிராந்திய நாடுகளின் இந்து சமுத்திரம் குறித்த கொள்கையாக இருக்க வேண்டும் என இப்போது பரிந்துரைக்கப்படுகின்றது. சீனா இப்புள்ளியிலிருந்து ஏற்கனவே விலகி விட்டது.

1970 லூசாகாவில் இடம்பெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் இலங்கையின் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க முன்வைத்த கருத்தை அன்றைய அமெரிக்காவும் பிரான்ஸும் பிரிட்டனும் கடுமையாக எதிர்த்தன. இந்து சமுத்திர பிராந்தியம் சமாதான வலயமாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்பதே ஸ்ரீமாவின் கோரிக்கை. 1970 இல் பொதுச் சபை தீர்மானம் 2832 ஸ்ரீமாவின் கருத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், மேற்கு நாடுகள் அதை எதிர்த்தன. இன்று அதே கருத்தை அவை வலியுறுத்துகின்றன.

புவி அரசியல் நலன்களுக்கு ஏற்ப வல்லரசுகள் தமது ஆடுகளத்தை எவ்வாறெல்லாம் மாற்றி வருகின்றது என்பதற்கு இந்து சமுத்திர கடல் பிராந்தியம் குறித்த அவற்றின் கொள்கை தெளிந்த உதாரணமாகும். ஆதிக்கத்தின் முகம் உலகெல்லாம் ஒன்றுதான். அது அமெரிக்க ஆதிக்கமாக, இந்திய ஆதிக்கமாக, சீன ஆதிக்கமாக இருக்கலாம். சீனாவின் தன்னிச்சையான ஆதிக்கம் எதிர்கால தெற்கு, தென்கிழக்காசிய கடல் வலயத்தில் உருவாக்கப் போகும் பாரிய சவால் குறித்த எச்சரிக்கை இப்போதே உலக நாடுகளுக்கு அவசியம். ஆனால், அதை அமெரிக்க அணுகுமுறையிலிருந்தோ மேற்கு நாடுகளின் அணுகுமுறையிலிருந்தோ தெற்காசிய நாடுகள் கையாண்டு விடக் கூடாது என்பதும் முக்கியம்.

இந்த உலகத்தில் தேவையுள்ள எல்லோருக்கும் வளங்கள் உண்டு. ஆனால், பேராசை கொண்டவனுக்கு வளங்கள் இல்லை என்று காந்தி சொன்னது சீனாவுக்கு இன்றைக்கும் பொருந்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• ஹெட்டி ரம்ஸி



# சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை: இப்போது இன்றேல் எப்போது?

### சாய்ந்தமருது தரைதோற்றப் பின்னணி

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை நிர்வாக மாவட்டத்தின் கல்முனை தேர்தல் தொகுதியில் அமைந்துள்ளதொரு கிராமமே சாய்ந்தமருது. 9.25 சதுர கிலோமீற்றர் மொத்த நிலப் பரப்பளவை கொண்ட சாய்ந்தமருது கிழக்கே வங்காள விரிகுடாவின் கடற்கரையினாலும் மேற்கே கல்முனைக் குடியினாலும் சூழ்ந்துள்ளதொரு வர்த்தக நகராகவும் திகழ்கிறது. இங்கு முஸ்லிம்கள் மட்டுமே வாழ்கின்றனர். கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசமாக காணப்படுகின்ற சாய்ந்தமருதுக்கு தனியான பிரதேச செயலாளர் பிரிவுள்ளது. சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவிற்குள் 17 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடங்கியுள்ளன. 2010ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 7118 குடும்பங்களும், 25765 மக்கள் தொகையும், 16936 வாக்காளர்களும் காணப்பட்டனர். மக்கள் தொகையில் ஆண்கள் 50.4 வீதமும், பெண்கள் 49.6 வீதமும் பதிவாகியிருந்தனர். சாய்ந்தமருதில் தற்பொழுது 8390 குடும்பங்களில் 30442 பேர் வாழ்கின்றனர். இதில் 19014 பேர் வாக்காளர்களாக பதிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சாய்ந்தமருதில் 5 ஜூம்ஆ பள்ளிவாசல்கள் உள்ளடங்கலாக 23 பள்ளிவாசல்கள், ஒரு ஹிப்ளு மத்ரஸா, ஒரு அறபுக் கல்லூரி, ஒரு தேசியப் பாடசாலை உட்பட 8 பாடசாலைகள், கோட்டக் கல்வி அலுவலகம், அரச மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் தனியான பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பனவும் அமைந்துள்ளன. அத்தோடு, தபால் நிலையங்கள், பொதுச் சந்தை கட்டிடம், பெரியளவிலான வர்த்தக நிலையங்கள், நூலகங்கள், மாவட்ட வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், சமநல சேவைகள் நிலையம், சனசமூக அமைப்புக்கள், விளையாட்டு மைதானங்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண காரியாலயம் போன்றனவும் இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளன.

### சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை

சாய்ந்தமருது மக்களின் அரசியல் அடையாளத்தை பிரதிபலிக்கும் வகையிலும், கிராமிய அபிவிருத்தியை முன்னிறுத்தி செயற்படத்தக்க வகையிலுமாக ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாக சபை, சமூக சேவை அமைப்புகள், சமூக ஆர்வலர்களால் கடந்த 1988ஆம் ஆண்டிலிருந்து சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றம் வேண்டும் என்ற கோரிக்கை காலத்துக்கு காலம் முன்வைக்கப்பட்டு வருகின்றது. கரைவாகுப் பற்றுக்கு ஆங்கிலேயர் காலத்தில் கிரமசேவகர் பிரிவுகளுக்கு இலக்கமிடப்பட்ட போது சாய்ந்தமருதுக்கு கி.பி. 47 தொடக்கம் கி.பி. 53 வரையான 7 குறிச்சிகள் வகுக்கப்பட்டன. இவற்றினை உள்ளடக்கி 1928இல் ''கரைவாகு தெற்கு கிராமசபை'' உருவாக்கப்பட்டு 10 வட்டாரங்களாகவும் வகுக்கப்பட்டிருந்தன.

சாய்ந்தமருதில் நீண்டகாலமாக ''கரைவாகு தெற்கு கிராமாட்சி மன்றம்'' இயங்கி வந்தது. 1987ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரதேச சபைகள் சட்டத்தின் பின்பே இது கல்முனையுடன் இணைக்கப்பட்டு கல்முனை பிரதேச சபையின் எல்லைக்குள்ளானது.

அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருதின் சனத்தொகையை விட குறைந்த பல பிரதேசங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் பிரகாரம், 26,872 மக்கள் தொகையையும், 16,936 வாக்காளர்களையும் சாய்ந்தமருது கொண்டிருக்கும் போது 9015 மொத்த சனத்தொகையையும் 5772 வாக்காளர்களையும் கொண்ட லகுகலை, 19041 மொத்த சனத்தொகையையும், 11642 வாக்காளர்களையும் கொண்ட காரைதீவு, 21362 சனத்தொகையையும் 12648 வாக்காளர்களையும் கொண்ட நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களுக்கு பிரதேச சபை வழங்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் 17,965 மக்கள் தொகையையும் 13389 வாக்காளர்களையும் கொண்ட அம்பாறைக்கு கூட நகர சபை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சாய்ந்தமருதுக்கென்று தனியான உள்ளூராட்சி சபை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதாகும்.

### சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை நிறுவுவதில் சட்டப்பிரச்சினைகள் உள்ளதா?

சாய்ந்தமருது பிரதேசம் தற்போது கல்முனை மாநகர சபையின் ஆள்புல எல்லைக்குள் இருப்பதினால் அதிலிருந்து பிரித்தெடுத்து உள்ளூராட்சி மன்றத்தினை நிறுவுவதில் சட்டப் பிரச்சினைகள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தினை இவர்கள் ஆதாரமாக கொள்கின்றனர். இச்சட்டமானது பொதுவாக ஒரு பிரதேச சபையினை உருவாக்குவதற்கானது பற்றிப் பேசுகின்றதே தவிர, மாநகர சபையின் ஆள்புல எல்லைக்குள் உள்ள பகுதிகளை பிரித்தெடுத்து புதிதாக உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவது பற்றி அல்ல. இது தொடர்பில் மாநகர சபைகள் சட்டத்தில் தான் இதற்கான சட்ட ஏற்பாட்டை தேட வேண்டும். அப்படித் தேடும் போது பின்வரும் முடிவுகளை பெற முடியும். இதில் 4ஆவது இடம்பெறும் (D) விதி சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்தினை நிறுவுவதற்கு முற்று முழுதான சாதகத்தை கொண்டிருக்கின்றது.

உள்ளூராட்சி அமைச்சர் எந்த நேரத்திலும் பின்வரும் நோக்கங்களுக்காக ஒரு கட்டளையை பிறப்பித்து அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க முடியும்.

1. ஒரு மாநகர சபையின் எல்லைகளை மாற்றுதல் அல்லது ஒரு மாநகர சபையில் உள்ள வட்டாரத்தின் எல்லைகளை மாற்றுதல்.
2. ஒரு மாநகர சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை மாற்றுதல்.
3. புதியதொரு மாநகர சபையை உருவாக்கும் நோக்கில் நடைமுறையில் இருக்கும் ஒரு மாநகர சபையை கலைத்தல் மற்றும் நடைமுறையில் இருக்கும் மாநகர சபையை திருத்துவதன் மூலம் புதியதொரு மாநகர சபையை உருவாக்குதல்.
4. வேறு ஒரு விதமான உள்ளூராட்சி அமைப்பினை அவ்விடத்தில் அமைத்தல்.

இது 1947ஆம் ஆண்டின் மாநகர சபைச் சட்டம் 29இல் 284ஆம் சரத்திற்கான 1977ஆம் ஆண்டின் 24ஆவது சட்டத் திருத்தத்தில் காணப்படுகின்றது. சாய்ந்தமருதுக்கென தனியான உள்ளூராட்சி மன்றத்தினை நிறுவுவதில் எந்தவிதமான சட்ட சிக்கல்களும் இல்லை. சாய்ந்தமருது பிரதேச செயலக ஆள்புல எல்லையை கல்முனை மாநகர சபையின் ஆள்புல எல்லையிலிருந்து பிரித்தெடுப்பதற்கு இலகுவாகவே அதன் எல்லைகள் அமைந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி மன்றம் கோருவது என்பது அந்தப் பிரதேச மக்களின் அடிப்படை உரிமையாகவும் உள்ளது. உள்ளூராட்சி சபையொன்றை நிறுவும் விடயம் உள்ளூராட்சி மன்றச் சட்டத்தின் அடிப்[illegible] இதுகாலவரை நடைமுறையிலிருந்து வருகின்ற நடப்பியல் அரசியல் நோக்கிலும் குறித்த உள்ளூராட்சி அமைச்சருக்கான அதிகாரமாகவே இருந்து வருகின்றது. இந்த அடிப்படையில் இதுவொரு அமைச்சரவை பத்திரத்தின் ஊடாகவும் மற்றும் அதற்கென்று நிறுவப்படுகின்ற ஆணைக் குழுவின் அடிப்படையிலும்தான் நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்பது கட்டாயமானதல்ல என்பதை எமது நாட்டில் உருவாக்கப்பட்ட பல உள்ளூராட்சி மன்றங்கள் தாபிக்கப்பட்ட கோணங்களிலிருந்து உணர முடியும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு உதாரணங்களாக கல்முனை பிரதேச சபை நகர சபையாகவும் பின்னர் மாநகர சபையாகவும் தரமுயர்த்தப்பட்டமை, காரைதீவு மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டமை, அக்கரைப்பற்று - கருங்கொடித்தீவு பிரதேச சபை என இருந்த பிரதேச சபை பிரிக்கப்பட்டு ஒரு மாநகர சபையும், இன்னுமொரு பிரதேச சபையுமாக மொத்தம் இரண்டு சபைகளாக பிரிக்கப்பட்டமை போன்ற பல்வேறு உதாரணச் சான்றுகளை முன்வைக்கக் கூடியதாகவும் உள்ளன.

இன்றைய கல்முனை மாநகர சபையினுள் சாய்ந்தமருது தவிர்ந்த ஏனைய முஸ்லிம் பிரதேசங்களில் மொத்தமாக முஸ்லிம் சனத்தொகை 2016ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, 50,557 பேரும், 30,888 வாக்காளர்களும் இருப்புக் கொண்டுள்ளனர்.

அதேநேரம் கல்முனை மாநகர சபை எல்லையினுள் வாழ்கின்ற மொத்த தமிழ் மக்களின் சனத்தொகை 36,416 ஊம் வாக்காளர்களின் தொகை 21,012 உம் ஆகும். இந்த வகையில் சாய்ந்தமருது தனியாகப் பிரிந்து போவதனால் கல்முனை மாநகரசபை அரசியல் அதிகாரம் முஸ்லிம்களிடம் இருந்து பறிபோய் விடும் என்பதில் எவ்விதமான உண்மைகளுமில்லை.

### சாய்ந்தமருது பிரதேச சபைக்கான வாக்குறுதிகள்.

ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராவதற்கு முன்னர் (1999இல்) சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை ஆதரித்துக் கொண்டாலும் அவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரானதற்குப் பின்னர் இதற்கு மாறாகவே செயற்பட்டுக் கொண்டுள்ளார். சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றக் கோரிக்கை நியாயமானது என முன்னர் பாராளுமன்றத்தில் உரைத்த ரவூப் ஹக்கீம் இது விடயத்தில் அக்கறை காட்டவில்லை. அவர் நினைத்திருந்தால் அவர் கட்சி சார்ந்த அமைச்சர் பஷீர் சேகுதாவூத் மாகாண சபைகள் உள்ளூராட்சி இராஜாங்க [illegible] பயன்படுத்தி இதனைச் சாத்தியப்படுத்தியிருக்க முடியும். இதனைத் தவிர்த்திருப்பதே இக்கோரிக்கையில் அவருக்குள்ள பின்வாங்கலை கோடிட்டுக் காட்டப் போதுமானது.

கடந்த 2015.04.5 ஆம் திகதி சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது ''சாய்ந்தமருது மக்களின் தேவை தனியான நகரசபை என்றால் அதனைப் பெற்றுத் தருவதற்கு தயக்கம் காட்ட மாட்டோம்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

ரவூப் ஹக்கீமின் இந்தக் கூற்று சாய்ந்தமருது மக்களிடையேயும் ஜும்ஆ பள்ளி நிர்வாகத்தினரிடையேயும் அதிகரித்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியது.

இதனையடுத்து ஜும்ஆ பள்ளிவாசல் சார்ந்த குழுவினர் 10.04.2015 இல் அமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்து சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சிக் கோரிக்கையை வலியுறுத்தினர். இக்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் ஹக்கீம், சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளி வாசல் சார்ந்த குழுவினரை 22.04.2015 அழைத்துச் சென்று பொதுநிர்வாக உள்ளூராட்சி மாகாண அமைச்சர் கரு ஜயசூரியவை சந்தித்து இது குறித்து கலந்துரையாடினார்கள்.

அமைச்சர் இக்கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்ததுடன், கையளித்துள்ள ஆவணங்களுடன் பின்வரும் 3 ஆவணங்களும் அவசியமானது எனத் தெரிவித்தனர். 1. கோரிக்கை பத்திரம் பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக சமர்ப்பிக்குமாறும் 2. கல்முனை மாநகர சபையின் சம்மதக் கடிதம் 3. கிழக்கு மாகாண முதலமைச்சரின் சம்மதக் கடிதம். இதில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீமின் சிபாரிசுடன் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் சிபாரிசுடன் கூடிய கடிதம் கருஜயசூரிய அமைச்சராக இருந்த காலத்திலேயே கையளிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு கடிதங்களும் அமைச்சர் கரு ஜயசூரியவின் பதவிக் காலம் வரை உள்ளூராட்சி மாகாண அமைச்சுக்கு சேர்ப்பிக்கப்படவில்லை. இதில் கிழக்கு மாகாண முதலமைச்சரின் கடிதத்தினை இன்றைய பிரதியமைச்சர் ஹரீஸ் பெற்றுத் தருவதாகவும் மாநகர சபைக் கடிதத்தினை சாய்ந்தமருதை சேர்ந்த கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் 4 பேரும் பெற்றுக் கொள்வது என்றும் முடிவாகி இருந்தும் கூட அது நடைபெறவில்லை. அதேநேரம் சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசல் குழு மீண்டும் அமைச்சர் ஹக்கீமை 01.05.2015 இல் சந்தித்து மேற்படி மேற்படி இரண்டு சம்மதக் கடிதம் பெறும் நடவடிக்கை மந்தகதியில் இருப்பதை சுட்டிக்காட்டினர். இதன் போது அமைச்சர் ஹக்கீம் கல்முனை மாநகர சபை சம்மதக் கடிதத்தினை தான் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தார். ஆயினும் அதுகூட அன்று நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் 2015இல் பொதுத்தேர்தல் பிரகடனம் செய்யப்பட்டது. இதனால் சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை கோரிக்கை பின்தள்ளப்பட்டது.

07.08.2015 இல் வாழைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட எழுச்சி மாநாடு நடைபெற்றது. அதில் சில பிரகடனங்கள் முன்மொழியப்பட்டன. அதில் ஒன்று பின்வருமாறு காணப்பட்டது. ''சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனியான பிரதேச சபையை தேர்தலை தொடர்ந்து பிரகடனப்படுத்துவோம்'' 09.08.2015 இல் கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் உரையின் ஓரிடத்தில் ''ரவூப் ஹக்கீமும் கரு ஜயசூரியவும் பேசி எடுத்துள்ள முடிவுக்கு அமைய சாய்ந்தமருது மக்களின் நீண்டகால கோரிக் கையாக உள்ள சாநய்தமருதுக்கான பிரதேச சபையை ஏற்படுத்துவோம்'' எனக் குறிப்பிட்டார்.

கடந்த 17.08.2015இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் கல்முனைத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி 24,992 வாக்குகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 8549 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 726 வாக்குகளையும் பெற்றிருந்தன. இதில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து தேசிய காங்கிரஸும் போட்டியிட்டன. இங்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்துப் போட்டியிருந்தது.

அமைச்சர் ஹக்கீம் கடந்த 01.10.2015 இல் தற்போதைய உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவினை சந்தித்து சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை தொடர்பில் பேசியதுடன், இக்கோரிக்கையில் தனது வேண்டுகோள் கடிதத்தையும் கையளித்துள்ளார். இதன் போது சாய்ந்தமருது உள்ளூராட்சி சபை தருவதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்ததாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தரப்பால் வெளிப்படுத்தப்பட்டது. ஆகவே, 100 நாள் நல்லாட்சியில் பெற்றுக்கொள்ள வேண்டிய சாய்ந்தமருது உள்ளூராட்சி சபையை 200 நாட்கள் நீடித்திருந்த ஆட்சியில் கோட்டை விட்டது போன்று இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் நல்லாட்சிக்குரிய தேசிய அரசாங்கத்திலும் இக்கோரிக்கை மழுங்கடிக்கப் பட்டுள்ளது.

21.10.2016 இல் சாய்ந்தமருதில் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், பைஸர் முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்ட வைபவ மொன்றில் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை நான் தருவேன். அதில், சந்தேகப்படத் தேவையில்லை என்ற கருத்தை அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்திருந்தார். கடந்த 2017 ஆகஸ்ட் மாதம் விரைவில் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்றம் பிரகடனப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் ஹக்கீம் மற்றும் பிரதியமைச்சர் ஹரீஸ் வெவ்வேறான இரு வைபவங்களில் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் உட்பட்ட குழுவினர் 14.08.2017 இல் அமைச்சர் பைசர் முஸ்தபாவை கொழும்பில் சந்தித்து சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றம் சம்பந்தமாக கலந்துரையாடிய பின்னர் எதிர்வரும் 28.08.2017 இல் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி மன்ற அறிவிப்பு வர்த்தமானியில் வெளிவர இருப்பதாக செய்தி பரப்பப்பட்டது.

28 ஆகஸ்ட் 2017இல் வர்த்தமானி பத்திரிகை அறிவித்தல் வெளிவர இருப்பதாகவும் கதை பேசப்படுவது உக்கிரமடைந்ததன் காரணமாக கல்முனைக்குடி சமூகத்திலிருந்து குறித்த சிலர் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளிவரக் கூடாது என்றும் அவ்வாறு நடைபெற்றால் அது கல்முனை நகரத்தை முஸ்லிம்களிடமிருந்து கைநழுவி விடும் என்ற அச்சத்தையும் முன்வைத்து ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் மற்றும் பைஸர் முஸ்தபா ஆகியோரிடம் சென்று முறையிட்டதன் காரணமாக சாய்ந்தமருது உள்ளூராட்சி மன்றத்துக்கான அறிவித்தல் தடைப்பட்டது. இதற்கிடையில் இவர்கள் பிரதமரை சந்திக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடவில்லை.

எனவே, தற்பொழுது உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்று முடிந்துள்ள நிலையில் மக்கள் இந்தக் கோரிக்கைக்கு செவி சாய்க்காத தலைவர்களுக்கு தகுந்த பாடத்தை புகட்டியுள்ளனர். எதிர்வரும் காலத்திலாவது இந்த மக்களின் கோரிக்கைக்கு ஆளும் தரப்பு செவிசாய்க்க வேண்டும்.

தகவல் உதவி:
எம்.எம்.எம். நூறுல் ஹக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# கழிவுப் பொருட்களாலான நவீன நுணுக்குக்காட்டியின் பிதா
# என்.எம். டிலாஸ்

நஜீப் மொஹம்மட் டிலாஸ் அட்டாளைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்டவர். M.A.C. நஜீப் - A.B. ரபீகா தம்பதிகளின் செல்வப் புதல்வரான டிலாஸ், கழிவுப் பொருட்களைக் கொண்டு செலவில்லாது தயாரிக்க முடியுமான ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்துள்ளார்.

அது ஒரு நுணுக்குக் காட்டி. ஆனால், சாதாரண நுணுக்குக் காட்டி அல்ல. மாறாக உயிரணுக்களையும், கலங்களையும் மிகத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டும் ஒரு கருவி. இதற்கு நவீன கலக் காட்டி என்று அவர் குறிப்பிடுகின்றார். இரவு நேரங்களிலும் இதன் மூலம் தெளிவாக அவற்றை அவதானிக்க முடிகின்றமை விஷேட அம்சமாகும்.

மனித வெற்றுக் கண்ணுக்குப் புலப்படாத பற்றீரியா, வைரசு போன்ற சிறிய அல்லது நுணுக்கக் கூறுகளைப் பெரிதாகக் காட்டி, மனிதக் கண்களால் அவதானிக்கக் கூடியவாறு செய்ய உதவும் கருவியாகவே நுணுக்குக் காட்டிகள் விளங்கினாலும், சாதாராண நுணுக்குக் காட்டியில் பாவிக்கப்படும் வெள்ளொளியின் தெளிவுத் தன்மையில் தான் கண்ட குறைபாட்டை நிவர்த்திக்க நீளொளி மூலம் இதன் துல்லியத் தன்மையை தான் அதிகரித்ததாகவும் வில்லைகளுக்கு இடையிலான இடைவெளியை குறைப்பதன் மூலமும் இது சாத்தியமானதாகவும் N.M. டிலாஸ் குறிப்பிடுகின்றார்.

வரலாற்றை நோக்குமிடத்து, 1590 ஆம் ஆண்டு நெதர்லாந்தில் ஹான்ஸ் ஜேன்சன் (Hans Janssen) மற்றும் அவரது மகன் ஸக்கரியாஸ் ஜேன்சன் (Zacharias Janssen) ஆகிய மூக்குக் கண்ணாடி தயாரிப்போர்




முதல் கூட்டு நுணுக்குக் காட்டியை உருவாக்கினார்கள். கலிலியோ கலிலி (Galileo Galilei 1564-1642) 1609-1624 ஆம் ஆண்டுப் பகுதிகளில் குழிவு, குவிவு வில்லைகளைப் பயன்படுத்தி கூட்டு நுண்நோக்கியை உருவாக்கி, பூச்சிகளின் கூட்டுக் கண்களை ஆராய்ந்தார். 1625 இல் 'Microscope' (நுண்நோக்கி) என்னும் பெயரை ஜேர்மனிய மருத்துவரான கியோவான்னி ஃபாபெர் (Giovanni Faber) என்பவர் இட்டார். மார்செலோ மல்பிஜி (Marcello Malpighi, 1628-1694) எனும் இத்தாலிய உடற் கூற்றியல், இழையவியல் ஆராய்ச்சியாளர் நுணுக்குக் காட்டியை உபயோகப்படுத்தி விலங்குகளின் இழைய அமைப்புக்களை ஆராய்ச்சி செய்தார், சில உள்ளுறுப்புக்களின் இழைய அமைப்பு இவரது பெயரால் அழைக்கப்படுகின்றது (தோலில் உள்ள மல்பிஜியின் படை).

ரொபட் கூக் (Robert Hooke, 1635 - 1703) எனும் ஆங்கிலேய நுணுக்குக் காட்டி ஆராய்ச்சியாளர் 1665 - 1667 இல் தான் உருவாக்கிய கூட்டு நுணுக்குக் காட்டியால் தக்கைக் கலங்களின் மெல்லிய பகுதியினை ஆராய்ந்தார். இவற்றில் நோக்கிய தேன்கூடு போன்ற சிறுசிறு பகுதிகளுக்கு 'Cell' (கண்ணறை) என்று பெயரிட்டார், இவ்வார்த்தையே இன்று ஆங்கிலத்தில் செல் என்று உயிரணுக்களை அழைக்கப் பயன்படுகின்றது.

அன்டன் வான் லீவன்கோக் (Anton van Leeuwenhoek, 1632-1723) நுணுக்குக் காட்டியின் தரத்தை உயர்த்தி அதனது உருப்பெருக்கத்தையும் உயர்த்தினார்;



படம்: டிலாஸின் நவீன கலக் காட்டியால் 2000 மடங்கு பெரிதாக்கப்பட்ட வெங்காய செல்கள்

தனி உயிரணுக்களை விரிவாக ஆராய்ந்தார்; இவரே முதன் முதலில் பக்டீரியாக்கள் பற்றி ஆராய்ந்தவர் ஆவார். இன்று தொழில்நுட்ப வளர்ச்சியால் பல்வேறு விதமான நுணுக்குக் காட்டிகள் பயன்பாட்டில் உள்ளன.

நுணுக்குக் காட்டியின் மூலமாக பொருள்களைப் 10 மடங்கிலிருந்து 100 மடங்கு வரை பெரிதுபடுத்தலாம். ஆனால் டிலாஸின் நவீன நுணுக்குக் காட்டி மூலம் 2000 மடங்கு வரை பெரிதாக்கி அவதானிக்க முடியும்.

அட்டாளைச்சேனை தேசிய கல்லூரியில் க.பொ.த. உயர் தர விஞ்ஞானப் பிரிவில் தற்போது கற்றுவரும் டிலாஸின் இவ் அரிய கண்டுபிடிப்பை பாடசாலைச் சமூகம் அதிபர் A.L. அன்வர் தலைமையில் விஞ்ஞானப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் S.L. பாஹிம், சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் K. கமலநாதன் உள்ளிட்ட ஆசிரியர் குழாத்துடன் இணைந்து விமர்சையாகக் கொண்டாடியது. டிலாஸின் தந்தை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கிழக்குப் பிராந்திய பணிப்பாளர் என்பதுடன் சிறந்த சமூக சேவகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

டிலாஸின் கண்டுபிடிப்புக்குக் கிடைத்த அங்கீகாரத்தை அடுத்து நோக்குவோம். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் Sri Lanka Association for the Advancement of Science (SLAAS) இனால் இளம் கண்டுபிடிப்பாளர்களுக்காக தேசிய மட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் தங்கப் பதக்கம் வென்று வெற்றி வாகை சூடினார் இளம் கண்டுபிடிப்பாளர் டிலாஸ். அத்தோடு நின்றுவிடாமல் தனது கண்டுபிடிப்பை மேலும் விரிவாக்குவதில், மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றார் அவர். இன்னும் பல கண்டுபிடிப்புக்களை தன்னால் வெளிக்கொணர முடியும் என்கிற நம்பிக்கையுடன் செயற்பட்டும் வருகின்றார்.


பாடசாலையில் சகல பாடங்களிலும் திறமை காட்டும் டிலாஸ், விஷேட திறமையை விஞ்ஞான பாடத்தில் (பௌதிகவியல்) காட்டி வருகின்றார். இதனால் மாவட்ட மட்டத்திலும் அவர் மிளிர்ந்துள்ளார். இவரது நவீனமயமாக்கப்பட்ட கண்டுபிடிப்புக்கு இது ஒரு வித்து.

"இறைவனுக்கே புகழனைத்தும், அல்ஹம்துலில்லாஹ்! பாடசாலை அதிபர், விஞ்ஞான பாட ஆசிரியர்களான K. கமலநாதன், ரஸீல், நவாஸ், சியாத் சேர் ஆகியோர்க்கு நன்றி செலுத்த நான் கடமைப்பட்டவன்" என டிலாஸ் குறிப்பிடுகின்றார்.

எல்பர்ட் ஐன்ஸ்டீனை தனக்கு மிகவும் விருப்பமான விஞ்ஞானியாகக் குறிப்பிடும் டிலாஸ், எதிர்காலத்தில் வானூர்தி மற்றும் விண்வெளி பொறியியல் துறையை தெரிவு செய்து கற்கும் ஆவலில் உள்ளார். விசாலமான அவரது இலக்குகள் உண்மையில் போற்றுதலுக் குரியவை.

# பள்ளிவாசல்களை உயிரோட்டம் மிக்கவையாக மாற்றுவதற்கான வேலைத் திட்டத்தின் தேவை

• இப்னு மரைக்கார்



இலங்கையானது இந்து சமுத்திரத்திலுள்ள ஒரு அழகிய ஒரு தீவாகும். இத்தீவில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். என்றாலும் இது நீண்ட வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு நாடு. இந்நாட்டில் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய இனங்களைச் சேர்ந்த பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் ஆகிய மதங்களைப் பின்பற்றுகின்ற மக்கள் வாழுகின்றனர். சிங்களவர்கள் இந்நாட்டில் பெரும்பான்மையினராக உள்ள போதிலும் 20 இலட்சம் மக்களைக் கொண்ட முஸ்லிம்கள் இந்நாட்டின் இரண்டாவது சிறுபான்மையினராக உள்ளனர்.

என்றாலும் பிராந்திய மற்றும் உலகலாவிய ரீதியில் சமூக, கலாசார, பொருளாதார ரீதியில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஏற்ப தோற்றம் பெறுகின்ற பலவிதமான சமூகக் கலாசார பாதிப்புக்களும், சீர்கேடுகளும் இந்நாட்டினுள்ளும் வந்து சேரவே செய்கின்றன. அவை இந்நாட்டிலுள்ள எல்லா சமூகங்களிலும் சமூக, கலாசார, பொருளாதார ரீதியிலான தாக்கங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளன. இப்பாதிப்புக்களும் தாக்கங்களும் அண்மைக் காலமாகப் பெரிதும் அதிகரித்துள்ளன. இது ஒரு சமூகத்திற்கு மாத்திரமுரிய பிரச்சினையும் அல்ல. இப்போது தோற்றம் பெற்றுள்ள தாக்கங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் முக்கிய பங்காற்றுவது போதைப் பொருட்கள் துஷ்பிரயோகமாகும்.

குறிப்பாக கஞ்சா, கேரளா கஞ்சா, மாவா மற்றும் போதை தரும் மாத்திரைகள், பாக்கு வகைகள் உள்ளிட்ட பல போதைப்பொருட்கள் இவற்றிலடங்கும். இப்போதைப் பொருட்களின் கடத்தல், விற்பனை, பாவனை என்பன அதிகரித்துள்ளதோடு அவற்றின் விற்பனையும் பாவனையும் இல்லாத கிராமங்களை விரல் விட்டெண்ணி விடக் கூடிய அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. அந்தளவுக்கு போதைப் பொருட்கள் துஷ்பிரயோகம் வளர்ச்சி பெற்றுள்ளது. இது சமூகத்திற்கு ஆரோக்கியமான நிலைமை அல்ல.

அதனால் இப்பாதிப்பு சீரழிவுகளில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் நோக்கிலான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சட்டம் ஒழுங்கை நடைமுறைப் படுத்தும் நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன. அத்தோடு இப்பாதிப்புக்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காகவும் அவர்களை விடுவிப்பதற்காகவும் அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இருந்தபோதிலும் சில பாதிப்புகளும், தாக்கங்களும் கட்டுக் கடங்காத நிலையைத் தாண்டி தலைக்கு மேல் வெள்ளம் செல்லும் நிலையை அடைந்துள்ளது.

அண்மையில் மஜிஸ்ரேட் நீதிமன்றமொன்றின் பதில் நீதிவான் ஒருவர் தெரிவித்துள்ள தகவல் அதிர்ச்சிகரமானது. அவர் கடமையாற்றும் நீதிமன்றத்திற்கு கேரளா கஞ்சா பாவித்தவர்கள், விற்பனை செய்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நாளொன்றுக்கு 10 க்கும் 15 க்கும் இடைப்பட்டோர் வழக்கின் நிமித்தம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு ஆஜர்படுத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்தளவுக்கு இப்போதைப்பொருள் பாவனை இந்நாட்டு இளைஞர்கள் மத்தியில் பரவியுள்ளது. இவை சமூக, கலாசார, பொருளாதார ரீதியிலான பலவிதப் பிரச்சினைகளுக்கும் குறிப்பாக வறுமை அதிகரிக்கவும் வழிவகுத்துள்ளன.

அதேநேரம் இப்போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களும் பாதிப்புக்களும் இந்நாட்டு முஸ்லிம்களையும் விட்டு வைக்க வில்லை. அவர்கள் மத்தியிலும் அவற்றின் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளன. அத்தோடு ஏனைய சமூகங்களைப் போன்று இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியிலும் விவாகரத்து அதிகரித்து காணப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு சமூக கலாசார பாதிப்புகள் சமூகங்களுக்குள் பரவியுள்ளன.

இப்பாதிப்புக்களிலிருந்து மக்களை விடுக்க முடியும். அதற்கு ஒன்று விழிப்புணர்வூட்டல் மற்றையது தவிர்ப்பதற்கான கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் என்பன மிகவும் அத்தியாவசியமானது.

அந்த வகையில் 1000 வருடங்களுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் இந்நாட்டு முஸ்லிம்களுக்கென இன்று 2500 க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் நாடெங்கிலுமுள்ளன. இப்பள்ளிவாசல்கள் ஒவ்வொன்றும் நிர்வாக சபைகளைக் கொண்டிருக்கின்றன. ஆரம்ப காலம் முதல் இந்நாட்டு முஸ்லிம்கள் பெரும்பான்மைச் சமூகங்களுக்குள் கரைந்து செல்லப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு இஸ்லாத்திற்கு அடுத்தபடியாக பள்ளிவாசல்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு அளப்பரியது.

இற்றைக்கு 30, 40 வருடங்களுக்கு முன்பு வரையும் ஊர் மட்டங்களில் தோற்றம் பெற்ற சமூக, கலாசார, பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பள்ளிவாசல்கள் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டன. அவற்றின் பயனாக முஸ்லிம் [illegible] புக்கள் பெரிதும் குறைவடைந்திருந்தன. எனினும் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாக பள்ளிவாசல்கள் தொழுகைக்கான ஒரு இடம் மாத்திரம் தான் என்ற பார்வை தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் ஐவேளைத் தொழுகை தவிர்ந்த நேரங்களில் பெரும்பாலும் பள்ளிவாசல்கள் இழுத்து மூடி வைக்கப்படுகின்றன. இது பள்ளிவாசல் கட்டமைப்பின் நோக்கத்திற்கு பொறுத்தமானதா என்பதை சிந்திக்க வேண்டிய தேவையைத் தோற்றுவித்துள்ளது.

ஏனெனில் இஸ்லாத்தின் பார்வையில் பள்ளிவாசல்கள் உயிரோத்துடன் இருக்க வேண்டியவை. இருந்தும் தற்போது இந்நாட்டு பள்ளிவாசல்களின் சமூக, கலாசார, பொருளாதார ரீதியிலான செயற்பாடுகள் அனைத்தும் பெரும்பாலும் செயலிழந்துள்ளன.

ஆனால் ஒவ்வொரு பள்ளிவாசலுக்கும் நம்பிக்கையாளர் சபை இல்லாமலில்லை. ஆயினும் கடந்த காலத்தில் நம்பிக்கையாளர்கள் சபைகள் முன்னெடுத்த வேலைத்திட்டங்களிலிருந்து தற்போதைய நம்பிக்கையாளர் சபைகள் பெரும்பாலும் நீங்கியுள்ளன.

இன்றைய காலகட்டத்தில் நம்பிக்கையாளர்கள் சபை என்பது பள்ளிவாசலின் இமாம், முஅத்தின் ஆகியோருக்கு மாதாந்த சம்பளம் வழங்குதல், பள்ளிவாசலின் வருமானத்தை பராமரித்தல், பள்ளிவாசலை அவ்வப்போது வர்ணம் பூசி அழகுபடுத்துதல், பள்ளிவாசலின் நீர், மின்சாரக் கட்டணங்களை மாதாந்தம் செலுத்துதல் ஆகிய பணிகளைத் தான் பெரும்பாலும் செய்து வருகின்றன. சில பள்ளிவாசல் நிர்வாகங்கள் மாத்திரம் தான் விதிவிலக்காக சில சமூக மேம்பாட்டு பணிகளை வரையறுக்கப்பட்ட அளவில்தான் மேற்கொள்கின்றன.

இருப்பினும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் என்பது சமூகத்திலும், நாட்டிலும், கௌரவத்தையும் மரியாதையும் செல்வாக்கையும் பெற்றுக்கொடுக்கின்ற ஒரு பதவியாகவே விளங்குகின்றது. அதனால் அதனை அடைந்து கொள்வதில் காட்டுகின்ற ஆர்வத்தை அப்பதவியின் ஊடாக ஆற்றப்பட வேண்டிய சமூக நலன்கள் சார்ந்த பணிகளில் பெரும்பாலானவர்கள் காட்டுவதில்லை. பள்ளிவாசல்கள் சமூக, கலாசார பணிகள் தொடர்பில் மக்களிடமிருந்து தூரப்படுத்தப்பட்டு இருப்பதால்தான் சமூக, கலாசார, பொருளாதார ரீதியிலான தாக்கங்களும் பாதிப்புகளும் பெரிதும் அதிகரித்திருக்கின்றன.

ஆனால் இந்நாட்டின் சமூக, கலாசார, பொருளாதார மேம்பாட்டிற்காக பள்ளிவாசல்களும் பங்களிப்பு வேண்டும். அதற்கு ஏற்ப வேலைத்திட்டங்களை வகுத்து செயற்படுத்துவது மிகவும் அவசியமானது. குறிப்பாக போதைப் பொருள் துஷ்பிரயோகக் கட்டுப்பாட்டுக்காக நாட்டில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படலாம். இவ் விடயத்தில் பள்ளிவாசல்கள் கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக ஒரு கிராமத்தில் போதைப்பொருள் பாவனை, விற்பனை காணப்படுகின்றது என்றால் அதனைக் கட்டுப்படுத்த பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையால் முடியாத காரியமல்ல. அதனை அவர்கள் சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களோடு இணைந்துகூட மேற்கொள்ள முடியும். பள்ளிவாசல்கள் தொழுகைக்கான இடம் மாத்திரமுரியது என்ற நிலையிலிருந்து சமூக கலாசார பொருளாதார மேம்பாட்டுக்கு பங்ளிப்புச் செய்யும் தளங்களாகவும் அவை மேம்படுத்த வேண்டும். இது காலத்தின் மிக் அவசியத் தேவையாகும்.


ஆகவே பள்ளிவாசல்கள் நாட்டின் சமூக, கலாசார, பொருளாதார மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முஸ்லிம் சமய கலாசார அமைச்சு நேரடியாகவோ அல்லது முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஊடாகவோ அல்லது வக்பு சபையின் ஊடாகவோ வழங்கி அவை தொடர்பான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது மிகவும் அவசியமானது. இதை விடுத்து பள்ளிவாசல்களை தனியே தொழுகைக்கான இடம் மாத்திரம் தான் என்ற நிலைக்கு குறுக்கி விடுவது இஸ்லாத்திற்கும் இந்நாட்டுக்கும் செய்கின்ற பெரும் துரோகமாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் செயற்பாட்டில் பெண்களின் வகிபாகம் பற்றிய ஷரீஆவின் நிலைப்பாடு



• முஹம்மத் பகீஹுத்தீன்




நன்மையை ஏவுதலும் தீமையைத் தடுத்தலும் ஆண் பெண் இரு பாலாரதும் இணைந்த செயற்பாடு என்பதே அல்குர்ஆனிய சிந்தனையாகும்.

நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலும் ஸஹாபாக்களின் வாழ்வு முறையும் இதற்கு நடைமுறை வடிவம் கொடுத்துள்ளதை நம்பகமான அறிவிப்புக்களில் பரவலாகக் காண முடியும்.

எனவே இலங்கை மண்ணிலும் உயர்ந்த விழுமியங்களைக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதில் பெண்ணின் பங்களிப்பை எவரும் மறுக்கவோ குறைத்து மதிப்பிடவோ முடியாது.

அவள் தனது சமூக எழுச்சிப் பாதையில் முழுமையான பங்களிப்பை வழங்குவதற்கு இடமளிக்கப்படுவதே நபிவழியாகும்.

பெண் ஆணின் சரிபாதி என்பது நபி வாக்காகும். அவளும் உரிமை கடமைகளில் சமபொறுப்புள்ளவள். ஆனால் அவளது வகிபங்கு ஆணை விட சற்று வித்தியாசமானது எனப் புரிந்து கொள்வது பெண்ணுக்கு இஸ்லாம் வழங்கும் விசேட கௌரமாகும்.

அந்தவகையில் ஒரு பெண்ணின் வகிபங்கு இரண்டு முக்கிய பரப்புக்களில் காணப்படுகிறது.

முதலாவது அவளது குடும்பம். அங்கு அவள் மனைவி, தாய் என்ற பெண்ணுக்கேயுரிய அதிஉன்னதமான பாத்திரங்களை வகிப்பதன் மூலம் பொறுப்புமிக்க ஒரு குடும்பத்தின் அச்சாணியாய்த் திகழ்கின்றாள்.

இரண்டாவது சமூகப் பரப்பு. இங்கு ஒரு பெண் தனக்குரிய ஒழுக்க விழுமியங்களைப் பேணி, அரசியல், கல்வி, கலாசாரம், பொருளாதாரம் என சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் தனது பங்களிப்பை எடுப்பாக வழங்குவாள்.

அதில் அவளுக்கு எந்தத் தடையும் விதிக்கப்பட முடியாது. ஆனால் இந்த இரண்டு பரப்பிலும் அவள் சமநிலை பேண வேண்டும் என்பதே முக்கியமானது.

அண்மைக் காலமாக பெண்களின் அரசியல் செயற்பாடு குறித்து ஒடுங்கிய சிந்தனைப் பதிவுகள் அல்லது பிழையான புரிதலின் அடிப்படையில் எழுந்த கருத்துக்கள் சமூக வலைத்தளத்தில் பகிரப்படுவதை அவதானிக்க முடிந்தது.

எனவே அரசியல் செயற்பாட்டில் அவளது பங்களிப்பு சம்பந்தமாக மிகச் சுருக்கமான சில குறிப்புக்களை வழங்குவதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும்.

ஆணைப் போலவே பெண்ணும் சமபொறுப்புள்ளவள் என்பது இஸ்லாத்தின் அடிப்படையான சிந்தனையாகும். அரசியல் போராட்டமும் அதில் அடங்கும்.

நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல், உபதேசம் செய்தல், நல்ல விடயங்களுக்கு ஆதரவு வழங்குதல், சீர்கேடுகளை எதிர்த்தல் போன்ற விவகாரங்கள் இரு பாலாருக்கும் உள்ள கடமைகளே.

அந்த வகையில் பெண்; தனது சக்திக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப இஸ்லாமிய வரையறைகளைப் பேணிக் கொண்டு அரசியல் போராட்டச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவது மற்றும் சமூக எழுச்சிக்காகப் பாடுபடுவதும் பங்களிப்பதும் அவளுக்குக் கடமையாகும்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான பொறுப்புக்கள் பற்றி பேசும் அல்குர்ஆன் வசனம் இப்படிச் சொல்கிறது. ''முஃமினான ஆண்களும் பெண்களும், அவர்களில் சிலர் இன்னும் சிலருக்குப் பொறுப்பாக இருப்பர். நன்மையை ஏவுவார்கள் தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை நிலைநாட்டுவார்கள். ஸகாத்தைக் கொடுப்பார்கள். அல்லாஹ்வுக்கும் ரஸூலுக்கும் கட்டுப்படுவார்கள். இவர்களுக்கு அல்லாஹ் அருள்பாலிப்பான்.'' (தௌபா- 71)

இவ்வசனத்திற்கு அறிஞர் ரஷீத் ரிழா விளக்கம் கூறும்போது ''நன்மையை ஏவுவதும் தீமையைத் தடுப்பதும் ஆண்-பெண் ஆகிய இருபாலாருக்கும் கட்டாயக் கடமையாகும். கலீபாக்கள், ஆட்சியாளர்கள், ஆளுநர்கள் போன்ற பொறுப்பில் இருப்பவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதும் விமர்சிப்பதுவும் இதில் அடங்கும். பெண்கள் இந்த உண்மையைப் புரிந்தவர்களாகவும் செயற்படுத்துபவர்களாகவும் இருந்தார்கள்'' என்று கூறியுள்ளார்கள்.

உதாரணமாக உம்மு தர்தா (ரழி) அவர்கள் ஆட்சியாளர் அப்துல் மலிக் அவர்களின் தவறொன்றை விமர்சித்த சம்பவம் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

அவ்வாறே அஸ்மா (ரழி) அவர்கள் அநியாயக்கார ஆட்சியாளர் ஹஜ்ஜாஜ் பின் யூஸுபுக்கு எதிராகப் பேசிய வார்த்தைகள் சாட்டையடியை விடக் கடினமான அரசியல் விமர்சனமாக நோக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் முஸ்லிமில் பதிவாகியுள்ளது.

அரசியல் விவகாரத்தில் பெண் கவனம் செலுத்துவது கடமைதான் என்பதை உரத்துக் கூறிய உம்மு ஸலமாவின் ''நானும் மக்களில் ஒருவர்தான்'' என்ற வார்த்தை இங்கு நோக்கத்தக்கது. அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுவது ஆண்களுக்கு மட்டுமே உள்ள தனிச் சொத்தல்ல. அது பெண்களுக்கும் தான் என அற்புதமாக வெளிப்படுத்திய தருணம் இது. இந்தச் சம்பவமும் முஸ்லிமில் பதிவாகியுள்ளது.

ஒரு பெண் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கக் கூடிய எந்த வசனமும் ஷரீஆவில் இல்லை. மாற்றமாக அவள் அரசியல் போராட்டத்தில் ஈடுபாடு காட்டியதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன.

எனவே பெண்ணின் அரசியல் போராட்டம் கால, இட, சூழ்நிலைகளுக்கும் நடைமுறைக்கும் பொருந்தக் கூடிய வகையில் ஷரீஆ அனுமதித்த எல்லைக்குள் இடம்பெறுமாயின் அது ஆகுமானதே.

இதன் பொருள் பெண்கள் ஆட்சி பீடத்தில் அமர்த்தப்பட வேண்டும் என்று தூண்டுவதல்ல. மாறாக அவளது ஆற்றலுக்கு இஸ்லாம் மறுப்புத் தெரிவிக்கவில்லை என்பதே. தலைமைத்துவ ஆற்றல் என்பது இருபாலாருக்கும் பொதுவானதே. எனவே தகுதியும் ஆற்றலும் உள்ள ஒரு பெண் பொறுப்புக்கள் வகிப்பதைத் தடைசெய்வதற்கு முடியாது.


(பக்.14)

---

## மகாஸித் தேடல்கள் (8)



ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்



# சுதந்திரம் எனும் மக்ஸதும் சுதந்திர தினமும்

சுதந்திரம் என்பது ஷரீஆவின் மிக உயர்ந்த மகாஸித்களில் ஒன்று. கலாநிதி ராஷித் அல் கன்னூஷி அவர்கள் கூறுவது போல்[1] உலகில் தூதுத்துவம் ஏன் நடைபெற்றது? அது வெறுமனே நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் எனும் எல்லையுடன் மாத்திரம் மட்டுப்படவில்லை. அதனையும் தாண்டி மக்களை அனைத்து வகையான அடக்குமுறைகளில் இருந்தும் விடுவித்து சுதந்திரக் காற்றை சுவாசிக்கச் செய்வதும் அங்கு நோக்கமாக இருந்திருக்கிறது.

அந்தவகையில் சுதந்திரம் என்பது அல்லாஹுத்தஆலா உலகிற்கு தூதுத்துவத்தை அனுப்பி வைத்தமைக்கான மகாஸித்களில் ஒன்று. இதனை அல்குர்ஆன் இவ்வாறு விளங்கப்படுத்துகிறது.

''தூதுவர் மக்களது சுமைகளை இறக்கி வைப்பார், அவர்கள் மீது காணப்படும் விலங்குகளில் இருந்து அவர்களை விடுவிப்பார்'' (அஃராப் - 157).

நான் அறிந்த வகையில் சுதந்திரம் என்ற சிந்தனையை ஷரீஆவின் மகாஸித்களில் ஒன்றாக முதன் முதலில் முன்வைத்தவர் இமாம் இப்னு ஆஷுர் அவர்கள்தான். அந்தவகையில் இங்கு சுதந்திரம் எனும் மக்ஸத் குறித்து இமாம் இப்னு ஆஷுர் அவர்களது சில சிந்தனைகளை ஆரம்பமாக பரிமாறிக் கொள்வது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

இமாம் இப்னு ஆஷுர் அவர்கள் கூறுவது போல் சுதந்திரம் எனும் சிந்தனை பிரதானமாக இரண்டு அடிப்படைகள் மீது எழுகின்றது. ஒன்று மனித இயல்பு, இரண்டு சமத்துவம்.

### முதலாவது, மனித இயல்பு:

இமாம் இப்னு ஆஷுர் கூறுகிறார்: ''சுதந்திரம் மனிதனில் படைக்கப்பட்டிருக்கும் இயல்பான ஒரு பண்பு. இந்தப் பண்பின் அடியாகத்தான் பூமியில் ஆரம்ப மனிதத் தொழிற்பாடு காணப்பட்டிருக்கிறது...''[2] சுதந்திரம் என்பது மனிதனின் பிறப்பியல்புடன் சம்பந்தப்பட்டது. மனிதனை அல்லாஹ் படைக்கும் போது இந்த இயல்புடன்தான் படைத்திருக்கிறான்.

நபியவர்கள் ''ஒவ்வொரு குழந்தையும் அதனது இயல்பு நிலையிலேயே பிறக்கிறது'' (புஹாரி, முஸ்லிம்) என்று கூறியமை சுதந்திர இயல்பையும் இணைத்தே விளங்கப்படுத்துகிறது. அதாவது ஒரு குழந்தை இயல்பில் அல்லாஹ்வை கடவுளாக ஏற்றுக் கொள்ளும் நிலையில் தான் பிறக்கிறது. இதன் பொருள் மனிதன் அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிமையாக இருக்கும் நிலையை ஏற்றுக் கொள்கிறான், பிறிதொரு சக்திக்கு அடிமையாக இருக்கும் நிலையை இயல்பிலேயே அவன் ஏற்பதில்லை.

இந்தக் கருத்தை இன்னும் வலுவூட்டும் வகையில்தான் உமர் (றழி) அவர்கள் அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்களைப் பார்த்துக் கேட்ட கேள்வியும் அமைந்துள்ளது. ''நீங்கள் எப்பொழுது மக்களை அடிமைகளாக்கத் தொடங்கினீர்கள், அவர்களை அவர்களது தாய்மார்கள் சுதந்திரவான்களாகவே பெற்றெடுத்திருக்கிறார்கள்?''[3].

இமாம் இப்னு ஆஷுர் அவர்கள் சுதந்திரம் என்ற சிந்தனைக்கு வழங்கிய வரைவிலக்கணம் கூட அது மனித இயல்பை மையப்படுத்தி எழுகின்ற ஒரு விடயம் என்பதைக் கூறுகின்றது.

''சுதந்திரம் என்பது மனித மனங்களில் இயல்பாய் இருக்கும் ஒரு உணர்வு. மனிதனது சொல், செயல் மற்றும் சிந்தனை சார்ந்த அனைத்து மனித ஆற்றல்களுடைய வளர்ச்சியும் அதில்தான் இருக்கிறது. அதன் மூலமே மனிதனது சிந்தனை ஆற்றல்கள் புத்தாக்கக் களங்களை நோக்கி போட்டி போட்டுக் கொண்டு செல்கின்றன''[4] என்கிறார்கள்.

இங்கு சுதந்திரம் என்பது மனிதப் படைப்பியல்பு சார்ந்தது என்பது வலியுறுத்தப்படுவது போல், சுதந்திரம் என்பது மனிதனில் எவ்வகை விளைவுகளைத் தரவல்லது என்பதும் பேசப்படுகிறது. கலாநிதி ஸலீம் அல் அவா அவர்கள் கூறுவது போல்[5] மனிதன் சுதந்திரமாக இருக்கின்ற பொழுதுதான் அவனிடமிருந்து பயனுள்ள சிந்தனையும் பயனுள்ள வார்த்தைகளும் பயனுள்ள செயற்பாடுகளும் தோன்றும். ஏனெனில் சுதந்திரம் இந்த ஆற்றல்களை இயல்பிலேயே வளர்ச்சியுறச் செய்கின்றன. மறுதலையாக அடக்குமுறையும் சர்வாதிகாரமும் மனிதர்களிடமிருந்து அற்பமான மலின உற்பத்திகளையே வெளியே கொண்டு வரும். அதுதான் இன்று நாம் நிதர்சனமாகக் காணும் உண்மை என்கிறார்.

### இரண்டாவது, சமத்துவம்:

இமாம் இப்னு ஆஷுர் அவர்கள் சுதந்திரம் என்பது மனித சமத்துவத்தின் அடியாக எழுகிறது என்கிறார்கள். இந்த உம்மத்தின் ஒவ்வொரு தனிநபரும் தமது செயற்பாடுகள், நடவடிக்கைகளில் அடுத்தவரை விடவும் வேறுபட மாட்டார்கள், இதுதான் சுதந்திரம் என்பதன் பொருள் என்கிறார்கள்[6]. அதாவது அனைவரது சமத்துவமும் உத்தரவாதப்படுத்தப்படுகிறது என்பது எந்த ஒருவரும் பிறர் மீது மேலாதிக்கத்தைக் கொள்ள முடியாது, ஒவ்வொருவரும் தமது செயற்பாட்டு அதிகாரத்தில் சமப்படுகின்றனர் என்பதாகும்.

கலாநிதி ஸலீம் அல் அவா அவர்கள் கூறுகிறார்கள்[7], சுதந்திரத்தை சமத்துவத்தின் அடியாக எழும் ஒரு விடயமாக நோக்கியமை, மற்ற அறிஞர்களை விடவும் இமாம் இப்னு ஆஷுர் அவர்களை வேறுபடுத்திக் காட்டக் கூடிய ஒரு இடம் என்கிறார். சமத்துவ சிந்தனையை ஷரீஅத் அங்கீகரிக்கிறது எனின் சமதரத்தில் உள்ள அனைவரும் சுதந்திரமானவர்களே, அவர்களில் சிலர் இன்னும் சிலரை விடவும் சுதந்திரத்தில் குறையவும் மாட்டார்கள், கூடவும் மாட்டார்கள், என்கிறார்.

அடுத்து, சுதந்திரம் என்ற சிந்தனை இஸ்லாமிய ஷரீஆ மரபில் பிரதானமாக இரண்டு கருத்துக்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதாக இமாம் இப்னு ஆஷுர் அவர்கள் கருதுகிறார்கள்[8]. முதலாவது, அடிமைத்துவம் என்ற பதத்திற்கு எதிர் கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது உலகில் மனிதன் படைப்பாளனைத் தவிர வேறு எந்த சக்திக்கும் அடிமைப்பட்டிருக்க முடியாது. அவன் முழு சுதந்திரவானாகவே படைக்கப்பட்டிருக்கிறான். மனிதன் அல்லாஹ்வின் அடிமை என்பதன் பொருள் அவன் வேறு எதற்கும் அடிமையல்ல என்பதாகும். இங்குதான் மனிதன் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கிறான். இதுதான் இஸ்லாத்தின் அடிப்படைப் போதனையாகும்.

இதனைத்தான் ருப்ஆ இப்னு ஆமிர் என்ற ஸஹாபி ருஸ்தும் என்ற பாரசீகப் படைத்தளபதியின் முன்னால் சொல்லிக் காட்டினார்கள். ''நாங்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒரு சமூகம், மக்களை மக்கள் அடிமைப்படுத்தும் நிலையிலிருந்து அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிமைப்பட்டவர்களாக மக்களை மாற்றுவதற்காகவே நாங்கள் வந்திருக்கின்றோம்...'' என்றார்கள் (அல்பிதாயா வந்நிஹாயா).

இந்தப் பின்புலத்திலேயே இஸ்லாம் அன்று அமுலில் இருந்த அடிமை முறையை படிப்படியாக இல்லாமல் செய்வதை நோக்கமாகக் கொண்டு சட்டங்களை வகுத்தமையைக் காணலாம்.

கலாநிதி ஜாபிர் அப்துல் ஹாதி ஸாலிம் அஷ்ஷாபிஈ அவர்கள் கூறுவது போல்[9], இஸ்லாம் அடிமை முறையை உருவாக்கவுமில்லை, அதனை வாஜிபாகவோ சுன்னாவாகவோ அமைக்கவுமில்லை, மாற்றமாக முபாஹ் எனும் அனுமதிக்கப்பட்டது என்ற எல்லையிலேயே அதனை வைத்தது. அதாவது யுத்த சமயத்தில் முஸ்லிம்களது நலனைக் கருத்தில் கொண்டு, தலைமை தீர்மானிப்பதற்குரிய ஒரு விடயமாகவே அது கருதப்பட்டது. காரணம் அன்றிருந்த உலக சூழ்நிலையில் அடிமை முறை என்பது மக்களது சமூக, பொருளாதார முறைமைகளுடன் பின்னிப் பிணைந்த வடிவிலேயே காணப்பட்டது. அதிலிருந்து மக்களை விடுவித்தல் என்பது ஒரேயடியாக நிகழ்த்த முடியுமான ஒரு மாற்றமாகக் காணப்படவில்லை.

ஆனால் மனித சுதந்திரம் என்பது இஸ்லாம் அடைய விரும்பும் ஒரு மக்ஸத் என்ற வகையில் அதனை நோக்கிய ஒரு பயணத்தை மேற்கொள்ளும் வகையிலேயே இஸ்லாத்தின் போதனைகள் அமைந்தன. இதனைத்தான் சட்ட அறிஞர்கள் ஒரு விதியாக இவ்வாறு சொன்னார்கள் ''அல்லாஹ் சுதந்திரத்தையே எதிர்பார்க்கிறான்'' என்றார்கள்.

அந்தவகையில் முதலில் அடிமை முறை உருவாகக் கூடிய வழிகளில் யுத்தம் தவிரவுள்ள ஏனைய அனைத்து வழிகளையும் இஸ்லாம் தடை செய்தது. உதாரணமாக மனிதர்களைக் கடத்திச் சென்று அடிமையாக்கல், கடனை மீளச் செலுத்த முடியாத போது அடிமையாக மாற்றுதல் போன்ற பல வழிகளை இஸ்லாம் தடை செய்தது. யுத்த வழியைத் தடை செய்யாமைக்கான காரணம் அன்று தொடர்ந்தும் யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தமையால், யுத்தக் கைதிகளை முஸ்லிம்கள் அடிமைகளாக மாற்றாவிட்டாலும், எதிரிகள் கண்டிப்பாக முஸ்லிம் கைதிகளை அடிமைகளாக மாற்றுவார்கள், இந்நிலையில் முஸ்லிம்கள் மாத்திரம் இதனைக் கைவிடுவது நிச்சயம் முஸ்லிம்களுக்குப் பாதகமான விளைவையே ஏற்படுத்தும் என்பது மாத்திரமன்றி, அதனால் அடிமைகள் இன்னும் அதிகரிக்கவே அது வழிவகுக்கும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் பெண் வேட்பாளர் அய்னா ஜம்சாத்துவா

எதிர்வரும் மார்ச் மாதம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் பெண்ணொருவர் வேட்பாளராகக் களமிறங்கியுள்ளார். எந்தவொரு அரசியல் கட்சியின் பின்புலமுமின்றி சுயேச்சையாக தேர்தலில் களமிறங்கவுள்ள இவர், தனது ஆதரவாளர்களிடமிருந்து மூன்று இலட்சம் கையொப்பங்களைப் பெற்று தேர்தல் ஆணையகத்திடம் வழங்க வேண்டும். அரசியல் கட்சியொன்றிலிருந்து தேர்தலில் ஈடுபடுவோருக்கு இந்நிபந்தனை இல்லை.

அய்னா, டகஸ்தான் பிரதம முப்தியின் மனைவியும் அவரது வெளியுறவுத் துறை ஆலோசகரும் ஆவார். 46 வயதான இவர், பல்வேறுபட்ட சமூக நல நிறுவனங்களை நடாத்தி வருகின்றார். ரஷ்யாவின் அரசியல் வரலாற்றில் ஜனாதிபதித் தேர்தலொன்றில் போட்டியிடும் முதல் முஸலிம் பெண் வேட்பாளர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவில் 20 மில்லியன் முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ரஷ்ய முஸ்லிம்களிடையே, குறிப்பாக டகஸ்தான் பிராந்தியத்தில் பெருமளவு மக்கள் ஆதரவைப் பெற்றுள்ள இவர் ஜேர்மன், ஈரான், இந்தோனேசியா, பொஸ்னியா, அல்பேனியா போன்ற நாடுகளின் ஊடகக் கவனயீர்ப்பையும் பெற்று வருகின்றார்.

விளாடிமிர் புட்டினுக்கு எதிராகக் களமிறங்கியுள்ள இவர், ரஷ்யாவின் சர்ச்சைக்குரிய மாகாணம் எனக் கருதப்படும் டகஸ்தானிலிருந்து தேர்தலில் குதித்துள்ளமை ஒரு முக்கிய விடயமாகும். 2000 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் டகஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. செச்னியாவை அண்மித்துள்ள டகஸ்தான் வரலாற்றில் தனிக் குடியரசாக இருந்த பிராந்தியமாகும்.

டகஸ்தான் பிரதான முப்தி அஹ்மத் அப்துல் லாஹ், அப்பிராந்தியத்தில் செல்வாக்குப் பெற்ற ஒருவர். சூபி தரீக்காவைச் சேர்ந்த அஹ்மத் அப்துல் லாஹ்வும் அவரது மனைவி அய்னாவும் தேர்தலில் ஈடுபட்டுள்ளமை டகஸ்தான் மாகாணத்தில் ரஷ்யாவின் நிலைப்பாட்டை வெளியுலகத்திற்கு அறிவிக்கவே என்கின்றார் எழுத்தாளர் ஸாகிர் மஹ்மூத்.

ஏனெனில், 140 மில்லியன் மக்களைக் கொண்டுள்ள ரஷ்யாவில் 20 மில்லியன் முஸ்லிம்கள் அனைவருமே வாக்களித்தாலும் அய்னா ஜம்சத்துவா ஜனாதிபதியாக வெற்றிபெறப் போவதில்லை. ஆனால், டகஸ்தானில் தமது குடும்பத்திற்கும் மிதவாத இஸ்லாத்திற்கும் மக்கள் தெரிவிக்கும் ஆதரவு ரஷ்யாவின் டகஸ்தான் குறித்த கொள்கைக்கு எதிரானது என்பதை தேர்தல் முடிவுகள் காண்பிக்கும் என ஸாகிர் மஹ்மூத் எனும் இணைய எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு கவ்காஸஸ் மற்றும் டகஸ்தானில் அய்னா பெருவாரியான வாக்குகளைப் பெறுவார். இது புட்டினின் மக்கள் விம்பத்தை பெருமளவு பாதிக்கும். டகஸ்தானை சட்டவிரோதமாக இணைத்து வேலையில்லாப் பிரச்சினைக்கு உள்ளாக்கி, மக்களை தொந்தரவுக்கு ஆட்படுத்தியிருக்கும் புட்டினுக்கு இது ஒரு பாடமாக அமையுமென்று மஹ்மூத் தெரிவித்துள்ளார்.

ஆய்னா ஜம்சவாத்தின் தேர்தல் பிரவேசம் ரஷ்ய முஸ்லிம்களுக்கு இடையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் அய்னா தனது பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார்.

பாரம்பரிய சிந்தனையுள்ள ரஷ்ய முஸ்லிம் இவரது தேர்தல் பிரவேசத்தை ஆட்சேபித்துள்ளனர். பிரச்சாரங்களுக்காக இவர் தனது கணவனின் துணையின்றி வெளியே செல்ல முடியாது. இஸ்லாமிய சட்டங்களை மீறிச் செயல்பட முடியாது. எனவே பெண்கள் இவ்வாறு அரசியல் செயற்பாட்டில் இறங்குவது பொருத்தமல்ல என அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கிறிஸ்தவத்திலிருந்து இஸ்லாத்திற்கு வந்த ஆயிஷா எனப்படும் பெண் உளவியலாளர், "அய்னா தனது சமூகத்துக்குரிய சட்ட உரிமைகளைப் பெறுவதற்கு போராடும் தகுதி வாய்ந்தவர். அது ஒவ்வொரு ரஷ்யப் பிரஜைக்கும் உள்ளது. ஒரு பண்பட்ட தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும் துணிவு அய்னாவுக்கு உண்டு என்று தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிலுள்ள முஸ்லிம் பெண்கள் குறித்த விம்பத்தை உயர்வாகக் கட்டியெழுப்புவதற்கு அய்னாவின் அரசியல் பிரவேசம் துணை செய்யும் என்பது இவர்களின் நம்பிக்கையாகும்.

ரஷ்ய முஸ்லிம்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவர்கள். சூபித்துவத்தினூடாகவே ரஷ்யாவிலும் சூழவுள்ள கவ்காஸ் பிராந்தியத்திலும் இஸ்லாம் பரவியது. கம்யூனிஸ ஆட்சியின் கீழ் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டிருந்த ரஷ்ய முஸ்லிம்கள் செச்னிய மற்றும் டகஸ்தான் பிராந்தியங்களை தனி முஸ்லிம் குடியரசுகளாக மாற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆயினும், ரஷ்யப் புரட்சியை அடுத்து முஸ்லிம்களின் போராட்டம் கடுமையாக அடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வேலைத்தள மகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் ஏழு காரணிகள்




ஒவ்வொரு மனிதனும் அவனது நாளாந்த வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியை பணி இடத்திலேயே கழிக்கின்றான். தொழில் திருப்தி, திருப்தியின்மை அவனது மகிழ்ச்சியில் அல்லது மகிழ்ச்சியின்மையில் நிச்சயம் தாக்கம் செலுத்துகின்றது. குதூகலமான பணிச் சூழல் மகிழ்ச்சியான வேலையாட்களை தக்கவைக்கின்றது. அவர்கள் புத்தாக்கம், அர்ப்பணம், விடா முயற்சி கொண்டவர்களாக இயங்குகின்றார்கள்.

செயற்திறன் மிக்க பணியிடம், ஒருவரது பணிகளை மென்மேலும் வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்கு உதவுகின்றது. வேலைத் தளத்தில் ஒருவரது மகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் 7 காரணிகளை ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.



## 1. அங்கீகாரம் (Recognition)

ஒவ்வொரு மனிதனும் கணிப்புத் தேவை கொண்டவன். தன்னால் நல்லவை நடக்கும்போது அதற்கு அங்கீகாரமும் பாராட்டும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றவன். ஆக்கபூர்வமான பின்னூட்டல் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்கள் செய்த பங்களிப்பினை நினைவுகூர வேண்டும். இது ஒருவருக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

## 2. சுவாரஷ்யமான வேலை (Interest)

வழங்கப்படும் வேலை அல்லது நாம் பெறும் வேலை நம்மை சலிப்படையச் செய்யும்போது மகிழ்ச்சி தொலைகின்றது. பணித் திருப்தியென்பது முக்கியமானது. வேலை எமக்கு சுவாரஷ்யமானதாகவும் கவர்ச்சியானதாகவும் இருக்க வேண்டுடும். குழுவாக செயல்படும்போது பணித் திருப்தி அதிகரிக்கின்றது.

## 3. ஊதியம் (Salary)

ஒருவர் பெறும் ஊதியமும் அவரது பணியிடத் திருப்தியிலும் சந்தோசத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. சேவைக் கால நீடிப்பைக் கருத்திற் கொண்டு முறையான ஊதிய உயர்வை வழங்கும் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் உள்ளதை ஆய்வுகள் நிறுவியுள்ளன. வருடாந்தம் குறிப்பிட்ட சிறு தொகையையேனும் ஊதிய அதிகரிப்பாக நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.

## 4. தொழில்-வாழ்க்கைச் சமநிலை (Job-Life Balance)

சிலர்தொழில் செய்வதற்காகவே வாழ்கின்றனர். சிலர் வாழ்வதற்காக தொழில்செய்கின்றனர். தொழில் மாத்திரம் வாழ்க்கையல்ல. வாழ்வதற்கே தொழில் தேவை. எனவே, தொழில்-வாழ்க்கை சமநிலை பேணப்படுதல் அவசியம். தனிப்பட்ட, குடும்ப உறவுகள், உறவாடல்கள், ஒன்றிணைதல், அதன் மூலம் கிடைக்கும் சந்தோசங்கள் அனைத்தையும் ஒருவரது தொழில் தடுத்துவிடுவது பொருத்தமல்ல. ஓய்வும் விடுமுறையும் அவசியமாகின்றது.

## 5. சுயாதீனம் (Autonomy)

பணியிடத்தில் ஒரு தொழிலாளர் ஓரளவு சுதந்திரத்துடன் செயல்படும் சூழல் இருக்க வேண்டும். வேலைக்கமர்த்துபவர் மனவெழுச்சி ரீதியில் புத்திசாலியாக நடந்து கொள்ள வேண்டும். அதாவது தனது பணியாட்கள் மீது அவருக்கு ஒரு அடிப்படை விசுவாசம் இருப்பதோடு, தவறுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை கவனமாகக் கையாளும் பக்குவமும் அவசியமாகும். இங்கு நுண்முகாமை எந்தவகையிலும் பொருந்தி வராது. குறிப்பிட்டளவு சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் அவசியமாகின்றது.


## 6. வெளிப்படைத் தன்மை மற்றும் தொடர்பாடலுக்கான சூழல் (Transparency)

நிறுவனத்திற்கும் ஊழியர்களுக்கும் இடையில் அனைவரையும் உள்ளடக்குகின்ற, வெளிப்படைத் தன்மை, தொடர்பாடல் தன்மையுள்ள ஒரு சூழல் இருக்க வேண்டும். பணியாளர்களுக்கும் நிறுவனத்திற்கும் இடையில் மூடிய திரை இருப்பது ஆரோக்கியமானதல்ல. முகாமையாளர்களொடு திறந்த தொடர்பாடல் ஒவ்வொரு ஊழியருக்கும் இருக்க வேண்டும். தான் விரும்புவதை வெளிப்படையாகப் பேசுகின்ற சுதந்திரமாதாக சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

## 7. தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கை முன்னேற்றம்

யாரும் எப்போதும் ஒரே தொழிலை தொடர்ச்சியாகச் செய்வதற்கு விரும்புவதில்லை. தாம் இருக்கும் இடத்திலிருந்து இன்னோர் நிலைக்கு மாறிச் செல்லவே விரும்புகின்றனர். இது ஓரளவு வரவேற்கத்தக்கதே. குறைந்தபட்சம் ஓர் அலுவலகத்தில் பணியாற்றும் ஒருவருக்கு புதிய பொறுப்புகள், புதிய பதவிகள் வழங்கப்பட வேண்டும். மாநாடுகள் பயிற்சிப் பட்டறைகள் என்பவற்றில் கலந்து கொள்வதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு, தனது தகுதியை அதிகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பை நிறுவனம் உறுதிசெய்ய வேண்டும்.

# தனியார் மருத்துவத் துறையில் நிலவும் சர்ச்சை




தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் மருத்துவக் கல்லூரி வழங்கும் மருத்துவ பட்டச் சான்றிதழை இலங்கை மருத்துவ சபை மற்றும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்த்து வருகின்றது. இதை அங்கீகரிப்பதா ஆட்சேபிப்பதா என்பதைத் தீர்மானிக்கம் அதிகாரம் நாட்டின் சட்டத்தின்படி யாருக்கு உள்ளது? இலங்கை மருத்துவ சபைக்கா அல்லது உயர் கல்வி அமைச்சுக்கா என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

2017 ஜனவரி 31 இல் மேன்முறையீட்டு நீதிமன்றம் இது குறித்து வெளியிட்ட தீர்மானம் கவனத்திற்குரியது. அதன்படி இலங்கை மருத்துவ சபைக்கு மருத்துவக் கல்லூரி ஒன்றுக்கு சான்று வழங்குவதற்கோ அதன் மருத்துவச் சான்றிதழுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கோ ஒரு பல்கலைக்கழகத்தின் பொருத்தப்பாட்டை தீர்மானிப்பதற்கோ எந்த அதிகாரமும் இல்லை. அது உயர் கல்வி அமைச்சுக்கு உள்ள அதிகாரமாகும்.

ஏற்கனவே, சைட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகவே இலங்கை மருத்துவ சபை ஏற்றுக்கொண்டிருந்தது. அதேவேளை, சைட்டமின் MBBS பட்டம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை இலங்கை மருத்துவ சபை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மற்றும் சில அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக விவாதித்து வருகின்றன.

எவ்வாறாயினும், இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்குகின்ற சில விவகாரங்கள் இதனுடன் இணைந்துள்ளன. அதில் முதலாவது, இலங்கை மருத்துவர் சபை மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என்பன இவ்விடயத்தில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. கொத்தலாவல இராணுவக் கல்லூரிக்கு இலங்கை மருத்துவர் சபை MBBS பட்டம் வழங்கும் அந்தஸ்தை வழங்கியபோது அதற்கென்றே போதனா வைத்தியசாலையொன்று அந்நேரத்தில் இருக்கவில்லை. ஆனால் இப்போது SAITM இற்கு அது அவசியம் எனக் கோருகின்றனர்.

இரண்டாவது, ஒரு தனியார் கல்வி நிறுவனத்திற்கு மருத்துவப் பட்டச் சான்றிதழ் அனுமதியளிக்கும்போது அரச பல்கலைக்கழக மருத்துவ பீடங்கள் [illegible] பீடங்களிலிருந்து வேறுபட்ட முறையில் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? இன்று மட்டக்களப்பு ரஜரட்ட பல்கலைக்கழக மருத்துவ பீடங்களிலும் மருத்துவ மாணவர்களுக்கான பயிற்சி வசதிகள் மற்றும் போதனா வசதிகளின் தரம் குறித்த பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால், இது குறித்து இலங்கை மருத்துவ சபையோ அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமோ எந்தக் கருத்தினையும் வெளியிடுவதில்லை.

மூன்றாவது, மக்களின் உயிர் வாழ்க்கை என்றைக்கும் அவசியமானது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்கள் மிக உயர்தர சேவைகளை வழங்க வேண்டும். இந்த வாதம் ஏனைய தொழின்மைகளுக்கும் பொருந்தும். இது மருத்துவத் துறை மாணவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தராதரமாகப் பார்க்கப்பட வேண்டியதில்லை.

நான்காவது, இவ்விவகாரத்தில் பெருத்த அரசியல் தலையீடுகள் உள்ளன. இவையனைத்தும் ஒரேயொரு உண்மையை உணர்த்துகின்றன. அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களின் தராதரங்களை மேற்பார்வை செய்யும் ஒரு சுதந்திரமான சபை உருவாக்கப்பட வேண்டும் என்பதே அந்த உண்மை. ஏனெனில், மாணவர்கள் வகைதொகையின்றி இப்புதிய கல்வி நிறுவனங்களில் இணைந்து வருகின்றனர். எதிர்காலத்திலும் அரசாங்கம் தனியார்த் துறை மருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதானால் அவற்றின் தரத்தை உறுதி செய்யவும் நீதியான சேவையை வழங்கவும் இத்தகைய மேற்பார்வை முகாமையொன்றை உருவாக்குதல் அவசியம்.

உயர்கல்வித் துறையில் கால்பதித்துள்ள அரசசாரா நிறுவனங்கள் பொருளாதாரத் துறையில் வேகமாக வளர்ந்து வருகின்றன. கடந்த அரசாங்கம் சுதந்திரமான அங்கீகாரம் வழங்கும் முறையொன்றை உருவாக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டிருந்தது. தற்போது உயர்கல்வி அமைச்சிலுள்ள முறைமை ஒரு நிறுவனத்தை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா எனும் நிலைப்பாட்டைத் தழுவியதாக இருக்கின்றது.

தற்போதுள்ள தர உறுதிப்பாட்டுப் பொறிமுறை மற்றும் ஒழுங்குபடுத்தல் முறை விரிவான அட்ம்சங்களைக் கருத்திற் கொள்ளவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுதந்திரம்... (12 ஆம் பக்கத் தொடர்)

அந்த வகையில் அந்த சூழலின் நலனைக் கருத்தில் கொண்டு, தலைமை தீர்மானிப்பதற்குரிய ஒரு விடயமாக இஸ்லாம் அதனை அமைத்தது.

மாற்றமாக கட்டாயமாக அடிமையாக மாற்றவேண்டும் என்ற ஒரு சட்டம் பின்பற்றப்படவில்லை. அடுத்து, இஸ்லாம் அதனது பல சட்டங்கள் ஊடாகவும் போதனைகள் ஊடாகவும் அடிமை விடுதலையை வலியுறுத்தும் அமைப்பையே கடைபிடித்தது. கப்பாரா சட்டங்கள் இதற்கு சிறந்த உதாரணங்களாகும்.

அதுபோல், அன்றிருந்த உலக வழக்கிற்கு முற்றிலும் மாற்றமாக அடிமையாக இருப்போருக்கான உரிமைகளைப் பற்றி இஸ்லாம் வலியுறுத்தியது. அவர்களது சக்திக்கு மீறி அவர்களிடம் கடமைகளை சுமத்தக் கூடாது என்பது போன்ற பல வரையறைகளை இஸ்லாம் இட்டுள்ளதைக் காணலாம். இவையனைத்தும் அன்று நடைமுறையில் இருந்த ஒரு சமூகத் தீமையை இல்லாமல் செய்யும் நோக்கில் இஸ்லாம் எவ்வாறு செயற்பட்டது என்பதற்கான ஒரு சிறந்த உதாரணத்தையே எங்களுக்கு எடுத்துக் காட்டுகின்றன.

சுதந்திரம் என்ற சிந்தனை இஸ்லாமிய ஷரீஆ மரபில் பயன்படுத்தப்பட்ட இரண்டாவது கருத்து, இது உண்மையில் முதல் கருத்தின் விளைவு. அதாவது, ஒவ்வொரு மனிதனும் தனது விவகாரங்களைக் கையாள்வதற்கு இயலுமான நிலையைக் குறிக்கும். அதாவது ஒரு மனிதன் சுதந்திரவானாக இருக்கிறான் என்பது, அவன் தனது விவகாரங்களை எந்த புறத் தடைகளும் இன்றி மேற்கொள்ளக் கூடிய நிலை இருத்தல், பிறிதொருவரது அனுமதியை எதிர்பார்த்திருக்கும் நிலை இல்லாதிருத்தல், அது போல் தனது விவகாரங்களுக்கு தானே வகைசொல்லும் கடப்பாட்டுடன் இருத்தல். இவ்வகை சுதந்திர நிலையின் போதுதான் ஒரு மனிதனுக்கு இஸ்லாம் சொல்லும் கடமைகள் உருவாகின்றன. அவனது செயற்பாடுகள் குறித்து உலகிலும் சரி மறுமையிலும் சரி அவன் விசாரிக்கப்படுகின்ற நிலை இதனாலேயே ஏற்படுகின்றது.

இந்தவகையில் இங்கு பேசப்படும் சுதந்திரம், ஒரு மனிதனது சுயபொறுப்புக் கூறலுக்கான சுதந்திரம். மேற்குறிப்பிடப்பட்ட வகையிலேயே இஸ்லாம் சுதந்திரம் என்ற சிந்தனையை முன்வைக்கிறது. இந்தக் கருத்திலேயே சுதந்திரம் என்பதை மனித வாழ்வில் கட்டாயமாக அடைந்து கொள்ளப்பட வேண்டிய ஒரு மக்ஸத் என்கிறது. இந்தப் புரிதலின் அடிப்படையிலேயே இன்றைய உலகில் சுதந்திரம் என்பது ஒரு மனித உரிமையாக நோக்கப்படுகிறது.

கலாநிதி ராஷித் அல் கன்னூஷி அவர்கள் கூறுவது போல்[10], சுதந்திரம் என்பது மிக முக்கிய மனித உரிமைகளில் ஒன்று, இது யாராலும் வழங்கப்படும் ஒரு விடயமல்ல, மாற்றமாக இது மனித கண்ணியத்தின் வெளிப்பாடு, அதன் ஒரு பகுதி. சுதந்திரத்தின் மூலம்தான் மனிதன் ஏனைய படைப்புக்களை விட்டும் வித்தியாசப்படுகின்றான். வணங்குவதிலும் சரி, கருத்து வெளிப்பாட்டிலும் சரி, சொந்தமாக வைத்திருப்பதிலும் சரி, நகர்வுகளிலும் சரி அனைத்திலுமே மனிதன்தான் இந்த சுதந்திரத்தை அனுபவிக்கின்றான்.

இஸ்லாம் முன்வைக்கும் சுதந்திர சிந்தனையை ஒரு மக்ஸதாகப் புரிந்து கொண்டாலும் சரி, ஒரு உரிமையாகப் புரிந்து கொண்டாலும் சரி, எல்லைகள் அற்ற ஒரு சிந்தனையாக இஸ்லாம் அதனைப் பேசவில்லை. சுதந்திரத்தின் வரையறைகள் குறித்து பலவடிவங்களில் அறிஞர்கள் பேசியிருந்தாலும் இந்த இடத்தில் அவையனைத்தையும் சாராம்சப்படுத்தும் வகையில் இமாம் இப்னு ஆஷுர் அவர்கள் முன்வைத்த ஒரு வரையறையை மாத்திரம் குறித்துக் காட்டலாம் என்று நினைக்கிறேன்[11].

அதாவது, தீங்கிழைக்காமையும் நன்மையைக் கொண்டு வருதலும், இது தனக்காக இருந்தாலும் சரி, பிறருக்காக இருந்தாலும் சரி, அதேவேளை தீங்கை ஒருவர் விரும்பி ஏற்றுக் கொள்ளவும் கூடாது, நலனை விரும்பித் தடைசெய்து கொள்ளவும் கூடாது. சுதந்திரம் இவ்வாறு தான் வரையறுக்கப்படுதல் வேண்டும், அதாவது இடப்படும் வரையறை மூலம் நிச்சயமான ஒரு தீங்கு தடுக்கப்படல் வேண்டும் அல்லது நிச்சயமான ஒரு நலன் உருவாக்கப்படல் வேண்டும். அதாவது சுதந்திரம் என்பது ஒரு தீங்கை உருவாக்கி விடக் கூடாது அல்லது ஒரு நலனை இல்லாமல் செய்து விடக் கூடாது. இவ்வாறான நிலையில் தீங்கு தடுக்கப்படும் வகையில் அல்லது நலனைக் கொண்டு வரும் வகையில் சுதந்திரம் வரையறுக்கப்படும். இது தனக்காக இருந்தாலும் சரி பிறருக்காக இருந்தாலும் சரி. அது போல் தீங்கை விரும்பி ஏற்றுக் கொள்ளும் நிலையையும் இஸ்லாம் ஏற்கவில்லை. அதனால்தான் ஸஃத் இப்னு அபீவக்காஸ் அவர்கள் தனது இறுதித் தருவாயில் தனது முழு சொத்தையும் ஸதகா செய்ய அனுமதி கேட்டபோது நபியவர்கள் அதனை மறுத்தார்கள். அவரது சந்ததிகள் எதிர்காலத்தில் கஷ்டப் படக்கூடாது, அவர்களது நலன் பாதிக்கப்படக் கூடாது என்பதை நபியவர்கள் இங்கு வலியுறுத்தினார்கள்.

தனது சொத்தை தான் தாணம் செய்வது தனது சுதந்திரம் என்றிருப்பினும், அதன் உலக பாதிப்பை தான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்றிருந்தாலும், குறித்த பாதிப்பு என்பது ஒரு தீங்கு அதனைத் தடுக்கும் வகையில் அந்த சுதந்திரம் அங்கு வரையறுக்கப்படுகிறது.

அடுத்து, நாம் கொண்டாடும் சுதந்திர தினம் என்பது, எளிமையாகச் சொன்னால் சுரண்டல் காலனித்துவத்திலிருந்து எமது நாடு விடுதலை பெற்றமையை நினைவு கூரும் வகையில் நடைபெறுகிறது. காலனித்துவம் என்பது உலக வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட மிகப்பெரியதொரு அநீதி. அந்த அநீதியிலிருந்து விடுதலை கிடைத்தமை, உண்மையில் சந்தோசம் கொள்ளத் தக்க விடயம்தான். இஸ்லாம் சுதந்திரம் என்பதை மகாஸித் களில் ஒன்றாக விளங்கப்படுத்துகின்ற பொழுது, இந்தக் கருத்தையும் இணைத்தே விளங்கப்படுத்துகிறது.

அந்தவகையில் சுதந்திர தினக் கொண்டாட்டம் என்பது ஷரீஆவின் மக்ஸதை விட்டும் வெளிச் செல்லவில்லை. எனினும் இங்கு நாம் மனம் கொள்ள வேண்டிய ஒரு முக்கிய உண்மை இருக்கிறது. சுதந்திரம் என்ற சிந்தனையை இஸ்லாம் மகாஸித்களில் ஒன்றாக விளங்கப்படுத்திய அதனுடைய முழுமையான பொருளில் நாம் சுதந்திரத்தைப் புரிந்து கொள்கிறோமா? எமது சுதந்திர தினக் கொண்டாட்டம் எப்போதோ நடைபெற்ற ஒரு அநீதியை நினைவுகூர்வதாக மாத்திரம் அமைந்து விடக் கூடாது. அதனையும் தாண்டி இந்த மக்கள் தொகுதியின் முழுமையான சுதந்திரத்தை நோக்கிய அழைப்பாக, அதற்கான விதையாக அது அமைய வேண்டும். அப்பொழுதுதான் ஷரீஆவின் மகாஸிதை அடைந்து கொண்டவர்களாக மாறுவோம்.

கலாநிதி மாலிக் பின் நபி சொல்வது போல், காலனித்துவத்தின் மிகப்பெரிய பாதிப்பு, காலனித்துவத்திற்கு உட்பட்ட மக்கள் தொகுதியின் சுயத்தை இழக்கச் செய்வதுதான், அவர்களை அறியாமலேயே அவர்கள் அடிமைகளாக மாறியிருப்பார்கள். நேரடியான காலனித்துவம் எப்போதோ போய்விட்டது. ஆனால் நாம் இன்னும் எமது சுயத்தை சுதந்திரமாக வெளிப்படுத்துகிறோமா? என்பது கேள்வி.

எமது சிந்தனை, வார்த்தைகள் மற்றும் செயற்பாடுகளின் உந்துசக்திதான் சுதந்திரம் என்பது, ஆனால் நாம் அனுபவிக்கும் சுதந்திரம் அந்தப் பணியைச் செய்கின்றதா? என்பது கேள்வி. தாய்நாட்டுச் சிந்தனையை இஸ்லாம் மறுக்கவில்லை, நாம் ஒரு தேச மக்களாக எழுந்து நிற்பதை இஸ்லாம் வரவேற்கிறது. ஆனால் அது பிறிதொரு தேச மக்களுக்கு எதிரானதாய் அமைந்து விடக் கூடாது. பிறிதொன்றின் வீழ்ச்சியில் எமது எழுச்சியை எதிர்பார்த்து விடக் கூடாது. சுதந்திர தினக் கொண்டாட்டம் என்பது, நாம் எழுந்து நிற்பது எவ்வாறு என்பதற்கான முனைப்பாகவே அமைய வேண்டும். பிறிதொன்றை வீழ்த்துவதோ அல்லது சாடுவதோ அல்ல.

சுதந்திரம் என்பதை ஷரீஆவின் மகாஸித்களில் ஒன்றாகப் புரிந்து கொள்கின்ற போது, எமது சுதந்திர சிந்தனை எவ்வாறு வடிவமைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒரு ஆலோசனையே இங்கு பரிமாறப்பட்டுள்ளது. வாசகர்கள் பயன் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

(1) கலாநிதி ராஷித் அல் கன்னூஷி, மகாஸிதுல் ஹுர்ரிய்யா பில் பிக்ஹில் இஸ்லாமி அல் முஆஸிர் ஹக்குத் தன்ழீம் அல் ஹிஸ்பி வல் இன்திகாபாத் நுமூத ஜன், தப்ஈல் மகாஸிதுஷ் ஷரீஆ பில் மஜாலிஸ் ஸியாஸி, கட்டுரைத் தொகுப்பு, வெளியீடு : முஅஸ்ஸஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி வமர்கஸுல் மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, முதலாம் பதிப்பு 2014, பக்கம் 106.

(2) இமாம் முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷுர், உஸுலுன் நிழாம் அல் இஜ்தி மாஈ பில் இஸ்லாம், பதிப்பகம் : தாருத் தூனுஸிய்யா லித்தெளஸீஃ, பக்கம் 162.

(3) இமாம் இப்னுல் ஜெளஸி, மனாகிபு உமர் இப்னுல் கத்தாப், பக்கம் 98, 99.

(4) இமாம் முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷுர், உஸுலுன் நிழாம் அல் இஜ்திமாஈ பில் இஸ்லாம், பதிப்பகம் : தாருத் தூனுஸிய்யா லித்தெளஸீஃ, பக்கம் 163.

(5) கலாநிதி ஸலீம் அல் அவா, மக்ஸதுல் ஹுர்ரிய்யா இன்தத் தாஹிர் இப்னு ஆஷுர், மகாஸிதுஷ் ஷரீஆ இன்தத் தாஹிர் ஆஷுர், வெளியீடு: முஅஸ்ஸ ஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி வமர்கஸுல் மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, முதலாம் பதிப்பு 2013, பக்கம் 54, 55.

(6) இமாம் முகம்மத் அத்தாஹிர் இப்னு ஆஷுர், மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, செம்மையாக்கல் கலா நிதி முகம்மத் தாஹிர் அல்மைஸாவி, பதிப்பகம்: தாருன் நபாஇஸ், இரண்டாம் பதிப்பு 2001, பக்கம் 390.

(7) கலாநிதி ஸலீம் அல் அவா, மக்ஸதுல் ஹுர்ரிய்யா இன்தத் தாஹிர் இப்னு ஆஷுர், மகாஸிதுஷ் ஷரீஆ இன்தத் தாஹிர் ஆஷுர், வெளியீடு: முஅஸ்ஸ ஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி வமர்கஸுல் மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, முதலாம் பதிப்பு 2013, பக்கம் 57.

(8) பார்க்க: இமாம் முகம்மத் அத்தாஹிர் இப்னு ஆஷுர், மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, செம்மையாக்கல் கலா நிதி முகம்மத் தாஹிர் அல் மைஸாவி, பதிப்பகம்: தாருன் நபாஇஸ், இரண்டாம் பதிப்பு 2001, பக்கம் 390 - 400.

(9) பார்க்க: கலாநிதி ஜாபிர் அப்துல் ஹாதி ஸாலிம் அஷ்ஷாபிஈ, தஃஸீலுல் இஃலானில் ஆலமி லிஹுகூகில் இன்ஸான் மின் மன்லூரி மகாஸிதிஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா திராஸா தஃஸீலிய்யா மகாஸிதிய்யா, மகாஸிதுஷ் ஷரீஆ வல் இத்திபாகாத் அத்துவலிய்யா, கட்டுரைத் தொகுப்பு, வெளியீடு: முஅஸ்ஸஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி வமர்கஸுல் மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, முதலாம் பதிப்பு 2013, பக்கம் 122 - 131.

(10) கலாநிதி ராஷித் அல் கன்னூஷி, மகாஸிதுல் ஹுர்ரிய்யா பில் பிக்ஹில் இஸ்லாமி அல் முஆஸிர் ஹக்குத் தன்ழீம் அல் ஹிஸ்பி வல் இன்திகாபாத் நுமூத ஜன், தப்ஈல் மகாஸிதுஷ் ஷரீஆ பில் மஜாலிஸ் ஸியாஸி, கட்டுரைத் தொகுப்பு, வெளியீடு: முஅஸ்ஸ ஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி வமர்கஸுல் மகாஸிதுஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா, முதலாம் பதிப்பு 2014, பக்கம் 103.

(11) இமாம் முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷுர், உஸுலுன் நிழாம் அல் இஜ்தி மாஈ பில் இஸ்லாம், பதிப்பகம் : தாருத் தூனுஸிய்யா லித்தெளஸீஃ, பக்கம் 163.

## அரசியல்... (12 ஆம் பக்கத் தொடர்)

இங்கு "பெண்களிடம் தங்கள் பொறுப்புக்களை ஒப்படைக்கும் ஒரு சமூகத்தினர் ஒருபோதும் வெற்றி பெற மாட்டார்கள்" என்ற ஹதீஸ் பற்றிக் கொஞ்சம் விளக்குவது சிறந்தது.

அறிஞர் முஹம்மத் கஸ்ஸாலி அவர்கள் குறித்த இந்த ஹதீஸுக்கு முரணாக ஸூரா நம்லின் 23 ஆம் வசனம் காணப்படுகிறது எனக் கூறி, சுன்னாவும் குர்ஆனும் முரண்படும்போது குர்ஆன் முற்படுத்தப்படும் எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முஹம்மத் கஸ்ஸாலி மேலும் விளக்குகிறார். "அல்-குர்ஆன் ஸபா நாட்டு அரசியை தனது அதிகாரத்தைச் சிறப்பான முறையில் பயன்படுத்தி தனது மக்களை சுலைமான் (அலை) அவர்களுக்குப் பணிந்து நடக்க வழிப்படுத்தியவளாகக் காட்டுகிறது என்றும் அவ்வகையில் ஒரு அரச தலைவியின் சிறந்த ஒரு முன்மாதிரியாக அவள் விபரிக்கப்படுகிறாள்" என்றும் விளக்குகிறார்.

இங்கு தலைமைப் பொறுப்பு ஆண்-பெண் இருபாலாருக்கும் பொதுவானது என்ற அல்குர்ஆனின் வழிகாட்டலே முற்படுத்தப்பட வேண்டும் என முஹம்மத் கஸ்ஸாலி கருதுகின்றார். அதாவது ஒரு பெண்ணுக்கு தலைமை வகிக்கும் ஆற்றலும் தகுதியும் இருந்து சூழ்நிலைகள் ஷரீஆவின் நிலைப்பாட்டுக்கு உடன்படுமாயின் அவளுக்கு அந்தப் பதவியை கொடுப்பதில் தவறில்லை என்பதே கஸ்ஸாலியின் கருத்தாகும்.

இதுதவிர இன்னும் பலகோணங்களில் இந்த ஹதீஸ் புரியப்பட்டுள்ளது. பாரசீக மன்னன் மரணித்தவேளை, அவர்கள் மன்னனின் மகளை நாட்டின் தலைமைக்கு நியமித்த தருணத்திலேயே இந்த ஹதீஸை நபிகளார் மொழிந்திருக்கிறார்கள்.

எனவே இது பொதுவாக எல்லா தலைமைகளையும் குறிக்க மாட்டாது. நாட்டின் அதியுயர் பதவியான சிரேஷ்ட தலைமை பதவியை மாத்திரமே குறித்த ஹதீஸ் தடுக்கிறது என பல அறிஞர்கள் கருதுகின்றனர்.

இன்னும் சில அறிஞர்கள் இந்த ஹதீஸில் நபியவர்கள், பெண் என்பதன் காரணமாக இந்த வார்த்தையைச் சொல்லவில்லை. மாற்றமாக பாரசீகத்தில் தலைமைக்கு நியமிக்கப்பட்ட குறித்த பெண், சிறு வயதுப் பெண்ணாகவும், ஆட்சி செய்வதற்குரிய தகைமையில்லாத பெண்ணாகவும் இருந்ததால்தான் இவ்வாறு சொன்னார்கள் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஹதீஸ் பற்றி இது போன்ற இன்னும் பல வித்தியாசமான கருத்துக்கள் உள்ளன. எனவே இந்த ஹதீஸை ஆதாரமாக வைத்து பெண்களின் அரசியல் செயற்பாடுகளை தடுப்பதற்கோ அல்லது தலைமைப் பதவிகளுக்கு வருவதைத் தடுப்பதற்கோ முடியாது என்பது தெளிவு.

பெண் என்பவள் சமூகத்தின் ஒரு பிரஜை என்றவகையிலும் அவளுக்கும் உரிமை கடமைகளில் சம பொறுப்புக்களை ஷரீஆ வழங்கியுள்ளது என்ற வகையிலும் குறிப்பாக காலத்தின் தேவை என்ற அடிப்படையிலும் பின்வரும் அரசியற் செயற்பாடுகளில் அவளது பங்களிப்பு தவிர்க்க முடியாத கடமையாகும்.

1. ஆட்சியாளர்களை தெரிவு செய்வதில் பங்கேற்றல்
2. தேர்தல்களின் போது வாக்குரிமையைப் பயன்படுத்தி சட்ட சபைகளின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தல்
3. அரசியல் அராஜகங்களைச் சட்டம் அனுமதிக்கும் வழிமுறைகளில் எதிர்த்தல். பேச்சு, எழுத்து, எதிர்ப்புப் பேரணி, பகிஷ்கரிப்பு என பல வடிவங்களில் அது அமைய முடியும்.
4. கட்சிகள் மற்றும் தேசிய அரசியல் சக்திகளது செயற்பாடுகளில் பங்கேற்றல்
5. உள்ளூராட்சி மற்றும் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு வேட்பாளராக நிற்றல்.

மேற் கூறிய எந்த ஒரு நடவடிக்கையிலும் பெண்ணின் வகிபாகத்தைப் பிடுங்கி எடுப்பதை நியாயப்படுத்துவதற்கு ஷரீஆவில் எத்தகைய தெளிவான சட்ட வசனங்களும் இல்லை.

எனவே ஆணைப் போலவே பெண்ணும் அரசியல் விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டியவள். சமூகத்தின் எழுச்சிப் பாதையில் அவளும் தனது சக்திக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப பங்களிக்க வேண்டும். விழுமிய அரசியலுக்காகப் பாடுபடும் பெண்ணின் வகிபாகம் ஒருவகையில் ஜிஹாத் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## சகல இனத்தவர்களுக்கும் (07 ஆம் பக்கத் தொடர்)

மாகாண சபைகளில் காணப்படுவதை போன்று மையப்புள்ளியிலும் அதிகாரத்தில் உரிமை வழக்கப்பட வேண்டும். மாகாணப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரண்டாம் சபையொன்று காணப்பட வேண்டும் என இதனாலேயே நாம் சிபாரிசு செய்கிறோம். இதன் மூலம் மாகாணங்களில் உள்ளவர்களுக்கு அரசியல் மையப்புள்ளியில் சட்டம் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இவர்களுக்கு அடிக்கடி முடிவுகளை எடுக்கும் விடயத்தில் பங்கு கொள்ள முடிகின்றது.

- தற்போதைய சூழலில் எமது நாட்டிற்கு புதியதோர் அரசியலமைப்பு மிக முக்கியமான விடயமாக காணப்படுகின்ற போதிலும் அதனை ஏன் பெரும்பாலான மக்கள் எதிர்க்கின்றார்கள்?

அரசாங்கத்தை நிலைகுலையச் செய்வதற்கு ஒரு சில சக்திகள் இந்த விடயத்தை துருப்புச் சீட்டாக பயன்படுத்துகின்றன. இந்த விடயத்தில் சில ஊடகங்களும் மக்களுக்கு பிழையான சித்திரத்தை ஜோடித்து காண்பிக்கின்றன. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தேரர்களும் கூட இந்த அறிக்கையை சரியாக வாசித்துப் பார்த்திருப்பதாக தெரியவில்லை. இந்த விடயத்தை பயன்படுத்தி தேரர்களை சிலர் குழப்பி வருகின்றனர்.

மகாநாயக்க தேரர்கள் இலங்கையில் இல்லாத போது மகாநாயக்க தேரர்கள் அரசியலமைப்புக்கு எதிராக கருத்துத் தெரிவித்தார்கள் என்கின்ற போலிப் பிரச்சாரங்களை முடுக்கிவிட்டார்கள். இத்தகைய செயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு சில ஊடகங்களும் துணைபோயுள்ளன. அரசியலமைப்பு உருவாக்க விடயத்தில் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்துள்ள இத்தருணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சிறந்ததொரு நிலைப்பாட்டில் உள்ளதொரு சந்தர்ப்பத்தில் இந்தப் பணியை இடைவிடாமல் முன்கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

## சிந்தனை... (06 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற முறைக்கு அடுத்தபடியாக எமக்கு உள்ளூராட்சி முறையே இருந்தது. மாகாண சபை முறை அமுலுக்கு வந்ததில் இருந்து மாகாண சபைகளுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை வந்தது. பாராளுமன்றின் சில அதிகாரங்கள் மாகாண சபைக்குக் கைமாறினாலும் பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறையவில்லை. இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் சட்டமும் அதனுடைய அங்கத்தவர்களின் எண்ணிக்கையை இருமடங்காக அதிகரிக்கும் வகையில் திருத்தப்பட்டிருக்கிறது.

நாட்டின் அரசியல் நிர்வாகத்தினரின் அளவு நாட்டு மக்களுடைய விகிதாசாரத்தை விட அதிகரித்திருப்பதோடு, இதற்கான செலவுகளும் நாட்டுக்குப் பொருந்தாத அளவில் அதிகரித்திருக்கின்றன. இந்த நிலையில், உறுப்பினர்களின் எண்ணிக்கையை வரையறுக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யாமல், உறுப்பினர்களின் சம்பளச் செலவை இருமடங்காக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்வது, தெரியாமல் செய்த தொரு தவறாகக் கருத முடியாது. இது நாட்டைப் பற்றிச் சிந்திக்காமல் தமது அரசியல் இலாபத்தை மட்டுமே குறியாக வைத்தே இயற்றப்பட்டிருக்கிறது.

புதிய முறையிலுள்ள அவலட்சணத்தை மாத்தறை மாநகர ஆணையாளர் அழகாக விபரித்திருக்கிறார். தோல்வியுற்றவர்கள் நிராகரிக்கப்படுவதற்குப் பதிலாக வேறுவழியாக உள்நுழைவதற்கான சந்தர்ப்பத்தை புதிய தேர்தல் முறை வழங்குகிறது. சில இடங்களில் ஊழியர்களின் எண்ணிக்கையை விட உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. சில இடங்களில் கூட்டம் நடத்துவதற்கு இடமில்லாத வகையில் உள்ளூராட்சி சபைகள் பெருத்திருக்கின்றன.

இந்த முறையை மாற்றுவதற்கான கோரிக்கையை முன்வைத்தே பொதுமக்கள் இந்தத் தேர்தலை எதிர்கொண்டிருக்க வேண்டும்.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 Peoples Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுற்றுச் சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள இறைவனால் படைக்கப்பட்ட நிலம், நீர், காற்று, விண்வெளி, காடுகள், கடல்கள், விலங்கினங்கள், பறவைகள் போன்ற உயிருள்ள உயிரற்ற பொருட்களின் தொகுப்பாகும். சுருக்கமாகச் சொன்னால் சூழல் என்பது நம்மைச் சுற்றியுள்ள அனைத்துமாகும்.

இயற்கை வளம் என்பது இறைவன் கொடை. தெளிந்த நீரும், பரந்த நிலமும், உயர்ந்த மலையும், அடர்ந்த காடும் சூழலின் பாதுகாப்பு வேலிகளாகும். எனவே சூழல் என்பது மனித நலனுக்காகவும், அவனது தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும், மனிதனுக்கு சேவை புரிவதற்காகவுமே இறைவனால் படைக்கப்பட்டுள்ளது.

1972 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை யினால் உலக சுற்றுச் சூழல் தினம் பிரகடனம் செய்யப்பட்டது. இஸ்லாம் மனிதன் தோன்றிய காலம் தொட்டே சுற்றுச் சூழலுடனான உறவு குறித்தும் அதனை பேணிப் பாதுகாப்பதன் அவசியம் பற்றியும் போதித்துள்ளது.

சுற்றுச் சூழலுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு அன்பும் நட்பும் கருணையும் என்றே இஸ்லாம் வழிகாட்டுகிறது. மனிதன் இயற்கையை வென்றுவிட்டான் என்று கூறுவது கூட சூழலுக்கு அவன் செய்யும் இழுக்காகவே இஸ்லாம் பார்க்கிறது. காரணம் இயற்கையை வென்று வாழுதல் என்பது சுற்றுச் சூழலை எதிரியாய் நோக்குவதாகும். குர்ஆனிய சிந்தனையானது இயற்கை மனிதனின் அன்புக்கு பாத்திரமான நண்பன் என்றே அறிமுகம் செய்கிறது. சுற்றுச் சூழல் மீது அன்பும் பற்றும் வைத்து நேசித்து வாழுமாறே அது பணிக்கிறது.

எனவே சுற்றுச் சூழலைப் பாதுகாப்பது, அதனை பசுமையாக வைத்துக் கொள்வது, சுற்றாடல் சுத்தத்தைப் பேணுவது மனிதன் மீதுள்ள தார்மீகக் கடமையாகும்.

மனித இனத்தின் நீடித்த இருப்புக்கும் சீரான உலக வாழ்வின் நீட்சிக்கும் பரந்த சேவை செய்யும் சுற்றுச் சூழலை பராமரிப்பதும் பாதுகாப்பதும் ஒவ்வொரு மனிதன் மீதுள்ள பொறுப்பாகும். தன்னைச் சுற்றியுள்ள சூழலை பாதிக்கும் வகையில் நடந்து கொள்வது ஒரு குற்றம் என்பதே எமது ஆழ்ந்த நம்பிக்கையாகும்.

சுற்றுச் சூழலை அசுத்தப்படுத்துவது அல்லது நாசப்படுத்துவது பெரும் பாவமாகும். நிழல் தரும் மரங்களை வெட்டுபவனின் தலையை அல்லாஹ் நரக நெருப்பிற்கு இலக்காக்குகிறான் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். எனவே சுற்றுச் சூழலை பாதுகாப்போம். சுகமாய் வாழ வழிவகுப்போம். இயற் கையை காப்போம் இனிதாய் வாழ்வோம். செஞ்சோற்றுக் கடன் தீர்க்க கைகோர்த்து ஒத்துழைப்போம்.

*1. மரம் நடுவோம்*

ஒரு மரத்தை நடுவதென்பது வெறுமனே ஒரு செயல் மாத்திரமல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. மானுடத்தின் மீது மனிதன் கொள்ளும் மிகப் பெரிய கரிசனையின் வெளிப்பாடு.

''நாளை உலகம் அழியப் போகிறது என்று தெரிந்தாலும் உங்கள் கையில் மரக் கன்று இருந்தால் அதை நடுங்கள்'' என நபிகளார் கூறியுள்ளார்கள்.

- வீட்டுத் தோட்டம் அமைப்போம், நச்சு கலவாத உணவை உண்போம்.
- வருடத்திற்கு ஒரு மரம் நடுவோம்.

*2. நீர் வாழ்வின் உயிர் நாடி*

உலகில் உள்ள 700 கோடி மக்களுக்கும் பயன்படுத்த முடியுமான நன்னீர் வளம் 0.007 வீதம் மட்டுமே உள்ளது. பாதுகாப்பான குடிநீர் இன்றி எட்டு செக்கனுக்கு ஒரு குழந்தை உலகில் மரணிக்கிறது.

உலகில் சுமார் 200 கோடி மக்கள் தூய தண்ணீர் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். உலகில் 110 கோடி மக்கள் நீர் பற்றாக் குறை உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.

''தண்ணீரைப் பொறுத்தவரை மனிதர்கள் யாவரும் அதில் பங்காளிகள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே நீரில் அடுத்தவர்களுக்கும் பங்குண்டு. குடிநீர் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகும்.

- ஒவ்வொரு துளி நீரையும் வீண் விரயம் செய்யாமல் காப்போம்.

*3. பொலித்தீன் ஆரோக்கிய வாழ்வின் எதிரி*

பொலித்தீன் பாவனை புற்று நோய், ஆண்மைக் குறைபாடு மற்றும் தீராத கொடிய நோய்களை உருவாக்கும். பிளாஸ்டிக் பாவனை நிலத்தின் வளத்திற்கு எதிரியாகும்.

பிளாஸ்டிக் பொருட்களை நிலத்தில் போடுவது மண்ணில் விஷம் கலப்பதாகும். அன்புக்கு நஞ்சூட்டுவது பாவமன்றோ!

- வீடுகளிலும் அலுவலகங்களிலும் பொலித்தீன் பாவனையை தவிர்ப்போம்
- துணிப்பைகளைப் பயன்படுத்துவோம்
- பிளாஸ்டிக் பாவனையை குறைப்போம்

*4. டெங்கு ஒழிப்புத் திட்டதிற்கு கைகொடுப்போம்*

டெங்கு கொடூரமான ஆட்கொல்லி நோய். எனவே நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்களை சூழலுக்கு சேர்க்காதிருப்போம். அவை சுற்றுச் சூழலுக்கு ஆபத்தானவை.

மக்களுக்கு தீங்கு தரும் பொருட்களை பாதையிலிருந்து அகற்றுவது தர்மமாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். நாமும் நமது சுற்றமும் நோய் நொடியில்லாமல் வாழ சுத்தமான சூழலை நேசிப்போம்.

- வீடுகளிலோ வீதிகளிலோ பொது இடங்களிலோ டெங்கு நுளம்பு பெருகும் பொருட்களை முறையாக அகற்றுவோம்.
- வாரத்துக்கு ஒரு தடவையாவது சுற்றுப் புறச் சூழலை கண்காணிப்போம்.
- மாதாந்தம் ஒரு கூட்டு சிரமதானம் செய்வோம்

*5. குப்பைகளை குறைப்பதற்கு 5R System ஐ கடைப்பிடிப்போம்*

திண்மக் கழிவுகள் காரணமாக சூழல் மாசடைகின்றது. இலங்கை முழுவதிலும் 60-65 வீதமான கழிவுகளே உள்ளூராட்சி மன்றங்களினால் சேகரிக்கப் படுகின்றது. 35 வீதமான கழிவுகள் வீட்டுத் தோட்டங்களிலும் வீதியோரங்களிலுமே சிதறிக் காணப்படு கின்றன.

கழிவுகளை முகாமை செய்ய சிறந்த வழி 5R System ஆகும்.

1. Reduce - உக்காத பொருட்களின் பாவனையைக் குறைப்போம்
2. Reuse - மீள்பயன்பாட்டுக்குப் பழகுவோம்
3. Recycle - மீள்சுழற்சி செயற்பாட்டிற்கு ஒத்துழைப்போம்
4. Refuse - சூழலுக்கு ஆபத்தான பொருட்களைக் கொள்வனவு செய்ய மறுப்போம்.
5. Rethink - விலை கொடுத்து வாங்க முன்னர் மீள்பார்வை செய்வோம்.

*6. கழிவுப் பொருட்களை வகைப்படுத்துவோம்*

குப்பையைத் தூக்கி எறிவதற்கு முன் உக்கும் கழிவு, உக்காத கழிவு என அவற்றைப் பிரித்திடுவோம்.

குப்பை கூழங்களை கண்ட கண்ட இடங்களில் கூட்டெரிப்பதும் சூழலுக்கு செய்யும் துரோகம் என்பதைப் புரிந்து கொள்வோம்.

சூழல் மாசடைவதற்கு காரணமாக அமைவது ஒரு குற்றம். அதன் தீய விளைவுகளை இம்மை மறுமை இரண்டிலும் நிச்சயமாக சுவைப்போம் என்பதை விசுவாசிப்போம்.

- மீள்சுழற்சிக்கு ஒத்துழைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவோம்.

*7. இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்*

தெளிந்த நீரும், பரந்த நிலமும், உயர்ந்த மலையும், அடர்ந்த காடும் இயற்கை அரண்களாகும்

இயற்கை சூழல் என்றும் எப்பொழுதும் பசுமையாக இருப்பதை இஸ்லாம் வலியுறுத்துகிறது. இறந்த பூமியை வளப்படுத்துமாறு இஸ்லாம் மனிதனை வேண்டுகிறது.

மலைகளும், மரங்களும், ஆறுகளும், கடல்களும், பறவைகளும், விலங்குகளும் மனித வாழ்வின் இருப்புக்காக சேவை செய்யும் சக்திகள். அவற்றை காப்பாற்ற வேண்டியது நமது கடமை. மனித இனம் குற்றமற்று நீடித்து வாழ சுற்றுச் சூழலின் மீதும் காதல் கொள்வதாலேயே அது சாத்தியமாகும்.

- காடுகளை பாதுகாக்க உதவுவோம்
- உயிரினங்களின் வாழ்வுக்கு உத்தரவாதமாக இருப்போம்.

**இயற்கையைக் காப்போம்**

**இனிதாக வாழ்வோம்.**

## கொள்கை... (03 ஆம் பக்கத் தொடர்)

வடக்கு, கிழக்குக்கு வெளியில் ந.தே.மு. போட்டியிட்ட மூன்று பிரதேசங்களிலும் அது உறுப்பினர்களை வென்றிருக்கிறது. புத்தளம் (1581), அத்தனகல்ல (1608) பிரதேச சபைகளிலும் கொழும்பு மாநகர சபையிலும் (2771) கணிசமான வாக்குகளை அந்தக் கட்சியினால் பெற முடிந்திருக்கிறது. இது வடக்கு, கிழக்குக்கு வெளியில் விழுமிய அரசியலுக்கான தேவையை சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

தெற்கின் முஸ்லிம் அரசியலைப் பொறுத்தவரை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சில இடங்களில் வெற்றியீட்டினாலும், இனரீதியான கட்சியொன்றின் வருகைக்கு மக்கள் மத்தியில் பலத்த வரவேற்புக் கிடையாது. எனவே தெற்கு முஸ்லிம் மக்களின் விழுமிய அரசியல் தேவையைக் கவனத்தில் கொண்டு வியூகம் அமைப்பது பற்றியும் ந.தே.மு. சிந்திக்க வேண்டும்.

உம்மாவைக் கவனித்துக் கொள்வதற்காகவே திருமணம் முடிக்கிறேன் என்று சொன்னவர்களின் வீடுகளில் எல்லாம் உம்மாவின் நிலைமை பரிதாபமாகவே இருக்கிறது. உம்மாவின் தேவையைக் கவனத்தில் கொண்டு அரசியலுக்கு வரும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் நிலையும் இவ்வாறு அமையக் கூடாது. இலங்கையின் முஸ்லிம்களின் உரிமைக்காகவென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே உருவாக்கப்பட்டது. ஏனையவை அனைத்தும் சந்தர்ப்பவாதங்களை அடியாகக் கொண்டு முளைத்தவைகளே.

ஆனால் இன்று உரிமைக்காக உருவாக்கப்பட்ட கட்சியும் சந்தர்ப்பவாத சரணாகதி அரசியலில் கரைந்து போய் விட்டது. இந்த நிலையில் தான் மக்கள் தமது உரிமைகளுக்கான நம்பிக்கையை ந.தே.மு.க்கு வெளிப்படுத்தி இருக்கிறார்கள். ஊருக்கு உழைக்கக் கூடியவரைத் தெரிந்தெடுக்கும் தேர்தலாக இல்லாவிட்டால் மக்களின் நம்பிக்கை இன்னும் பலமாக வெளிப்பட்டிருக்கலாம். இந்த நம்பிக்கையை ந.தே.மு. உடைத்து விட்டால் இனி மக்களுக்கு நம்புவதற்கு எதுவுமே இருக்கப் போவதில்லை என்பதையும் ந.தே.மு. உணர்ந்து கொள்ள வேண்டும்.

வாரி இறைக்கப்படும் வரப்பிரசாதங்களின் பின்னால் அலைகின்ற சமூகமொன்றை உரிமை அரசியலின் பக்கம் மீட்டெடுப்பது சுலபமான பணியல்ல. அதேபோல கொள்கை அரசியலின் ஆரம்பம் ஒருபோதும் அமர்க்களமானதாக அமைந்ததுமில்லை. அரசியலில் ஆமையும் வெல்லலாம். ஆனால் முயலாமை நிச்சயமாக வெற்றியைக் கொண்டு வர மாட்டாது. எனவே பொறுமையான, நிதானமான அரசியலை ந.தே.மு. கொண்டு செல்லுமானால் நாட்டுக்கான மூன்றாவது சக்தியாக நம்பிக்கையூட்டும் ஒரு கட்சி உருவாகி முன்மாதிரி காட்ட முடியும்.

## பாலியல்... (01 ஆம் பக்கத் தொடர்)

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு குருநாகலில் நடத்தப்பட்ட பாதயாத்திரையின் முடிவில் குருநாகல் பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் நடந்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகமான எச்.ஐ.வி. தொற்றியவர்கள் இருக்கும் பகுதிகளில் இரண்டாம் இடத்தில் வடமேல் (வயம்ப) மாகாணம் இருந்து வந்தது. அது தற்போது மாறி வருகிறது. இருந்தாலும் தற்போது வரை 2600 எச்.ஐ.வி. தொற்றியவர்கள் இங்கு அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். நாட்டில் தற்போது 25 இலட்சம் ஓரினச் சேர்க்கையாளர்கள் இருக்கிறார்கள். பாலியல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் 15-25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தேசிய பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்பு நிலையத்தின் பணிப்பாளர் Dr. லியனகே இது தொடர்பில் கருத்து வெளியிடும் போது நாட்டின் சனத்தொகையில் 7500 பேர் ஓரினச் சேர்க்கையாளர்கள் இருப்பதாகத் தெரிவித்திருந்தார். ஆனால் ரொஸன்னா ப்ளேமர் கல்தேராவின் ஆய்வின் படி இலங்கையின் சனத்தொகையில் 10 வீதம் (20 இலட்சம்) ஓரினச் சேர்க்கையாளர்கள் இருக்கலாம் என்று கருத்து வெளியிட்டுள்ளார். மிகவும் குறைந்த மட்டத்தில் பார்த்தாலும் அது 5 வீதத்துக்குக் குறையாது எனத் தெரிவிக்கும் அவர், அமெரிக்காவிலும் ஐக்கிய ராஜ்ஜியத்திலும் இது 2.5 வீதத்துக்கும் குறைவாகவே உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

Equal Ground நடத்திய ஆய்வில் கொழும்பு, மாத்தறை, நுவரெலியா, காலி மாவட்டங்களில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 19.6 வீதமானோர் ஒருபால் சேர்க்கையில் ஈடுபடுபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம்... (01 ஆம் பக்கத் தொடர்)

கட்சிகள் இதுவரை தெரிவு செய்யப்பட்ட தமது அங்கத்தவர்களின் பெயர்களை உத்தியோகபூர்வமாக வெளியிடாத நிலையில் இது தொடர்பான துல்லியமான தரவுகள் மூலமாக கருத்துக்களை முன்வைக்க முடியாவிட்டாலும் முஸ்லிம் கட்சிகள் பெற்றுக் கொண்டுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம் பிரதிநிதித்துவத்தில் குறைவையே காட்டுகிறது.

தேர்தல் முடிவுகளின் படி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 185 அங்கத்தவர்களையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 159 அங்கத்தவர்களையும் தேசியக் கட்சிகளுடன் இணைந்தும் தனியாகப் போட்டியிட்டும் பெற்றுக் கொண்டுள்ளன. தனியாகப் போட்டியிட்ட தேசிய காங்கிரஸ் 18 அங்கத்தவர்களையும், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி 18 ஆசனங்களையும் பெற்றுள்ளன. தேசியக் கட்சிகளில் [illegible] பார்க்கும் போது 5 வீதத்துக்கும் குறைவான முஸ்லிம் பிரதிநிதித்துவமே இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் கிடைத்திருக்கிறது.

புதிய வட்டாரப் பிரிப்பு முஸ்லிம்களுக்கு அநீதியானது என்பது தெரிந்த போதும் பாராளுமன்றத்தில் உள்ள முஸ்லிம் கட்சிகள் இதற்கு ஆதரவு தெரிவித்திருந்தன. இந்த நிலையில் வெற்றி பெற்ற தமது வேட்பாளர்களுடன் தாருஸ்ஸலாமில் நடத்திய கலந்துரையாடலில் உரையாற்றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், புதிய தேர்தல் முறையில் தனது கட்சிக்குப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை ஜனாதிபதியிடம் தெரிவித்ததாகவும் அவர் அதனை ஏற்றுக் கொண்டதாகவும், மாகாண சபைத் தேர்தலில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு அவர் இணங்கியதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மாகாண எல்லை நிர்ணயம் சம்பந்தமான அறிக்கை இன்று 16.02.2018 வெள்ளிக்கிழமை அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

## அரசாங்கத்தின்.... (01 ஆம் பக்கத் தொடர்)

தயாசிரி ஜயசேகர (பண்டுவஸ்நுவர), மஹிந்த சமரசிங்க (பானந்துறை), விஜித முனி சொய்ஸா (பிபில), எஸ். பி.திஸாநாயக்க (பாத்த ஹேவாஹெட்ட) ஆகியோர் தமது தேர்தல் தொகுதியிலேயே தோல்வி அடைந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களான சஜித் பிரேமதாச (திஸ்ஸமகாராம), மங்கள சமரவீர (மாத்தறை), ராஜித சேனாரத்ன (பேருவல), பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா (களனிய), பீ.ஹரிஸன் (அநுராதபுர மேற்கு), ரஞ்சித் மத்துமபண்டார (மொனராகல) ஆகியோர் தோல்வி அடைந்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர்களான லக்ஷ்மன் யாபா (ஹக்மன), ஹர்ஷ டி சில்வா (கோட்டே), சுஜீவ சேனசிங்ஹ (கடுவெல), அஜித் பி.பெரேரா (பண்டாரகம) ஆகியோர் தமது சொந்தத் தொகுதியில் தோல்வியடைந்துள்ளனர்.

முதலமைச்சர்களில் அதிபரை முழந்தாளிடச் செய்த குற்றச்சாட்டில் சிக்கிய ஊவா முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் ஆகியோரும் தமது தொகுதிகளில் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

## ஜனாதிபதி.... (01 ஆம் பக்கத் தொடர்)

சாய்ந்தமருதுக்கென தனியான பிரதேச சபையொன்றை வேண்டி தோடம்பழச் சின்னத்தில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றியீட்டியதன் பின்னரான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மீள்பார்வை வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாய்ந்தமருதுக்கான தனியான நகர சபை ஒன்றை உருவாக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டும். இதற்கென யார் முயற்சி செய்தாலும் நாங்கள் அவர்களுக்கே எமது ஆதரவினை வழங்கவிருக்கிறோம். வெறும் வாக்குறுதிகளை விட காரியத்தை நடத்திக் காட்டுபவர்களாக அவர்கள் இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

## இலங்கை தேசிய கால்பந்து அணியின் புதிய பயிற்சியாளராக பக்கீர் அலி



இலங்கை அணியின் முன்னாள் வீரர் நிசாம் பக்கீர் அலியை இலங்கை கால்பந்து சம்மேளனம் (FFSL) தேசிய கால்பந்து அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக நியமனம் செய்துள்ளது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் நிறைவேற்று அதிகாரக்குழுவும், ரோஹித்த பெர்னாந்து மற்றும் மேஜர் ஜெனரல் அத்துல கொடிப்பிலி தலைமையிலான தேசிய கால்பந்து அணியின் முகாமைத்துவ குழுவும் மிகவும் கவனமாக கலந்தாலோசித்து எடுத்த முடிவின் பின்னரே, பக்கீர் அலியினை தேசிய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராகத் தேர்ந்தெடுத்துள்ளனர். அந்த வகையில், பக்கீர் அலி அடுத்த இரண்டு வருடங்களுக்கு இலங்கை கால்பந்து அணியின் பயிற்சியாளராக செயற்பட ஒப்பந்தம் செய்யப்படவுள்ளார்.

தேசிய கால்பந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் டட்லி ஸ்டெய்ன்வோல் கடந்த ஆண்டு ஜூலை மாதம் பதவி விலகியதிலிருந்து இலங்கை கால்பந்து அணியானது தலைமை பயிற்சியாளர் ஒருவர் இல்லாமல் இன்றுவரை காணப்படுகின்றது. ஸ்டெய்ன்வோலோடு சேர்த்து தேசிய அணியின் உதவி பயிற்சியாளர் தேவசகாயம் ராஜமணி மற்றும் கோல்காப்பு பயிற்சியாளர் மஹிந்த கலகெதர ஆகியோரும் தங்களது பொறுப்புக்களிலிருந்து அப்போது நீக்கப்பட்டனர்.

மாத்தளையைப் பிறப்பிடமாக கொண்ட பக்கீர் அலி, எப்போதும் திடகாத்திரமாக இருப்பதனால் 'Fitness Freak' என்னும் பெயர் மூலம் அனைவராலும் அழைக்கப்படுகின்ற ஒரு நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலத்தில் கொழும்பு யோர்க் கழகத்துக்காக விளையாடிய இவர், 1976 ஆம் ஆண்டு சுமித் வல்பொலவின் தலைமையின் கீழ் இலங்கை அணியினையும் பிரதிநிதித்துவம் செய்திருந்தார். 1980ஆம் ஆண்டில் இலங்கை கால்பந்து அணியின் தலைவராகவும் செயற்பட்ட பக்கீர் அலி பிற்காலத்தில் தொழில்முறை கால்பந்து விளையாட பங்களாதேஷ் பயணமாகியிருந்தார்.

தன்னுடைய வாழ்க்கையில் கால்பந்து வீரர் என்கிற பாகத்தினை முடித்துக் கொண்ட பக்கீர் அலி, அதன் பின்னர் 2002ஆம் ஆண்டில் ஆசிய கால்பந்து சம்மேளனத்தின் பயிற்சியாளர்களுக்கான B தர சான்றிதழை பெற்றுக் கொண்டு, தொடர்ந்து 2006 ஆம் ஆண்டில் A தர சான்றிதழையும் பெற்றார்.

பின்னர் மாலைதீவில் சில கால்பந்து கழகங்களுக்கு பயிற்சி வழங்கிய பக்கீர் அலி, 2013 ஆம் ஆண்டில் இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (FFSL) துறைசார் இயக்குனராகவும் பொறுப்பு வகித்திருந்தார். எனினும் முகாமைத்துவ சிக்கல்கள் காரணமாக பக்கீர் அலியினால் குறுகிய காலத்திற்கே இலங்கை கால்பந்து சம்மேனத்திற்கு கடமைபுரிய இயலுமாக இருந்தது.

## றோயல் கல்லூரியின் தலைமை கால்பந்து பயிற்றுவிப்பாளராக மொஹமட் ரூமி



கொழும்பு றோயல் கல்லூரி கால்பந்து அணியின் தலைமை பயிற்றுவிப்பாளராக மொஹமட் ரூமி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதன்படி எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு றோயல் கல்லூரியின் கால்பந்து பயிற்றுவிப்பாளராக ரூமி செயற்படவுள்ளார். ரூமி தனது கடமையை இந்த பெப்ரவரி மாதத்தில் இருந்து பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கையின் மிகப் பிரபல்யமான கால்பந்து பயிற்றுவிப்பாளரான ரூமியின் ஆளுகையில் ஸாஹிரா கல்லூரி 2010 ஆம் ஆண்டு வந்திருந்தது. அதனையடுத்து இக்கல்லூரி பலதரப்பட்ட கால்பந்து தொடர்களின் சம்பியனாக மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதில் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான 19 வயதின் கீழான பாடசாலை அணிகளுக்கான கொத்மலே கிண்ணம், அகில இலங்கை ரீதியிலான பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளின் 2011, 2012, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுக்கான சம்பியன் பட்டங்கள், 19 வயதின் கீழான டிவிஷன்-I பாடசாலை கால்பந்து தொடரின் 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் சம்பியன் பட்டங்கள் அடங்குகின்றன. ரூமியினால் பயிற்சி வழங்கப் பட்ட பல பாடசாலை வீரர்கள் தற்போது தேசிய அணிக்காகவும், உள்ளூர் முதல்தர கால்பந்து கழகங்களுக்காகவும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கண்டி அணிக்கான மற்றொரு சம்பியன் பட்டத்துடன் விடைபெற்றார் பாஸில் மரிஜா



நடந்து முடிந்த டயலொக் ரக்பி லீக் தொடரின் இந்தப் பருவ காலத்திற்கான இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான கண்டி விளையாட்டுக் கழகத்திற்கு, ஹெவ்லோக் விளையாட்டுக் கழகம் அதிர்ச்சி தரும் வகையில் செயற்பட்டிருந்த போதிலும், பாஸில் மரிஜாவின் இறுதி நேர அபார ஆட்டத்தோடு கண்டி விளையாட்டுக் கழகம் 30 -28 என வெற்றி பெற்று 2017/18ஆம் பருவத்திற்கான டயலொக் ரக்பி லீக் சம்பியனாக நாமம் சூடியுள்ளது.

கண்டியில் இடம்பெற்ற இந்த தீர்மானமிக்க ஆட்டம் இலங்கை ரக்பி அணியின் முன்னாள் தலைவர் பாஸில் மாரிஜாவின் கழக ரக்பி தொடர்களின் பிரியாவிடைப் போட்டியாகவும் அமைந்திருந்தது. பாஸில் மரிஜா அசத்தலான முறையில் செயற்பட்டு கண்டி அணியினை வெற்றிப் பாதையில் எடுத்துச் சென்றிருந்த காரணத்தினால், போட்டியின் பார்வையாளர்கள் அனைவரும் மாரிஜாவுக்கு மரியாதை செலுத்தியிருந்தனர்.

கண்டி அணி தங்களுடைய பெரும் புள்ளிகள் என அழைக்கப்படும் அனுருத்த வில்வார, புவனேக உடன்கமுவ மற்றும் ஜேசன் திஸாநாயக்க ஆகியோர் இல்லாத நிலையில் இப்போட்டியில் களமிறங்கியிருந்தது. இவர்களின் இழப்பு கண்டி அணியின் முன்களத்தினை பலவீனப்படுத்தியிருந்தது.


## வெளிவந்து விட்டது




தஃவா களம் எதிர்கொள்ளும் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக தஃவாவைச் சுமந்திருக்கும் மாமனிதர்களை இலக்கு வைத்து எழுதப்பட்ட 'இஹ்யாஉ பிக்ஹுத் தஃவா (தஃவா கலை நுட்பத்தை உயிரூட்டுதல்) தொடரின் முதலாவது நூல் 'அல் முன்தலக்' தமிழ் மொழிபெயர்ப்பு.

FOCUS MEDIA (Pvt) Ltd


## அழைப்புப் பாதையில் ஒரு பயணம்

''அல்முன்தலக்'' (பயணம்) என்ற இந்நூல் அறிஞர் முஹம்மத் அஹ்மத் ராஷிதின் மிக முக்கிய நூல்களில் ஒன்று. பிக்ஹுத் தஃவா (பிரச்சார முறையியல்) என்ற நூல் வரிசைத் தொடரின் முதல் நூல். தஃவா என்பது இஸ்லாமிய அறிவியற் கலையாக நவீன காலப் பிரிவில் வளர்ந்து வருகின்றது. அதற்குப் பங்களிப்பு செய்த, செய்து வரும் அறிஞர்கள் பலர். அவர்களில் மிகப் பிரதான மானவர் முஹம்மத் அஹ்மத் ராஷித். இத்துறையில் ஆழ்ந்த புலமையும், ஏறத்தாழ 50 வருட காலகள அனுபவமும் கொண்டவர் அவர்.

இந்நூல் அமைப்பு ரீதியான தஃவாவின் அவசியம் பற்றி விளக்குகிறது. இஸ்லாமிய இயக்கம் என்பதற்கு ஷரீஅத் ரீதியான ஆதாரங்களை முன்வைக்கிறது. மிகுந்த ஆதாரபூர்வமாக அதனை விளக்குகிறது. எடுத்துக் கொள்ளும் அனைத்துக் கருத்துக்களையும் ஆதாரபூர்வமாக முன்வைக்கிறது. ஸஹாபாக் கள் காலம் முதல் இன்றுவரை அமைப்பு ரீதியான தஃவா வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது என விளக்கும் இந்த நூல், நிறைய இமாம்களின் மேற்கோள்களைக் கொண்டு வருகிறது.

இயக்க ரீதியான தஃவாவின் ஆதாரபூர்வத் தன்மையை விளக்குவதோடு தஃவாவின் மிக முக்கிய உண்மைகளையும் இந்நூல் அதன் இறுதிப் பகுதிகளில் தருகிறது. தமிழ் உலகுக்கு இத்துறையில் இதுவரை வெளிந்த நூல்களை விட வித்தியாசமான அமைப்பைப் பெற்ற நூல் எனக் கூறலாம்.

உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)






கலாநிதி நயீம் மொஹிடீன் (நளீமி) யின் 'தொழுகை- மத்ஹபுகளுக்கிடையிலான ஒப்பீட்டாய்வு' நூல் வெளியீட்டு விழா ஸலாமா கேட்போர் கூடத்தில் ஜமாஅத்துஸ் ஸலாமாவின் தலைவர் உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத் தலைமையில் நடைபெற்றது. ஸம் ஸம் பவுன்டேஷன் தலைவர் அஷ்ஷைக் முஃப்தி யூசுப் ஹனீபா பிரதம அதிதியாகவும், ஜாமிஆ நளீமியாவின் இஸ்லாமியக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி அஷ்ஷைக் ஸீ. அய்யூப் அலி, இலங்கை இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் அஷ்ஷைக் மிப்லி நூர் (நளீமி) ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். கலாநிதி பீ.எம்.எம். இர்பான் (நளீமி) நூலாய்வு நிகழ்த்தினார்.


Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org